விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 புரட்டாதி 19 செவ்வாய்க்கிழமை (06.10.2015) தொலைபேசி 222 3378, தொலைநகல் 222 7829 ஒலி 291

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005


இல.144.
பிறவுண் வீதி.
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/- மட்டுமே

# போரின் தாக்கத்தை உணர்ந்த அபிவிருத்தி திட்டங்கள் தேவை

## ஜனாதிபதி முன், வடக்கு முதல்வர் உரை

(கிளிநொச்சி)

நாட்டில் இடம்பெற்ற போரின் தாக்கத்தை உணராது, உணரவிரும்பாது மக்களின் பிரதிநிதிகளைப் புறக்கணித்து அபிவிருத்தித் திட்டங்களை அரசு ஆய்வு செய்யாது முன்னெடுக்க முயற்சிப்பது பாதிக்கப்பட்ட மக்களை மேலும் ஏமாற்றும் செயற்பாடாகவே அமைந்துவிடும் என சுட்டிக்காட்டி வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் ஜனாதிபதி முன் உரையாற்றியுள்ளார். (04ஆம் பக்கம் பார்க்க)



## புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள் 12-ம் திகதி

(கொழும்பு)

கடந்த ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையின் பெறுபேறுகள் எதிர்வரும் 12ஆம் திகதி வெளியிடப்படவுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் டபிள்யூ.எம்.என்.ஜே. புஷ்பகுமார தெரிவித்துள்ளார்.

பெறுபேறுகளை வெளியிடுவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும் ஆணையா 24ஆம் பக்கம் பார்க்க....

## உள்.செயல்முறைக்கு ஜப்பான் ஆதரவு

(டோக்கியோ)

போருடன் தொடர்புடைய விவகாரங்களுக்கு, உள்நாட்டு செயல்முறைகளின் மூலம் தீர்வு காண்பதற்கு இலங்கைக்கு ஜப்பான் ஆதரவளிப்பதாக பிரதமர் செயலகம் தெரி 02ஆம் பக்கம் பார்க்க....

## ஐ.நா. தீர்மானத்துக்கு 8 கட்சிகள் எதிர்ப்பு!

### நாடளாவிய ரீதியில் ஆர்ப்பாட்டங்களை நடத்த முடிவு

(கொழும்பு)

ஜெனிவாவில் நடைபெற்ற ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் 30 ஆவது கூட்டத்தொடரில் நிறைவேற்றப்பட்ட இலங்கை தொடர்பான தீர்மானத்துக்கு எட்டுக் கட்சிகள் கூட்டாக எதிர்ப்பு வெளியிட்டுள்ளன.

அத்துடன் இந்தத் தீர்மானத்துக்கு எதிராக 24ஆம் பக்கம் பார்க்க....

## இலங்கை மீதான தீர்மானம் பொய்யாக இடமளிக்க கூடாது

### த ஹிந்து சுட்டிக்காட்டு

(சென்னை)

ஐக்கிய நாடுகள் மனிதஉரிமை பேரவையில் என்ன எதிர்பார்ப்புகளின் அடிப்படையில் தீர்மானம் வேற்றப்பட்டதோ அந்த எதிர்பார்ப்புகள் பொய்யாவதற்கு இடமளிக்க கூடாது என இந்தியாவின் ஹிந்து நாளிதழ் இலங்கையில் பெரும் எதிர்பார்ப்புகள் என்ற தனது ஆசிரிய தலையங்கத்தில் சுட்டிக்காட்டியுள்ளது.

பொதுமக்கள் மீதான குண்டுத் தாக்குதல் மற்றும் சரணடைந்தவர்கள் 24ஆம் பக்கம் பார்க்க....


## இடியுடன் கூடிய மழை பெய்யும்

(கொழும்பு)

மத்திய, சப்ரகமுவ, மேல் மற்றும் வட மாகாணங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை தொடர்ந்து சில நாட்களுக்கு பெய்யும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது. 24ஆம் பக்கம் பார்க்க....

## விவசாய நிலத்தில் ஓர் அங்குலம் கூட பயிர்ச்செய்கை இன்றி இருக்க முடியாது

### கிளிநொச்சி நிகழ்வில் ஜனாதிபதி அறிவிப்பு




(கிளிநொச்சி)

நாட்டிலுள்ள விவசாயத்துக்கான நிலங்களில் ஓர் அங்குலம் கூட பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படாது இருக்க முடியாது. மீறி இருப்பின் அது குறித்து அரசாங்கமே கேள்வி எழுப்பும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

தேசிய உணவு உற்பத்தி ஊக்குவிப்பு நிகழ்ச்சி திட்டம் நேற்றைய தினம் கிளிநொச்சி மருதநகர் பகுதியில் தொடக்கிவைக்கப்பட்ட போது குறித்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்திருக்கின்றார்.

குறித்த நிகழ 24ஆம் பக்கம் பார்க்க....



கிளிநொச்சி மருதநகர் பகுதியில் நடைபெற்ற தேசிய உணவு உற்பத்தி ஊக்குவிப்பு நிகழ்ச்சி திட்ட நிகழ்வில் நேற்று பிரதம விருந்தினராக கலந்து கொண்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வயலில் இறங்கி இயந்திரத்தின் மூலம் நாற்றுக்களை நாட்டி வைத்தார்.

## மின்கம்பத்துடன் மோதியது மோ.சைக்கிள்

## பொலிஸ் உத்தியோகத்தர் விபத்தில் உயிரிழப்பு!

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிள் மின்கம்பத்தோடு மோதிய விபத்தொன்றில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் நேற்று இரவு எட்டு மணியளவில் கோப்பாய் சந்திக்கருகில் இடம்பெற்றுள்ளது.

இதில் பருத்தித்துறையை சேர்ந்த இருபத்திமூன்று வயதுடைய மணிமாறன் என்பவரே உயிரிழந்தவராவார். 24ஆம் பக்கம் பார்க்க....

## பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளிகள் உள்ளே

(கொழும்பு)

2014 - 2015 கல்வியாண்டுக்காக பல்கலைக்கழக மாணவர்களை உள்வாங்குவதற்கான வெட்டுப்புள்ளிகள் நேற்று வெளியிடப்பட்டுள்ளன. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு இதனை வெளியிட்டுள்ளது.

2014 ஆம் ஆண்டு இடம்பெற்ற உயர்தர பரீட்சை பெறுபேறுகளுக்கு அமைய இந்த வெட்டுப்புள்ளிகள் வெளியிடப்பட்டுள்ளது. (செ)

(23 ஆம் பக்கம் பார்க்க)

## கிளி., முல்லைத்தீவில் 615 ஏக்கர்களில் படையினர் வசமிருந்த காணிகள் ஜனாதிபதியால் மக்களிடம் கையளிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் போருக்குப் பின்னர் கடந்த 6 வருடங்களாக படையினர் தமது பயன்பாட்டுக்காக எடுத்துக் கொண்டிருந்த 615 ஏக்கர் நிலம் நேற்றையதினம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவினால் காணி உரிமையாளர்களிடமே மீள கையளிக்கப்பட்டிருக்கின்றது.

நேற்றையதினம் தேசிய உணவு உற்பத்தி ஊக்குவிப்பு செயற்றிட்டத்தின் தொடக்க நிகழ்வில் கலந்து கொண்டிருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குறித்த காணிகளை மக்களிடம் கையளித்துள்ளார்.

இதன்படி கிளிநொச்சி மாவட்டத்தில் 476 ஏக்கர் நிலமும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 139 ஏக்கர் நிலமுமாக மொத்தமாக 615 ஏக்கர் நிலம் நேற்றைய தினம் மக்களிடம் கையளிக்கப்பட்டிருக்கின்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன,

போர் காலத்தில் படையினரின் பயன்பாட்டுக்காக எடுக்கப்பட்டிருந்த மக்களுடைய நிலங்கள், இன்று (நேற்று) 24ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

மைதானத்தில் இந்திய ரசிகர்கள் ரகளை

# இந்தியாவை வீழ்த்தி தொடரை வென்றது தென்னாபிரிக்கா




தென்னாபிரிக்காவுக்கு எதிரான இரண்டாவது இருபது -20 போட்டியில் இந்தியாவை வீழ்த்தி தென்னாபிரிக்க அணி தொடரை கைப்பற்றியது.

முதல் போட்டியில் இந்தியா தோல்வியடைந்ததால் இந்தபோட்டி இந்தியாவுக்கு வாழ்வா? சாவா போட்டியாக இருந்தது. இதனால் மைதானத்தில் 44 ஆயிரம் ரசிகர்களுக்கு மேல் குவிந்து இருந்தனர்.

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியஅணி தென்னாபிரிக்காவின்அபாரபந்து வீச்சில் 17.2 ஓவர்களில் 92 ரன்னில் சுருண்டது.

இதனால் கோபம் அடைந்த ரசிகர்கள் தங்கள் கையில் இருந்த தண்ணீர் போத்தல்களை மைதானத்தில் தூக்கியெறிந்து ரகளையில் ஈடுபட்டனர். இதனால் ஆட்டம் நிறுத்தப்பட்டது.

தொடர்ந்து மைதானத்தில் இருந்த ரசிகர்களில் பலர் வெளியேறிவிட்டனர். ரகளை செய்த ரசிகளும் வெளியேற்றப்பட்டு தகுந்த பாதுகாப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதனைஅடுத்து 45 நிமிடங்களுக்கு பிறகு ஆட்டம்மீண்டும் ஆரம்பமானது.

இதனையடுத்து 93 என்ற எளிதான இலக்குடன் களமிறங்கிய தென்னாபிரிக்கா 17 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்து வெற்றி இலக்கை எட்டியது.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக தென்னாபிரிக்க அணியின் அல்பி மோர்கல் தெரிவானார். (க)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திருமதி சர்வலோஜினி சசிகுமார்
(ஆசிரியை- மு/ஆனந்தபுரம் அ.த.க. பாடசாலை)

2015.10.06 இன்று பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் கௌரவிப்பு நிகழ்வில் பிரதீபா பிரபா பட்டம் பெறவுள்ளார்.

அவருடைய பணி மேலும் சிறந்தோங்க வாழ்க வாழ்க என வாழ்த்துகின்றோம்.

(C-2384)

வாழ்த்துவோர் :
உரிமையாளர், பணியாளர்கள்
லக்ஷா ரெக்ஸ் புடைவையகம் அன் அழகுச்சோலை
புதுக்குடியிருப்பு சந்தி, புதுக்குடியிருப்பு


## உள்.செயல்முறை...

வித்துள்ளது.

ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர் பியூமியோ கிஷிடாவை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இதன்போது அனைத்துலக சமூகத்தின் நம்பிக்கையை வென்றெடுப்பதற்கான முயற்சிகளை இலங்கை மேற்கொண்டுள்ளதாக ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் நெருங்கிய நண்பன் என்ற வகையில், புதிய நாட்டை உருவாக்க இலங்கைக்கு ஜப்பானிய அரசாங்கம் உதவி வழங்கும்.

இலங்கைப் பிரதமரின் இந்தப் பயணத்தின் மூலம், எமது உறவுகள் மேலும் வலுப்பெறும் என்று நம்புவதாகவும் ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர் கூறியுள்ளார்.(செ-1)


## பகிரங்க ஏல விற்பனை

யாழ்.வலயக்கல்வி அலுவலகத்தினால் பாவிக்கப்பட்ட அலுவலக உபகரணங்கள் 20.10.2015 அன்று செவ்வாய்க்கிழமை மு.ப 11.00 மணிக்கு ஏல விற்பனை செய்யப்படவுள்ளன. மேலதிக விபரங்களுக்கு வலயக்கல்வி அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளவும்.

வலயக்கல்விப் பணிப்பாளர்
வலயக்கல்வி அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

(சி-2386)



## 31ம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
21 - 07 - 1933



மறைவு
06 - 09 - 2015

அமரர் தம்பிஐயா குணநாயகம் [ ராசு ]

[ உரிமையாளர் குமரன் ஸ்ரோர்ஸ் – திருநெல்வேலி ]

அன்புநிறை பண்புவழி வரம்பு தன்னில்
அனைவரதும் மனங்களிலே நிறைந்து நன்றே
நன்மையுறு நெறியினிலே பிள்ளை பேரர்
நம்மவர்கள் உறவினர்கள் சுற்றம் எல்லாம்
இன்பமுற இனியநல்ல சேவை செய்து
இறையடியை அடைந்த எங்கள் தந்தை
துன்பமற பரம்பொருளின் பாதப் பேற்றில்
தூய்மையுடன் நிறைந்திடவே இறைஞ்சுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

86/6, பலாலி வீதி,
திருநெல்வேலி வடக்கு.

(1969)

தகவல்
குடும்பத்தினர்



## நாடக பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பம்

சிறுவர்களுக்கான நாடக பயிற்சி வகுப்புக்கள் எதிர்வரும் விஜயதசமி அன்று ஆரம்பமாகின்றன. இதில் பயிற்சி பெறும் சிறுவர்கள் செயல் திறன் அரங்க இயக்கத்தினால் நடத்தப்படும் நாடகத் திருவிழாக்களில் மேடையேறும் நாடகங்களில் பங்குபெறும் வாய்ப்பை பெறுவார்கள். 04 பிரிவுகளாக இந்த பயிற்சி வகுப்புக்கள் நடைபெற உள்ளன.

**வகுப்பு பிரிவுகள் : தரம் 1 முதல் 2 வரை, தரம் 3 முதல் 5 வரை, தரம் 6 முதல் 8 வரை, தரம் 9 முதல் 10 வரை**

பயிற்சிகள் மற்றும் பதிவுகள் நடைபெறும் இடம்

செயல் திறன் அரங்க இயக்கம்
203/5 கச்சேரி நல்லூர் வீதி, நல்லூர்.
தொடர்புகளுக்கு : 021 221 6061

(சி-2391)





கொக்குவில் இந்துக் கல்லூரி
70வது ஆண்டு சாரணர் நிறைவு 1943-2013
ஜெயக்குமார் கீர்த்திகன் ஞாபகார்த்த

## மண்டப திறப்பு விழா

தலைவர் : திரு.வே.ஞானகாந்தன், அதிபர்
இடம் : கொக்குவில் இந்துக் கல்லூரி
காலம் : 06.10.2015 செவ்வாய்க்கிழமை மு.ப. 11.00 மணி

பிரதம விருந்தினர்
திரு.நா.வேதநாயகன்
அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்

சிறப்பு விருந்தினர்கள்
திரு.அ.பஞ்சலிங்கம்
முன்னாள் அதிபர்

திரு.செ.தேவரஞ்சன்
சாரண மாவட்ட ஆணையாளர், யாழ்ப்பாணம்.

கௌரவ விருந்தினர்
திரு.கோ. வரதராஜமூர்த்தி
பிரதிக் கல்விப்பணிப்பாளர், யாழ்ப்பாணம்

திரு.அ.ஜெயந்திரன்
பழைய மாணவன்
Proprietor (sunjeya Foodland & Guest House), Jaffna.

(C-2390)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், SDC,OSA.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 50 மில். ரூபாய் பெறுமதியான ஹெரோயினுடன் இருவர் கைது

சென்னையிலிருந்து இலங்கைக்கு 50 மில்லியன் ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைப் பொருளை கடத்தி வந்த இரண்டு இலங்கைப் பிரஜைகள் நேற்று முன்தினம் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டனர். கொழும்பைச் சேர்ந்த 60 வயதான பெண்ணும் 45 வயதான ஆண் ஒருவருமே சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருப்பதாக சுங்க திணைக்களப் பேச்சாளர் லெஸ்லி காமினி தெரிவித்தார்.

இவர்களிடமிருந்து 10 பக்கற்றுக்களாக பொதி செய்யப்பட்ட 5 கிலோகிராம் நிறையுடைய ஹெரோயின் மீட்கப்பட்டுள்ளது. சந்தேக நபர்கள் நேற்றுக்காலை 5.05 மணியளவில் யூ.எல். 126 ரக விமானம் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

இவர்களின் நடத்தையில் சந்தேகம் கொண்ட விமான நிலைய போதைப்பொருள் தடுப்புப் பிரிவைச் சேர்ந்த சுங்க அதிகாரிகள் அவர்களின் பொதிகளை சோதனையிட்ட போதே ஹெரோயின் போதைப் பொருட்களை மீட்டனர்.

உணவுச் சுவையூட்டி பக்கெட்டுகளுக்குள் மறைத்து பொதி செய்யப்பட்டே இந்த ஹெரோயின் கொண்டுவரப்பட்டிருந்த போதே சுங்க அதிகாரிகள் மடக்கிப்பிடித்தனர்.

ஒவ்வொன்றும் 500 கிராம் நிறைகொண்ட 10 ஹெரோயின் பக்கற்றுக்கள் இதன் போது மீட்கப்பட்டன. சந்தேக நபர்கள் தொடர்ந்தும் விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருகின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-10)

# கல்லுண்டாயில் கழிவு கொட்ட இடைக்காலத் தடை உத்தரவு

## மல்லாகம் நீதிமன்றம் பிறப்பித்தது

(யாழ்ப்பாணம்)

**யாழ்.கல்லுண்டாய் வெளியில் 3 மாத காலத்துக்கு கழிவுகள் எவையும் கொட்டப் படக்கூடாது என மல்லாகம் நீதவான் நீதி மன்ற நீதிபதி எஸ். சதீஸ்தரன் நேற்றைய தினம் இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பித்துள்ளார்.**

யாழ்.கல்லுண்டாய் வெளிப பகுதியில் கழிவுகள்கொட்டப்படுவதால் சுற்றுச்சூழல் மாசடைவதுடன் அப்பகுதியில் சுகாதார சீர்கேடு ஏற்பட்டு பொதுமக்களுக்கு நோய்த்தாக்கம் ஏற்படுவதாக அப்பகுதி பொதுமக்களால் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைபபாடொன்று கடந்த ஜனவரி மாதமளவில் பதிவுசெய்யப்பட்டது. இதனடிப்படையில் மானிப்பாய் பொலிஸாரினால் கடந்த மார்ச் மாதம் மல்லாகம் நீதவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. தொடர்ச்சியாக நடைபெற்று வந்த இவ்வழக்கு நேற்றைய தினம் தீர்ப்புக்காக மன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

இவ் வழக்கில் எதிர்த்தரப்பினராக யாழ்.மாநகரசபை, மானிப்பாய் பிரதேச சபை, நல்லூர் பிரதேச சபை, வலி.தெற்கு பிரதேச சபை, சுற்றுச்சூழல் அதிகாரசபை, சகாதார பரிசோதகர்கள் உள்ளிட்ட அதிகாரிகள் ஆஜராகியிருந்தனர்.

இதன்போது தீர்பளித்த நீதிபதி கல்லுண்டாய் வெளிப்பகுதியில் சுற்றுச்சூழல் அதிகார சபையின் நியமத்தின் அடிப்படையில் மாத்திரமே இனி கழிவுகள் கொட்டப்பட வேண்டும். கழிவுகள் தரம் பிரிக்கப்பட்டு மீள் சுழற்சி முறையினை பயன்படுத்தி நவீனத்துவ முறையில் கழிவு கொட்டப்படும் நடவடிக்கைகள் உடனடியாக அப்பகுதியல்மேற்கொள்ளப்படவேண்டும்.

அத்துடன் மாநகரசபை உள்ளூராட்சி சபைகள் தவிர்ந்த ஏனைய தனியார் துறையினர் இப் பகுதிக்குள் குப்பைகள்கொட்டக்கூடாது எனவும் உத்தரவிட்டார்.

மேற்படி நடவடிக்கை களை அவதானித்து சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் மன்றிற்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்றும் குறித்த கட்டளையை மீறி செயற்படுபவர்களுக்கு எதிராக நீதிமன்றை அவமதித்ததாக குற்றவியல் நடவடிக்கை முறைக்கோவை பிரிவு 100 இன் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார். இவ்வழக்கு எதிர்வரும் 2016 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 11 ஆம் தக்தி நடவடிக்கைகள் தொடர்பாக பரசீலிப்பதற்கு மன்றில் எடுதத்துக்கொள்ளப்படவுள்ளது. (இ-9)

## வெட்டுக்காயங்களுடன் கொழும்பில் சடலம் மீட்பு

கொழும்பு பொரளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கித்துல்வத்தை கொல்ஃப் விளையாட்டு மைதானத்திற்கு அருகில் ஒருவர் மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டுள்ளார்.

பொரளை பொலிஸார் நேற்றுக்காலை இந்த சடலத்தை மீட்டுள்ளனர். காலை 6.05 அளவில் பொலிஸார் அவசர அழைப்பு தொலைபேசி இலக்கமான 119 இறகு கிடைத்த தகவலை அடுத்து சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு சடலத்தை மீட்டுள்ளனர்.

கொல்ஃப் மைதானத்தில் தொழிலாளியாக பணியாற்றி வந்த சமிந்த என்ற நபரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். கூரிய ஆயுதங்களினால் இவர் வெட்டிக்கொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

எந்த காரணத்திற்காக இந்த நபர் கொலை செய்யப்பட்டார் என்ற தகவல்கள் வெளியாகவில்லை. பொரளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-10)

## அதிபர் தெரிவு போட்டிப்பரீட்சை

(யாழ்ப்பாணம்)

அதிபர் சேவையின் 3 ஆம் வகுப்பிற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சை 2015.10.10 ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெறவுள்ளது.

இதற்குரிய பாடங்களாக கிரகித்தல், உளச்சார்பும்பொது அறிவும் விடய ஆய்வு ஆகியன நடத்தப்படவுள்ளது என்பதைத் தமிழ்மொழி மூல பரீட்சார்த்திகள் கவனத்தில் கொள்ளவும் என யாழ்ப்பாணம் வலயக் கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ)



## இலங்கை, டுபாயிலிருந்து கடத்தப்பட்ட பெருந்தொகை தங்கக்கட்டிகள் சிக்கின

இலங்கை, டுபாயில் இருந்து கடத்தி வரப்பட்ட பெருந்தொகை தங்கக்கட்டிகள்மதுரை விமான நிலையத்தில் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

இதுதொடர்பாக மூவரை கைதுசெய்து இந்திய மத்திய வருவாய் புலனாய்வுத்துறை அதிகாரிகள் விசாரித்து வருகின்றனர். இலங்கை மற்றும் டுபாயில் இருந்து மதுரை விமான நிலையத்திற்கு தங்கம் கடத்தி வரப்படுவதாக, சென்னையில் உள்ள மத்திய வருவாய் புலனாய்வுத் துறை அதிகாரிகளுக்கு நேற்று முன்தினம் இரகசிய தகவல் கிடைத்ததுள்ளது.

இதையடுத்து,நேற்று முந்தினம் பிற்பகல் 03.30 அளவில் இலங்கை அரசுக்கு சொந்தமான மிகின்லங்கா விமானம் கொழும்பில் இருந்து மதுரை விமானநிலையம் சென்றுள்ளது. வருவாய் புலனாய்வுத்துறை துணை இயக்குநர் பாரிவள்ளல் தலைமையில் அதிகாரிகள் குறித்த விமானத்தில் தேடுதல் வேட்டை நடத்தினர்.

இதில், விமான இருக்கையின் கீழ்ப்பகுதி மற்றும் பயணிகள் பெட்டிகள் வைக்கும் பகுதிகளில் ஏராளமான தங்க பிஸ்கட் மற்றும் தங்கக்கட்டிகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டன. இவற்றை யார் கடத்தி வந்தார்கள் என்ற தகவல் தெரியவில்லை.

பயணிகள் பட்டியலை வைத்து அதிகாரிகள் விசாரிக்கின்றனர். இதேபோல, டுபாயில் இருந்து வந்த தனியார் விமானத்தையும் அதிகாரிகள் குழுவினர் சோதனையிட்டனர். இந்த விமானத்திலும் ஏராளமான அளவுக்கு தங்கக்கட்டிகள் சிக்கின, மீட்கப்பட்ட மொத்த தங்கத்தின் நிறை 31.75 கிலோ கிராம் என தமிழக ஊடகச் செய்திகள் குறிப்பிட்டுள்ளன.

இந்த விமானத்தில் சந்தேகப்படும்படி வந்த மூவரை கைது செய்து விசாரித்து வருகின்றனர். இவர்கள் யார் என்பது குறித்த தகவலை அதிகாரிகள் தெரிவிக்கவில்லை.

மதுரை விமான நிலையத்தில் முதல்முறையாக ஒரே நாளில் இந்த அளவுக்கு தங்கக்கட்டிகள் சிக்கியது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (இ-10)

## கொழும்பு மாநகரில் 380 யாசகர்கள்

கொழும்பு மாநகரில் 380 யாசகர்கள் இருப்பதாக மதிப்பீடு ஒன்றின் மூலம் தெரியவந்துள் ளதாக மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் சம்பிக ரணவக்க தெரிவித் துள்ளார்.

இவ்வாறான யாசகர்கள் மற்றும் கொழும்பு மாநகரில் வறுமையில் வாழும் குடும்பங்களுக்கு புனர்வாழ்வளிக்கும் வேலைத்திட்டமொன்றை முன்னெடுத்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித் துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்திரு ப்பதாவது,

கொழும்பு மாநகரில் மட்டும் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டின் மூலம் 380 யாசகர்கள் உள்ளதாக அடையாளம் காணப்பட்டுள்ளது. இவ் வாறு அடையாளம் காணப்பட்ட யாசகர்களின் விபரப்பட்டியல் தயாரிக்கப்படவுள்ளது. இவர்களில் சிலரை அரச செலவில் பராமரிப்பதற்கும் ஒரு சிலருக்கு தொழிற்பயிற்சிகளை வழங்குவதற்கும் நடவடிக்கை கள் மேற்கொள்ளப்படவுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-10)

# அமைதியான யாழ்ப்பாணத்தை உருவாக்க முயற்சி

## யாழ்.பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

சட்டவிரோத செயல்களற்ற அமைதியான யாழ்ப்பாணத்தை உருவாக்கவே தாம் முயற்சித்து வருவதாக யாழ். பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜே. வூட்லர் தெரிவித்தார்.

யாழ்.புனித மரியாள் வித்தியாலயத்தில்நேற்றையதினம் நடைபெற்ற மாணவர்களுக்கும் பொலிஸாருக்குமிடையிலான கலந்துரையாடலின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்போது யாழ்ப்பாணத்தில் பல்வேறுபட்ட குற்றச் செயல்கள் நடைபெற்ற வண்ணமுள்ளன. அவற்றை பொலிஸாராகிய நாமும் கட்டுப்படுத்தி வருகின்றோம். இதில் ஈடுபடுபவர்களும் கைது செய்யப்பட்டு நீதிமன்றங்களிலும் முற்படுத்தப்பட்டு வருகின்றனர்.

மாணவர்கள் பாடசாலை முடிவடைந்ததும் தேவையற்ற விதத்தில் வீதிகளில் நிற்காமல் வீடுகளுக்குச் செல்ல வேண்டும்.

தேவையற்ற விதத்தில் வீதிகளில் நடமாடுபவர்கள் கைது செய்யப்பட்டால் அவர்களுக்கு எவ்வித மன்னிப்பும் வழங்கப்படாமல் உடனடியாக சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவர்.

பாடசாலையில் கற்பித்த நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற ஆசிரியர்கள் தனியே கற்பித்தல் நடவடிக்கைகளில் மாத்திரம் ஈடுபடாமல் மாணவர்கள் மீதும் கவனம் செலுத்த வேண்டும்.

பாடசாலை வருகின்ற மாணவர்களது நடவடிக்கைகளில் சந்தேகமேதும் ஏற்பட்டால் உடனடியாக ஆசிரியர்கள் பொலிஸாருக்கு தெரியப்படுத்த வேண்டும்.

இவ்வாறு தெரியப்படுத்தப்படாமல் மாணவர்கள் குற்றச் செயல்களில் ஈடுபட்டு பொலிஸாரினால் கைது செய்யப்படும் நிலைக்கு சென்றால் இவர்களது எதிர்காலம் பாதிக்கப்படும். குறிப்பாக 18 தொடக்கம் 25 வயதுடைய இளைஞர்களே தற்போது நடைபெறுகின்ற குற்றச் செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஆகவே இவ்வயதுடையோரை பெற்றோர்களும் ஆசிரியர்களும் மிகவும் அவதானமாக பார்த்துக்கொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | |
|---|---|---|---|---|---|
| PROJECT MANAGEMENT | 1.3566 | 1.4066 | 1.1642 | 1.2123 | 1.4400 |
| PUBLIC MANAGEMENT (SPECIAL) | 1.6746 | 1.7635 | 1.6877 | 1.7688 | 1.7771 |
| QUANTITY SURVEYING | 1.8023 | 1.0985 | 0.4784 | 1.5892 | 1.4997 |
| RADIOGRAPHY | 1.6148 | 1.2697 | 1.0241 | 1.2769 | 1.0921 |
| SCIENCE & TECHNOLOGY # | 1.0827 | 0.4199 | NQC | 0.2093 | 0.2573 |
| SIDDHA MEDICINE | 0.8482 | 0.7353 | 0.7989 | 0.5453 | 0.7387 |
| SOFTWARE ENGINEERING | 1.7639 | 0.7472 | 0.9512 | 1.2193 | 1.5035 |
| SPEECH & HEARING SCIENCES | 1.3585 | 1.3487 | 1.0888 | 1.2110 | 1.3311 |
| SPORTS SCIENCE & MANAGEMENT # | 0.2458 | NQC | NQC | NQC | -0.2693 |
| STATISTICS & OPERATIONS RESEARCH | 1.5434 | 0.3369 | 0.3735 | 0.9514 | 1.1922 |
| SURVEYING SCIENCE | 1.5624 | 0.4262 | 0.5358 | 0.9639 | 1.4649 |
| TEA TECHNOLOGY & VALUE ADDITION # | 0.8866 | NQC | NQC | -0.4272 | 0.3376 |
| TOURISM & HOSPITALITY MANAGEMENT | 1.3413 | 1.1709 | 1.1496 | 1.2113 | 1.4713 |
| TOWN & COUNTRY PLANNING | 1.7212 | 1.1969 | 1.1082 | 1.2024 | 1.3301 |
| TRANSLATION STUDIES # (KELANIYA & SABARAGAMUWA) | NQC | NQC | NQC | NQC | NQC |
| TRANSLATION STUDIES # (UNIVERSITY OF JAFFNA) | 1.3257 | 1.3793 | 0.9516 | 1.1521 | 1.2764 |
| TRANSPORT & LOGISTICS MANAGEMENT | 1.7252 | 0.5607 | 0.5203 | 1.0000 | 1.4026 |
| UNANI MEDICINE & SURGERY | 1.3370 | 1.1611 | 0.1943 | 0.4068 | 0.7482 |
| VETERINARY SCIENCE | 1.7831 | 1.4268 | 1.1029 | 1.6498 | 1.7411 |
| VISUAL & TECHNOLOGICAL ARTS # (SWAMI VIPULANANDA INSTITUTE) | 0.2347 | NQC | -0.3488 | NQC | 1.0134 |
| VISUAL ARTS # (UNIVERSITY OF THE VISUAL & PERFORMING ARTS) | NQC | NQC | NQC | NQC | NQC |

# போரின் தாக்க...

மைத்திரி ஆட்சி - நிலையான நாடு கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்ட "உணவுப் பாதுகாப்பும் நிலையான விவசாயமும்" என்ற எண்ணக் கருவை நடை முறைப்படுத்தும் உணவு உற்பத்தி தேசிய வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தும் ஆரம்ப நிகழ்வு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் கிளிநொச்சி இரணைமடுக் குளத்துக்கு அருகில் நேற்று காலை 10 மணிக்கு ஆரம்பமானது.

இதில் வரவேற்புரையை நிகழ்த்திய வடக்கு முதல்வர் தனது உரையின் ஒருபகுதியில் குறிப்பிடுகையில்,

மாண்புமிகு ஜனாதிபதி அவர்களே, கௌரவ அமைச்சர்களே, அலுவலர்களே, மற்றும் இங்குள்ள சகோதர சகோதரிகளே இந்த நேரத்தில் உங்களிடம் மிகவும் அன்புடனும் பண்புடனும் மக்கள் எமக்குத் தந்த அதிகாரத்துடனும் உங்களுக்குச் சில விடயங்களைக் கூற விளைகின்றேன்.

இதுவரை காலமும் எம்மக்களின் தேவைகள் பற்றிய ஒரு முழுமையான மதிப்பீடு, சகல மட்டத்திலும், சர்வதேச தொண்டு நிறுவனங்களின் உதவியுடன் செய்யப்படவில்லை.

2003-ம் ஆண்டில் இத்தகையதொரு மதிப்பீடு நடைபெற்றது. உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி போன்றவற்றின் உதவியுடன் ஐக்கிய நாடுகள் நிறுவனம் இதைச் செய்தது. ஆனால் அதன்பின் நடைபெறவில்லை. இது நடைபெற வேண்டும். நாம் அண்மையில் ஐக்கிய நாடுகளிடம் கேட்டதோ சகல துறை சகல மட்டத் தேவை பற்றிய ஆய்வறிக்கை. எமக்குக் கிடைத்ததோ மனித நல ஆய்வறிக்கை மட்டுமே. அதுவும் எம்மக்களின் சகஜ வாழ்வுக்கு முட்டுக்கட்டையாக இருக்கும் காரணிகள் பல திடமாக அதில் ஆராயப்படவில்லை.

எமது காணிகள் மற்றோரின் வசம் உரியவர்கள் உட்செல்ல முடியாத நிலை வாழ்வாதாரங்கள் வழங்காத நிலை. போருக்குப் பின்னரான விரக்தி நிலை என்பன அதில் ஆராயப்படவில்லை. சமூகத்தில் போரின் தாக்கங்களை புரிந்து கொள்ள நாம் எத்தனிக்கவில்லை. வறுமை நிலை போக்க வழிவகைகள் ஆராயப்படவில்லை. மக்கள் பிரதிநிதிகளுடன் சேர்ந்து மக்கள் தேவைகளை ஆராய முற்படவில்லை. இது யுத்தம் முடிவடைந்த உடனேயே நடைபெற்றிருக்க வேண்டும்.

அதற்குப் பதிலாக மேலிருந்து தமக்கு உகந்ததைத் தரவே மத்திய அரசாங்கம் விரும்புகின்றது. கீழ் மட்டத்தில் மக்களிடம் இருந்து எங்கள் தேவைகளை அறிந்துணர்ந்து செயல்பட விரும்பவில்லை. மக்கள் பிரதிநிதிகளைப் புறக்கணித்தே மக்கள் சேவையில் ஈடுபட மத்திய அரசு விரும்புகின்றது.

2003-ம் ஆண்டில் நடைபெற்றது போல முழுமையான தேவைகள் சம்பந்தமான ஆய்வறிக்கைகளைப் பெற்று மாகாண அபிவிருத்திக்கான மேன்மைத் திட்டம் ஒன்றை உருவாக்கி மக்களின் கருத்துக்களைச் செவிமடுத்து அவற்றை நடைமுறைப்படுத்த விளைந்தால் நாம் அதற்கு ஒரு போதும் தடையாக இருக்க மாட்டோம். மாறாக எமது தற்போதைய நிலையை அறிய விரும்பாமல் எமது பாதிப்புக்களை பல மட்டங்களிலும் ஆய்வு செய்ய எத்தனிக்காமல், முழுமையான முன்னெடுப்புகளை முடுக்கிவிட மனம் இல்லாமல், மனித தேவைகளின் ஒரு அங்கத்தை மட்டும் வலியுறுத்தி இந்த நிகழ்வு நடைபெறுவது எமக்கு ஏமாற்றத்தை அளிக்கின்றது.

ஆனால் இதனைச் செய்ய முனைபவர் எமது மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர் என்பது எமக்கு மன மகிழ்வைத் தருகின்றது. மாண்புமிகு ஜனாதிபதி அவர்கள் விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர். எம் விவசாயிகளுக்கு அது ஒரு மகிழ்வூட்டுஞ் செய்தி. எதேச்சாதிகாரத்தை எதிர்த்துப் போராடி ஜனநாயகத்துக்கு வழிவகுத்தவர். அந்த விதத்தில் எமது தமிழ் பேசும் மக்களின் அன்பையும் மதிப்பையும் பெற்றவர்.

ஆனால் அவர் இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னர் எமது பெண் கவிஞர் ஔவையார் கூறிய கூற்றை ஆய்ந்தறிந்து கொள்ள முனைய வேண்டும். ஔவையார் கூறினார் .

வரப்புயர நீர் உயரும்
நீர் உயர நெல் உயரும்
நெல் உயர குடி உயரும்
குடி உயர கோன் உயர்வான்
என்று.

இரணைமடு போன்ற குளங்களின் வரம்புகளை உயர்த்தினால்தான் அதில் உள்ள நீர்மட்டம் உயரும். தொடர்ந்து போதிய நீர் விடப்பட்டால் வேளாண்மை செய்பவர்களின் நெற்கதிர்கள் உயர்ந்து வளர்வன.

நெற் பயிர் வளர்ந்தால் மக்கள் மகிழ்வடைவார்கள். அதன் பின் மக்களின் உயர்வால், அவர்களின் மகிழ்வான வாழ்க்கையால், அரசனானவன் உயர்வான். மக்களை மகிழ்வுடன் வாழ வழி அமைத்தால்தான் மன்னன் கீர்த்தி பெறுவான் என்று ஔவையார் சொல்லி வைத்தார் என முதலமைச்சர் தெரிவித்தார். (செ-11)


# வட மாகாண சபை உறுப்பினராக சத்தியப்பிரமாணம்




வட மாகாண சபை உறுப்பினராக அகிலதாஸ் சிவக்கொழுந்து அவர்கள் அகில இலங்கை சமாதான நீதவானும் பிரபல தொழிலதிபருமான சதாசிவம் இராமநாதன் அவர்கள் முன்னிலையில் நேற்று (05.10.2015) திங்கட்கிழமை யாழ்ப்பாணம் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி காரியாலயத்தில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

80 A, கோவில் வீதி,
நல்லூர்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி
காரியாலயம்.

(1970)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





கைதடி கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் ஏற்பாட்டில் கைதடியூர் வேதநாயகம் தபேந்திரனின் யாழ்ப்பாண நினைவுகள் -2 நூலின் அறிமுகவிழா நேற்று முன்தினம் பிற்பகல் நடைபெற்றது.

## ஆசிரியர் புகழ்மாலை இறுவெட்டு வெளியீட்டுவிழா சாவகச்சேரியில்

தென்மராட்சி **அன்பாசன்** எனும் ஆசிரியர் புகழ்மாலை இறுவெட்டு வெளியீடு இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணிக்கு யாழ். சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் அருணாசலம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண மேலதிக மாகாணப் பணிப்பாளர் முத்து இராதா கிருஷ்ணன் கலந்து கொள்வதுடன் கௌரவ விருந்தினராக வடக்கு மாகாண முன்னாள் மாகாணக் கல்விப்பணிப்பாளர் பவிக்னேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார். இதன்போது வரவேற்புரையினை தென்மராட்சி பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி. சிவத்திரை சிவநாதன் வழங்குவதுடன் தலைமையுரையினை தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் வழங்கவுள்ளார்.

இறுவெட்டிற்கான வெளியீட்டுரையினை சங்கீத வித்துவான் பொன்.ஸ்ரீ. வாமதேவன் வழங்குவதுடன் நயப்புரையினை வடக்கு மாகாண மேலதிக மாகாணப்பணிப்பாளர் முத்து இராதா கிருஷ்ணனும், ஏற்புரையினை செ. ரமணாவும் வழங்கவுள்ளனர். அன்பாசன் இறுவெட்டின், பாடல் வரிகள் - செ. றமணா, மெட்டு-சங்கீத வித்துவான் பொன் ஸ்ரீ. வாமதேவன், இசை-சி.சுதர்சன், பாடியவர்-ஜே. மதுசிகன், உடன் பாடியவர்கள்-ஜே.கஜேந்திரா, கே.கஜனி, எஸ். சாகரா ஆகியோர் பங்காற்றியுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ-5)


ஓம்
கிளிநொச்சி மகாதேவ ஆச்சிரமம்
ஜெயந்தி நகர், கிளிநொச்சி

### தேவாரப் பண்ணிசை வகுப்பு

மகாதேவ ஆச்சிரமத்தலைவர் ஞானசிரோன்மணி ஸ்ரீமத் கணேசானந்த மகாதேவ சுவாமிகள் தலைமையில் தேவார பண்ணிசை வகுப்பு தேவார இசைமணி கு.இராமச்சந்திரன் ஓதுவார். (திருவாதவூர், மதுரை) அவர்களால் 08.10.2015 வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு ஆச்சிரம மண்டபத்தில் ஆரம்பமாகும். ஆர்வமுள்ள சிறார்கள் பங்கு பற்றலாம்.

அறங்காவலர் சபை,
மகாதேவ ஆச்சிரமம்.
(1963)



## அறிவித்தல்

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை மானிப்பாய்,உப அலுவலகம் ஆனைக்கோட்டை, ஆதனப் பெயர் மாற்றம், வட்டாரம்-04, புதிய இலக்கம் 101, சாவற்கட்டு வீதி, கிராம அலுவலர் பிரிவு-ஜே/131 சாவற்கட்டு

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட மானிப்பாய் கிராம உப அலுவலகம் வட்டாரம்-04 சாவற்கட்டு வீதியில் புதிய ஆதனம் பதியப்படுகின்றது. யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் தென்மேற்கு பகுதி மானிப்பாய் கோவிற்பற்று சுதுமலை இறை "கவடுகோலி" நிலப்பரப்பு 00 குளி 13.916 கொண்ட இவ்வாதனம் சுதுமலை தெற்கு சாவற்கட்டைச் சேர்ந்த சரவணமுத்து பெண் பார்வதி ஆகிய இவர்களால் நன்கொடை உறுதி மூலம் அதேயிடத்தைச் சேர்ந்த சரவணமுத்து மகள் நிர்மலாவிற்கு குறித்த ஆதனமானது பிரசித்த நொத்தாரிசு திரு.நடராஜா விஸ்வலிங்கம் முகதாவில் நிறைவேறிய 1711 ஆம் இலக்க 1999.10.12 ஆம் திகதிய நன்கொடை உறுதி மூலம் தமக்கு சொந்தமென தெரியப்படுத்தி எமது (மானிப்பாய்) கிராம உப அலுவலக (ஆனைக்கோட்டை) ஆதனப்பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். "கவடுகோலி" நிலப்பரப்பு 00 குளி 13.916 கொண்ட குறித்த ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 14 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது சரவணமுத்து மகள் நிர்மலா என்பவர் பெயருக்கு மேற்குறித்த ஆதனத்தினை பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை அறியத்தருகின்றேன்.

செயலாளர்
வலிகாமம் தென்மேற்கு பிரதேச்சபை,
மானிப்பாய். (சி-2387)



## கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 08 - 10 - 1966



மறைவு 02 - 10 - 2015

அமரர். ரோகான் சன்ஜே ராஜ் J.P.
(பிரதம மதுவரிப் பரிசோதகர், பொறுப்பதிகாரி, மதுவரி நிலையம், கிளிநொச்சி)

எல்லா மனங்களும் இனிக்கப் பழகி
அன்புடனும் பண்புடனும் வாழ்ந்து
இன்முகம் காட்டி நேசமாய்ப் பழகி
சிரித்த முகத்துடன் என்றும் நல்லவராய்
இன்சொல் பேசி மகிழ்ந்தீரே!
இவ்வுலகில் மங்கா ஒளியாகத் திகழ்ந்த நீர்
பட்டெனப் பாரினில் படுத்துறங்கிச்
சட்டென கண்மூடி எம்மை விட்டு
விண்ணுலகம் சென்றீரோ!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வடமாகாண மதுவரி உத்தியோகத்தர்கள்
(1975)


## ராசி பலன்

06.10.2015
(புரட்டாதி 19, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 5.58 மணிக்கு
நவமி முன்னிரவு 8.21 மணிவரை
புனர்பூசம் பிற்பகல் 2.23 மணிவரை
இராகுகாலம் 3.02-4.32 மணிவரை
சுபநேரம் 10.32-12.02 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| கேது | | சந் | |
| | கிரகநிலை சந்திராஷ்டமம் கேட்டை, மூலம் காலை 8.16இற்கு கட-சந் | | |
| | | | குரு, சுக் செவ் |
| | சனி | | சூரி, புத ராகு |

**மேடம்** சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, கல்வி நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**இடபம்** உடல் நலனில் கொஞ்சம் அக்கறை தேவை, உடன் பிறப்புக்கள் மூலம் உள்ளம் மகிழும் தகவல்கள் வந்து சேரலாம், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும்.

**மிதுனம்** சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும், குடும்பத்தில் சந்தோசம் தரும் செய்திகள் வந்து சேரலாம், தொழிலில் உயரதிகாரிகளின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள்.

**கடகம்** விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள், பயணங்களால் கையிருப்பு கரையலாம், விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**சிம்மம்** கொள்கைப்பிடிப்பை கொஞ்சம் தளர்த்தும் சூழ்நிலை உருவாகும், உறவினர்களைக் காண பயணமொன்றை மேற்கொள்வீர்கள், சயனசுகக் குறைவான நாள்.

**கன்னி** இளைய சகோதர வழியில் இனிய சம்பவமொன்று நடைபெறும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், செய் தொழில் மேன்மையுண்டு, குடும்ப மகிழ்ச்சி கூடும்.

**துலாம்** குடும்பத்தினர்களின் ஒத்துழைப்பால் தொழில் முன்னேற்றம் காண்பீர்கள், முத்தான வாய்ப்புக்கள் இல்லம் வந்து சேரலாம், பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், உற்சாகமான நாள்.

**விருச்சிகம்** சுறுசுறுப்புடன் செயற்படுவீர்கள், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், திடீர் பயணங்கள் இடம்பெறலாம்.

**தனுசு** எதையும் சிந்தித்து செயற்படுத்த வேண்டிய நாள், தொழில் போட்டிகள் அதிகரிக்கலாம், அலைச்சல்கள் சற்று கூடும், சிலர் மீது காரணமில்லாமல் கோபப்படுவீர்கள்.


**மகரம்** நண்பர்களால் வளர்ச்சி கூடும் நாள், தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைப்பதற்கான வாய்ப்புண்டு, புதிய பொருட் சேர்க்கையுண்டு, குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.


**கும்பம்** மறைமுகப்போட்டிகள் மாறும், ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுவீர்கள், பாக்கிகள் வசூலாகி பரவசப்படுத்தும் நாள், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**மீனம்** தொலைபேசி வழியில் பொன்னான தகவல்கள் வந்து சேரலாம், பெரிய மனிதர்களின் தொடர்புகள் அதிகரிக்கும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், பிள்ளைகளால் பெருமைகள் வந்து சேரலாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண தண்டனையை வழங்கக்கோரி யாழிலிருந்து பாதயாத்திரை ஆரம்பம்







(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு மாணவி வித்தியா கொட்டதெனியாவை சேர்ந்த சிறுமி சேயா ஆகியோர் பாலியல் துன்புறுத்தலின் பின் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்தும் குற்றவாளிகளுக்கு எதிராக மரணதண்டனை நிறைவேற்றக் கோரியும் இலங்கை போக்குவரத்து சபையின் வடமாகாண ஊழியர்களால் யாழில் இருநது கொழும்பு வரையான பாதயாத்திரை யாழ். மத்திய பேருந்து நிலையத்தில் இருந்து நேற்றைய தினம் ஆரம்பமாகியது

யாழ் மத்திய பேருந்து நிலையத்தில் இருந்து நேற்று காலை 8 மணியளவில் ஆரம்பமாகிய இப் பாத யாத்திரையில் இ. போ. சபையின் பிராந்திய செயலாற்று அத்தியட்சகர் உபாலி, விசா ரணை அதிகாரி எஸ். சத்தியேஸ்வரன், நிர்வாக உத்தியோகத்தர் கே. யோகராஜா, தொழில் சங்கத்தலைவர் கே.புவி, பிராந்திய கணக்காளர்களான க.உமாசுதன், குணசீலன், திருமதி ஜெயராஜன், வடக்கு பொறியியலாளர் ச.பாஸ்கரன் மற்றும் புங்குடுதீவு மாணவி வித்தியாவின் தாயார் உட்பட 28 பேர் கலந்து கொண்டு ஆரம்பித்து வைத்தனர்.

இவர்களுடைய பாத யாத்திரையில் யாழில் இருந்து பளை வரை 53 பேர் கலந்துகொண்டுள்ளனர்.

ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு குற்றவாளிகளுக்கு எதிராக மரணதண்டனை நிறைவேற்றக்கோரிய மகஜர் ஒன்றினையும் கையளிக்கவுள்ளதாக 'ஏற்பாட்டாளரும் யாழ். சாலை முகாமையாளருமான செ.குலபாலசெல்வம் மேலும் தெரிவித்தார்.(இ-9)

## வெற்றியீட்டியோர் விபரம் வெளியிடப்பட்டது

(கரணவாய்)

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு கரவெட்டி பிரதேச செயலகத்தினால் கரவெட்டி கோட்டத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்ட போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டியோர் விபரம் கரவெட்டி கோட்டக்கல்விப் பணிப்பாளரால் வெளியிடப்பட்டுள்ளது. முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விபரம் வருமாறு,

**கவிதை**

**கீழ்ப்பிரிவு**

வி.திருமகள் (யாழ். வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), வ.ஜெயதர்சி (யாழ். வதிரி திரு இருதயக் கல்லூரி), உ.ஆர்நிகன் (யாழ். உடுப்பிட்டி அ.மி. கல்லூரி)

**மத்திய பிரிவு**

ர.கீர்த்திகா (யாழ். வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), நா.சுமாலினி(யாழ்/அல்வாய் சின்னத்தம்பி வித்தி),சி.லக்ஷிதா (யாழ்.ஞானசாரியார் கல்லூரி)

**மேற்பிரிவு**

ந.காயத்திரி (யாழ்.வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), ச.சங்கவி(யாழ்.நெல்லியடி மத்திய கல்லூரி),இ.சுபாசினி (யாழ்.உடுப்பிட்டி அ.மி.கல்லூரி)

**கட்டுரை**

**ஆரம்பப்பிரிவு**

ர.சங்கீர்த்தனா (யாழ். உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), ர.திவ்யாஞ்சன் (யாழ். உடுப்பிட்டி அ.மி.கல்லூரி), ர.ஆரணி (யாழ்.ஞானசாரியார் கல்லூரி)

**கீழ்ப்பிரிவு**

ஜெ.விதுஷிகா (யாழ். வடமராட்சி மத்திய கல்லூரி), ந.கஜேந்திரா (யாழ்.கரணவாய் பொன்னம்பல வித்தியாலயம்), ர.சங்கவி (யாழ். நெல்லியடி மத்திய கல்லூரி)

**மத்திய பிரிவு**

ஆ.நிருத்திகா (யாழ். கரணவாய் பொன்னம்பல வித்தியாலயம்), சி.திலக்ஷனா (யாழ். வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி,பி.கேதாரணி (யாழ். நெல்லியடி மத்திய கல்லூரி), வி.அருள்ராஜ் (யாழ். கரணவாய் மகா வித்தியாலயம்)

**மேற்பிரிவு**

ச.வசந்தனா (யாழ். வடமராட்சி மத்திய கல்லூரி) உ.நிருந்தா (யாழ்.உடுப்பிட்டி அ.மி. கல்லூரி), வ.பிரியங்கா (யாழ். ஞானசாரியார் கல்லூரி)

**பேச்சு–ஆரம்பப்பிரிவு**

வி.அபிஷா (யாழ். துன்னாலை காசிநாதர் வித்தியாலயம்),கே.திவானி (யாழ். இமையாணன் அ.த.க.பாடசாலை), க.கிருசிகன்(யா/கரணவாய் மணியகாரன் தோட்டம் அ.த.க.பா.),கு.தட்சாயினி(யாழ். நெல்லியடி மெ.மி.த.க.பா.)

**கீழ்ப்பிரிவு**

மெ.மென்சிகா(யாழ். உடுப்பிட்டி மகளிர் கல்லூரி),பி.துசிகரன் (யாழ்.நெல்லியடி மத்திய கல்லூரி),வி.கஸ்தூரி (யாழ். கரணவாய்மகாவித்தியாலயம்)

**மத்திய பிரிவு**

கோ.அருட்செல்வி (யாழ். வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), சி.தனுசன் (யாழ். அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம்),ச.அருள்ராஜி (யாழ். நெல்லியடி மத்திய கல்லூரி)

**மேற்பிரிவு**

ப.லக்சினி(யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி),வ.நந்தினி (யாழ்.ஞானசாரியார் கல்லூரி), ச.மதுசாளினி (யாழ்.வடமராட்சி மத்திய கல்லூரி)

**ஆரம்பப்பிரிவு**

ஸ்ரீ. ஸ்ரீசுஞ்சயன்(யாழ்.ஞானசாரியார் கல்லூரி),ந.தாரிகா (யாழ்.நெல்லியடி மெ.மி.த.க.பா.),க. ஆரணியன் (யாழ். வதிரி திருஇருதயக் கல்லூரி).

**கீழ்ப்பிரிவு**

த.அபிராமி(யாழ்.நெல்லியடி மத்திய கல்லூரி),தீ. விசோந்தன்(யாழ்.கரணவாய் ம.வி), மு.திவான்சயன்(யாழ்.இமையாணன் அ.த.க.பா.)

**மத்திய பிரிவு**

ந.கானப்பிரியா (யாழ்.வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), யே.டன்சிகன் (யாழ். உடுப்பிட்டி அ.மி.கல்லூரி), செ.சுபாகரன் (யாழ்.ஞானசாரியார் கல்லூரி).(இ-5-60)




## சொற்பொழிவும் கலாசார நிகழ்வும்

(யாழ்ப்பாணம்)

சோசலிச இளைஞர் சங்கம் நடத்தும் சொற்பொழிவும் கலாசார நிகழ்ச்சியும் நாளை மறுதினம் வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்ப்பாணம் ரிமர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி சொற்பொழிவும் கலாசார நிகழ்ச்சியும் கியூப தூதுவர் பிலோரொன்டினோ பெட்டிஸ்டா,மக்கள் விடுதலை முன்னணியின் பிரதான செயலாளர் தோழர் ரில்வின் சில்வா, பல்கலைக்கழக பேராசிரியர்கள், கலைஞர்களது பங்கில் இடம்பெறும்.

தேசிய ஒற்றுமை, சமத்துவம், இளைஞர்களின் உரிமை என்பன தொடர்பாக இந்நிகழ்வில் கருத்துக்கள் முன்வைக்கப்படும். (இ-5)

## அடையாள அட்டைகள் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரியில் 2015 இல் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்குரிய செய்முறைப் பாடங்களுக்கான அனுமதி அட்டைகள் வழங்கப்படவுள்ளதாக அதிபர் வே.ஞானகாந்தன் அறிவித்துள்ளார்.

இதற்கமைய நாளை புதன் கிழமை முதல் அனுமதி அட்டைகளை பெற்றுக்கொள்ள முடியும் என்பதுடன் தேசிய அடையாள அட்டையுடன் மாணவர்கள் வருகை தரவேண்டும் என அதிபர் மேலும் அறிவித்துள்ளார். (இ-5)

## வழிகாட்டல் பயிற்சி தொகுதி-2

க.பொ .த உயர்தர 2015 ஆம் ஆண்டு நாடகமும் அரங்கியலும் மாணவர்களுக்குரிய நாடக அரங்கியல் செயன்முறைப் பரீட்சைக்கான வழிகாட்டல் பயிற்சி வகுப்புக்கள் யாழ். கந்தர் மடம் பழம் வீதியில் அமைந்துள்ள அரங்கச் செயற்பாட்டுக் குழுவின் நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

குறித்த பயிற்சி வகுப் புக்கள் எதிர்வரும் 9 ஆம் திகதி தொடக்கம் 12 ஆம் திகதி வரை காலை 8.30 மணி தொடக்கம் மதியம் 1.30 மணி வரை நடைபெறும்.

தகைமை பெற்ற வளவாளர்களினால் நடத்தப்படும் இப்பயிற்சி நெறியில் பங்கு கொள்ள விரும்பும் மாணவர்கள் நாளை மறுதி னம் புதன் கிழமைக்கு முன் னர் 077 440 3955 என்ற இலக்கத்துடன தொடர்பு கொண்டு முன் பதிவு செய்து கொள்ளும்படி அரங்கச் செயறபாட்டுக் குழுவின் யாழ். மாவட்ட இணைப்பாளர் அறிவித்துள்ளார்.

வெளிமாவட்ட மாணவர்களும் பங்கு கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார் . (இ-10)

## பொருளாதாரத்திற்கு பங்காற்ற வேண்டும்

### சுயதொழில் முயற்சியாளர்களிடம் விந்தன் கோரிக்கை



(யாழ்ப்பாணம்)

போரினால் பாதிக்கப்பட்ட எமது மக்கள் கிடைக்கின்ற உதவிகளை உச்சளவில் பயன்படுத்தி தொழில் முயற்சிகளை ஆர்வமாக மேற்கொள்வதனால் தமது வாழ்வாதாரத்திற்கும் எமது பொருளாதாரத்திற்கும் ஒத்துழைக்க முன்வரவேண்டும் என வட மாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் தெரிவித்தார்.

வடமாகாண சபையின் உறுப்பினர்களுக்கான 2015 ஆம் ஆண்டுக்கான பிர மாண அடிப்படையிலான மூலதன நிதி ஒதுக்கீட்டில் தெரிவு செய்யப்பட்ட 19 குடும்பங்களைச் சேர்ந்த பயனாளிகளுக்கு அண்மையில் கோழி வளர்ப்பிற்கான உதவிகளை கையளித்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், எமது மக்களின் வாழ்வாதாரம் பெரிதும் கேள்விக்குறியான நிலைமையிலேயே காணப்படுகினறது. நாளாந்தம் எமது மக்கள் வாழ்வாதாரத்திற்காகப் போராட வேண்டியுள்ளது. நாம் இன்று பல கிராமங்களுக்கும் நிலைமைகளை அறிவதற்காகச் செல்கையில், உண்மையில் மக்களிடத்தில் தொழில் முயற்சிகளை மேற்கொள்வதற்கான ஆற்றல் இருக்கின்றது. எனினும் அத் தொழில் முயற்சிகளை ஆரம்பிப்பதற்கு எவ்வித முதலீட்டு மார்க்கங்களும் இல்லாமல் மக்கள் அவதிப்படுவதைக் காண்கின்றோம்.

இவ்வாறாக ஆற்றல் இருந்தும் தொழில் முயற்சிகளில் ஈடுபட வசதியற்று இருக்கின்ற ஏராளமானவர்களில் என்னால் இயன்றளவு பயனாளிகளைத் தெரிவு செய்து அவர்களுக்கான தொழில் முயற்சிகளுக்காக இயன்றதைச் செய்கின்றேன்.

இதனை உரியவர்கள் தகுந்தவாறு பயன்படுத்தினால் அவர்களது குடும்பப் பொருளாதாரமும் எமது வடமாகாணப் பொருளாதாரமும் வளர்ச்சிகாண்பதற்கு ஒத்துழைக்க முடியும். இன்று நாம் உங்களுக்கு வழங்கியது ஓர் தொழிலுக்கான முதலீடு. இது உங்களது எதிர்காலத்தினை தீர்மானிப்பதற்கானது.

போர்க்காலத்தில் கூட எம்மிடம் உணவுப் பொருட்களில் ஓர் தன்னிறைவு காணப்பட்டது. எனினும் தற்போது எல்லாவற்றுக்கும் தெற்கை நம்பவேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை ஏற்பட்டு வருகின்றது. உள்ளூரில் பலதரப்பட்ட உற்பத்திகளை நாம் ஊக்குவிக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





ஜனாதிபதி மைத்திரி பால சிறி சேன நேற்று முன்தினம் தனது சொந்தக் கிராமத்தின் விஹாரையான பஹளை யாகொட சுகதனந்தாராம புராதன ரஜமகா விகாரைக்கு விஜயம் மேற்கொண்டு சமய வழிபாடுகளில் ஈடுபட்டுஆசிர்வாதம் பெற்றார்.

பின்னர் விகாராதிபதி சங்கைக்குரிய யக்கடுவே ராகுல தேரரை சந்தித்து அருடைய நலம் விசாரித்ததுடன் சிறு கலந்துரையாடலிலும் ஈடுபட்டார்.

இதேவேளை ஜனாதிபதியை பார்ப்பதற்காக விகாரையை சுற்றி கூடியிருந்த பிரதேச மக்களின் அருகில் சென்ற ஜனாதிபதி தகவல்களை கேட்டறிந்தார்.

"பிரதீபா பிரபா"
விருது பெறும் நல்லாசிரியரை
பாராட்டி வாழ்த்துகிறோம்



இன்றைய நன்னாளில் பண்டாரநாயக்க
சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்
நல்லாசிரியர்களுக்கான விருது வழங்கும்
வைபவத்தில் "பிரதீபா பிரபா" விருதினைப்
பெறும் எமது வித்தியாலய ஆசிரியர்

திருமதி ஜெயந்தினி
கொன்றட் கலிஸ்ரஸ்

அவர்களை மனதார
பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
கிளி.கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயம்
கிளிநொச்சி.

(1961)

இவர்களுக்கு மணமகள் தேவை

கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகன் தேவை

**மணமகள் தேவை**

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: சதயம்
கி.பா: 45 செவ் 4 இல்
உயரம்: 5'11"
தகைமை/தொழில்: BSC/ வங்கி உதவி முகாமையாளர்
தொ.இ: B/1113

பிறப்பு: 1976 RC
நட்சத்திரம்: மகம்
கி.பா: 42 செவ் 4 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: A/L/ அரச தொழில
தொ.இ: B/1115

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
கி.பா: 27 செவ் 2 இல்
உயரம்: 175cm
தகைமை/தொழில் A/L/ தனியார் தொழில
தொ.இ: B/1121

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: பூசம்
கி.பா: 21 செவ் 1 இல்
உயரம்: 5'9"
தகைமை/தொழில் O/L/தனியார் தொழில்
தொ.இ: B/1122

**மணமகன் தேவை**

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: அத்தம்
கி.பா: 20 செவ் 8 இல்
உயரம்: 165cm
தகைமை/தொழில்:வங்கியாளர்
தொ.இ: G/1775

பிறப்பு: 1977 இந்து
நட்சத்திரம்: உத்தராடம்
கி.பா: 37 செவ் 4 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: A/L
தொ.இ: G/1782

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: அத்தம்
கி.பா: 32 செவ் 7 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில் BSC/ பொறியியலாளர்
தொ.இ: G/1783

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா: 34 சூரிசெவ் 6 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: தாதி நோர்வே PR
தொ.இ: G/1784

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

## பட்டதாரிகள் உண்ணாவிரதம்

அம்பாறை மாவட்ட வேலையற்ற தமிழ் பட்டதாரிகளுக்கு அரச நியமனம் வழங்கப்படாததை கண்டித்து கடந்த புதன்கிழமை தொடக்கம் திருகோணமலையில் அமைந்துள்ள கிழக்கு மாகாண சபைக்கு முன்னால் அம்பாறை மாவட்ட தமிழ் பட்டதாரிகள் தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தில் மழை வெயிலுக்கு மத்தியில் ஈடுபட்டு வருகின்றனர். (இ)

யாரிடம் பேசுவது?

யார் என்னை புரிந்து கொள்வார்?
நான் வாழ்ந்து என்ன பிரயோசனம்?
நான் என்ன தவறு செய்தேன்?
என்னால் ஒன்றுமே முடியாது
நான் என்ன செய்வது?
எம்முடன் பேசுங்கள்
கை கொடுக்கும் நண்பர்கள்
104, 4, ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்
☆ மதசார்பற்றது ☆ ரகசியம் பேணப்படும்
021 222 8117, 077 900 8776
(1804)

பாராட்டி வாழ்த்துகின்றோம்
யா/கோப்பாய்நாவலர் தமிழ் வித்தியாலயம்



திருமதி.புஸ்பலதா மனோகரன்
SLTS 1

பண்டார நாயக்கசர்வதேச மண்டபத்தில்
06.10.2015 இன்று இடம்பெறுகின்ற
ஆசிரியர் கௌரவிப்பு நிகழ்வில்
அதி மேதகு ஜனாதிபதி அவர்களால்
"குரு பிரதீபா பிரபா"
விருது வழங்கி
கௌரவிக்கப் படுகின்றமைக்கு
வாழ்த்துவதோடு
அவர்களது பணி மேலும் சிறக்க
வித்தியா கணபதியை
பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
(யா/கோப்பாய்நாவலர் தமிழ் வித்தியாலயம்)



திருமதி.செல்வமலர் மகாலிங்கம்
SLTS 2 II
கலைப் பட்டதாரி

(C-2383)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்து கூட்டுறவு சங்கங்களுக்கு 2.5 மில்லியன் ரூபா நன்கொடை

## வடக்கு மாகாண கூட்டுறவு அமைச்சர் வழங்கி வைத்தார்

(வவுனியா)

**வடக்கின் நலிவடைந்த நிலையில் உள்ள ஐந்து பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அவற்றை மேம்படுத்தவென தலா ஐந்து இலட்சம் ரூபா வீதம் 2.5 மில்லியன் ரூபா நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது என வடக்கு மாகாண கூட்டுறவுத்துறை அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.**



வவுனியா மாவட்ட கூட்டுறவாளர்களின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் கூட்டுறவுத் தினவிழா வவுனியா முத்தையா மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டு கூட்டுறவுச்சங்கங்களின் மேம்பாட்டுக்கான இந்நன்கொடை நிதியை வழங்கி வைத்துள்ளார்.

வடக்கு மாகாண கூட்டுறவு அமைச்சால் கூட்டுறவுத்துறையின் அபிவிருத்தி கருதி 100 நாட்கள் வேலைத் திட்டமொன்று அண்மையில் முன்னெடுக்கப்பட்டிருந்தது. இத் திட்டத்தில் நலிவடைந்த கூட்டுறவுச் சங்கங்களை அடையாளம் கண்டு அவற்றை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் என்பதும் உள்ளடக்கப்பட்டிருந்தது. அதன் அடிப்படையிலேயே, ஐந்து மாவட்டங்களில் இருந்தும் முதற்கட்டமாக ஒவ்வொரு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் தெரிவு செய்யப்பட்டு, தொழில் முயற்சிகளை மேற்கொள்ளவென கூட்டுறவுத் திணைக்களத்தின் 2015 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்ட ஒதுக்கீட்டில் இருந்து இந்நிதி வழங்கி வைக்கப்பட்டிருக்கிறது.

யாழ். மாவட்டத்தில் வடமராட்சி கிழக்கு ப.நோ.கூட்டுறவுச் சங்கமும் கிளிநொச்சி மாவட்டத்தில் பச்சிலைப்பள்ளி ப.நோ.கூட்டு றவுச் சங்கமும் முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு ப.நோ.கூட்டுறவுச் சங்கமும் வவுனியா மாவட்டத்தில் செட்டிக்குளம் ப.நோ.கூட்டுறவுச்சங்கமும் மன்னார் மாவட்டத்தில் மாந்தை வடக்கு ப.நோ. .கூட்டுறவுச் சங்கமுமே இந்நிதியைப் பெற்றுக் கொண்டுள்ள ப.நோ. கூட்டுறவுச் சங்கங்கள் ஆகும். இச்சங்கங்களின் தலைவர்களும் பொதுமுகாமையாளரும் இதற்கான காசோலையை அமைச்சரிடம் இருந்து பெற்றுக் கொணடுள்ளார்கள். காசோலை கையளிப்பில் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மதுமதி வசந்தகுமார், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் க.ரவீந்திரநாதன் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர். (2)

சிறுமி சேயா, மாணவி வித்தியா

## படுகொலை செய்யப்பட்டதை கண்டித்து பாதயாத்திரை

(கிளிநொச்சி)

புங்குடுதீவு மாணவி வித்தியா, கொட்டதெனியாவை சேர்ந்த சிறுமி சேயா ஆகியோர். பாலியல் துன்புறுத்தல்களின் பின் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்தும் குற்றவாளிகளுக்கு எதிராக மரணதண்டனை நிறைவேற்றக்கோரியும் இலங்கை போக்குவரத்து சபையின் வடக்கு மாகாண ஊழியர்களால் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு வரையான பாதயாத்திரை ஒன்று நடத்தப் படவுள்ளதாக இ.போ.ச. யாழ்.சாலை முகாமையாளர் செ.குணபாலசெல்வம் அறிவித்துள்ளார்.

இலங்கை போக்குவரத்து சபையின் வடக்கு மாகாண ஊழியர்களால் இந்தப் பாதயாத்திரை நேற்று திங்கட்கிழமை காலை 6.80 மணியளவில் யாழ்.மத்திய பேருந்து நிலையத்தில் இருந்து கொழும்பு நோக்கி ஆரம்பமாகியுள்ளது. இப்பாதயாத்திரையின் விபரம் முறையே,

நேற்று யாழ்ப்பாணத்தில் இருந்து கிளிநொச்சி வரையும் இன்று செவ்வாய்க்கிழமை கிளிநொச்சியிலிருந்து வவுனியா வரையும் நாளை புதன்கிழமை வவுனியாவில் இருந்து அநுராதபுரம் வரையும் 8 ஆம் திகதி அநுராதபுரத்தில் இருந்து மாகோ வரையும் 9 ஆம் திகதி மாகோவாவிலிருந்து குருநாகல் வரையும் 10 ஆம் திகதி குருநாகலில் இருந்து ஹாக்காப்பொல வரையும் 11 ஆம் திகதி ஹாக்காப்பொலவிலிருந்து கம்பஹா வரையும் 12 ஆம் திகதி கம்பஹாவிலிருந்து கொழும்பு வரையும் இப்பாதயாத்திரை சென்றடையவுள்ளது.

இந்தப் பாதயாத்திரையில் சமூக அக்கறை கொண்ட அனைவரும் கலந்து கொள்ளுமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(2)




## சர்வதேச முதியோர் தினம்

(கிளிநொச்சி)

வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் 'நிலைத் திருக்கக்கூடிய விதத்தில் முதியோரின் வயதிற்கு முக்கியத்துவம் அளிக்கின்ற நகரசூழல்' எனும் தொனிப் பொருளில் சர்வதேச முதியோர் தினம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணி வரை கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவுச் சபையில் சமூக சேவைகள் திணைக்கள வடக்கு மாகாண பணிப்பாளர் திருமதி.ந.இன்பராஜ் தலைமையில் நடை பெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னே ஸ்வரன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண சுகாதார, சுதேச மருத்துவ சமூக சேவைகளும் புனர்வாழ்வும் நன்நடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் மற்றும் மகளிர் விவகார அமைச்சர் வைத்தியகலாநிதி ப.சத்தியலிங்கம் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். இதன்போது முதியோர்நிகழ்ச்சிகள், பரிசளிப்பு, அன்பளிப்புவழங்கல்என்பனஇடம்பெறும். (2)

## தேவார பண்ணிசை வகுப்பு

(கிளிநொச்சி)

மதுரை திருவாதவூர் 'தேவார இசைமணி' கு.இராமச்சந்திரன் ஓதுவாரினால் தேவார பண்ணிசை வகுப்பு நாளை மறுதினம் வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கிளிநொச்சி மகாதேவ ஆச்சிரமத்தில் ஆரம்பித்துவைக்கப்படவுள்ளது.

இதில் ஆர்வமுள்ள சிறார்கள் அனைவரையும் பங்கேற்று பயன்பெறுமாறு ஆச்சிரமத்தலைவர், ஞானசிரோன்மணி ஸ்ரீமத் கணேஷானந்த மகாதேவ சுவாமிகள் அறிவித்துள்ளார். (2)

## பாடசாலை மாணவர்களுக்கு இடையே தேசிய இலக்கிய கலைப்போட்டி தொடர்

(மல்லாவி)

ஒட்டுசுட்டான் பிரதேச செயலக மட்டத்தில் தேசிய இலக்கிய கலைப்போட்டி தொடர் நடைபெறவுள்ளது. இதற்கான ஆக்கங்கள் பாடசாலை மாணவர்களிடம் இருந்து கோரப்படுவதாக ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் ஆர்.குருபரன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது, ஒட்டுசுட்டான் பிரதேச செயலகமட்டத்தில் தேசிய இலக்கிய கலைப்போட்டி தொடர் எதிர்வரும் நவம்பர் மாதம் 3 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஒட்டுசுட்டான் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

இந்நிகழ்விற்குரிய ஆக்கங்கள் அனைத்தும் எதிர்வரும் 10 ஆம் திகதி சனிக்கிழமைக்கு முன்பாக ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்திற்கு கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்கப்படவேண்டும் என அவர் கேட்டுள்ளார்.

பாடசாலை மாணவர்களுக்கு இடையே பாலர்பிரிவு (6 தொடக்கம் 10வயது), கனிஷ்ட பிரிவு(11 தொடக்கம் 15 வயது), சிரேஷ்ட பிரிவு (16 தொடக்கம் 19 வயது), திறந்த பிரிவு (19 வயதிற்குமேல்) எனப்பல பிரிவுகளாக வகைப்படுத்தி கட்டுரைப் போட்டி, கவிதைப்போட்டி, கவிதைப்பாடல் போட்டி, கையெழுத்துப் போட்டி, பாடல் நயத்தல் போட்டி, குழுநடனம், தனிநடனம், சிறுவர் நாடகம், பட்டிமன்றம், வில்லுப்பாட்டு ஆகிய போட்டிகள் நடைபெறவுள்ளன.

மேற்படி போட்டிகள் தொடர்பான விபரங்களை பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள சுற்றுநிருபங்களைப் பார்வையிட்டு விண்ணப்பதாரிகள் அறிந்து கொள்ள முடியும்.

போட்டிகளில் வெற்றியீட்டுபவர்களுக்கு சான்றிதழ்கள், பரிசில்கள் என்பன வழங்கி கௌரவிக்கப்படுவதுடன் மாணவர்கள் கல்வி பயிலும் பாடசாலைகளும் கௌரவிக்கப்படவுள்ளன என அவர் மேலும் அறிவித்துள்ளார். (2-15)

தேசிய பாடசாலைகளுக்கான

## அதிபர் பதவி வெற்றிடங்களுக்கு விசேட ஆளணி உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படமாட்டார்கள்

### மத்திய கல்வியமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

(மல்லாவி)

நாடு தழுவிய ரீதியில் உள்ள தேசிய பாடசாலைகளுக்கான அதிபர் பதவி வெற்றிடங்களுக்கு இலங்கை கல்வி நிர்வாக சேவையிலுள்ள விசேட ஆளணி உத்தியோகத்தர்கள் எவரும் நியமனம் செய்யப்படமாட்டார்கள் என மத்திய கல்வி அமைச்சின் செயலாளர் டபிள்யூ.எம்.பந்துலசேன அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

புதிய சேவை பிரமாணக்குறிப்பிற்கு அமைய பொது ஆளணி பதவிகளுக்கு விசேட ஆளணி உத்தியோகத்தர்களை நியமனம் செய்வதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளமையால் அதிபர் பதவிக்கென நடத்தப்பட்ட பரீட்சையில் விசேட ஆளணி உத்தியோகத்தர்கள் சித்திஅடைந்தாலும் இப்பதவிகளுக்கு நியமனம் செய்யப்படமாட்டார்கள்.

நாடாளாவிய ரீதியிலுள்ள 101 தேசிய பாடசாலைகளின் அதிபர்கள் வெற்றிடங்களுக்கு எழுத்துப்பரீட்சை நடைபெற்று நேர் முகப்பரீட்சை கடந்தமாதம் 8,10,11,15,17,21, 22,28,29 ஆகிய திகதிகளில் நடைபெற இருந்த நிலையில் அவை தவிர்க்கமுடியாத காரணங்களினால் பிற்போடப்பட்டுள்ள நிலையில் இவ்வறிவித்தல் மத்திய கல்வி அமைச்சர் டபிள்யூ.எம்.பந்துலசேனவினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'மைத்திரி ஆட்சி -நிலையான நாடு' எனும் கொள்கை பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பாதுகாப்பான உணவு மற்றும் நிலையான விவசாயம் எனும் எண்ணக்கருவின் வேலைத்திட்டம் எதிர்வரும் 2016-2018 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இதற்கமைய வடக்கு மாகாணத்திற்கான முதல் வேலைத்திட்டம் இரணைமடு பிரதேசத்தில் நேற்று முற்பகல் 10 மணிக்கு வைபவ ரீதியாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் ஆரம்பித்து வைக்கப்பட்டதைப் படங்களில் காணலாம். (படங்கள்:-உ.சாளின், சிவநகர், பனிக்கன்குளம், முக்கொம்பன் செய்தியாளர்கள்.)

# சிறுவர்களின் எதிர்கால அபிவிருத்திக்கு பட்ஜெட்டில் நிதியொதுக்கப்படவேண்டும்

## ஆனந்தன் எம்.பி வலியுறுத்து

(பனிக்கன்குளம்)

**வடகிழக்கில் போரால் பாதிக்கப்பட்டுள்ள சிறு வர்களின் எதிர்கால அபிவிருத்தி தொடர்பாக கூடிய கவனம் செலுத்தப்படவேண்டுமென தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்திஆனந்தன் கோரிக்கை விடுத்துள்ளார்.**

புதிய வரவுசெலவுத்திட்டத்தில் இதற்காக அதிகளவான நிதி ஒதுக்கப்படவேண்டுமெனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். நாட்டின் ஏனைய மாகாணங்களில் வாழுகின்றமக்களை விடவும்வடகிழக்கில் வாழும் தமிழ் பேசும்மக்கள் போரின் பாதிப்புகளை நேரடியாக சந்தித்தவர்கள்.

போர் முடிவுக்குகொண்டு வரப்பட்டு ஆறு வருடங்களை கடந்தபின்னும் கூட இந்த மாகாணத்துக்குரிய மக்கள் தற்போது வரையில் போரின் கடுமையான பாதிப்புகளிலிருந்து மீளமுடியாதவாறு உள்ளனர்.

குறிப்பாக வடக்கு கிழக்கில் வாழும் சிறுவர்களுக்கு நாட்டின் ஏனைய மாகாணங்களில் வாழும் சிறுவர்களை விடவும் பல குறைபாடுகள், பிரச்சினைகள் என்பன காணப்படுகின்றன.

கொடுமையான யுத்தத்தின்காரணமாக தாய் அல்லது தந்தை இருவரையும் இழந்துள்ள பிள்ளைகள், காணாமல் ஆக்கப்பட்டுள்ள குடும்பங்களின் பிள்ளைகள், சிறைச்சாலைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளின் பிள்ளைகள், கடும் காயமுற்றுள்ள விசேட தேவைக்குட்பட்டுள்ளவர்களின் பிள்ளைகள் என்று மிகவும் மோசமான பாதிப்புகளுடன் சிறுவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

இவர்களில் ஒருதொகுதி சிறுவர்கள் போரினால் அவயங்களை இழந்தும், துப்பாக்கிச்சன்னங்கள், எறிகணைச்சிதறல்களை உடலில் தாங்கிக்கொண்டும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

ரணத்தோடு வாழ்ந்து கொண்டிருக் கும் இவர்களுக்கு மருத்துவதேவைகள் காணப்படுகின்றன. அதேவேளை பாடசாலைக்கல்வியை கைவிட்டும், கைவிடும் நிலையிலும் உள்ளமையும் விசேடமாக கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

போரின் நேரடிதாக்கங்களிலிருந்து மீளமுடியாது தவித்துக்கொண்டிருக்கும் இந்த சிறுவர்களுக்குரிய கல்வி, உணவு, சுகாதாரம், பாதுகாப்பு, பராமரிப்பு உள்ளிட்ட அடிப் படை வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டிய பெரும்பொறுப்பு அரசாங்க த்துக்கே உண்டு. வடக்குமாகாணத்தில் மட்டும் பன்னி ரெண்டாயிரம் வரையான சிறுவர்கள்தாய் அல்லது தந்தை அல்லது இருவரையும் இழந்துள்ளனர்.

ஆகவே புதிய அரசாங்கம் 2016 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்டத்தில், போரினால் பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்களின் அறுவைச்சிகிச்சை உள்ளிட்ட விசேட மரு த்துவ தேவைகளுக்கு என்று கூடியளவு நிதியை ஒதுக்கவேண்டும் என்று வலியுறுத் துகின்றேன்.

வறுமை, வரட்சி, தொழில்வாய்ப்பின்மை, பிற காரணிகளினால் அன்றாட வாழ்க்கையை நகர்த்துவதற்கே மிகவும் துன்பப்பட்டுக்கொண்டிருக்கும் ஆயிரக்கணக்கான குடும்பங்களின்பிள்ளைகளை வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள சிறுவர் இல்லங்களே பொறுப்பேற்று அவர்களை பராமரித்து கல்வியறிவூட்டி வருகின்றன. இவற்றில் பல சிறுவர் இல்லங்கள் புலம் பெயர் நாடுகளில் வாழும் காருண்யர்களினதும், தொண்டு நல அமைப்புகளினதும் நன் கொடைநிதியிலேயே இப்பெரும்பணியை செய்து வருகின்றன.

எனவே இந்த சிறுவர் இல்லங்களின் சமூக நலப்பணியை ஊக்குவிக்கும் வகையில் சிறுவர் மற்றும் பெண்கள் தொடர்பான அமைச்சுகளும் தங்களின் வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும்.

எவ்வாறாயினும் வடகிழக்கில் சிறுவர் இல்லங்களற்ற சூழலை உருவாக்குவதே எமது எதிர்பார்ப்பாகவுள்ளதாகவும் அவர் வேண்டுகோள்விடுத்துள்ளார். (2-281)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நியாயம் கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு ஐ.நாவிடம் இந்தியா மீண்டும் முறையிடலாம்

## தினத்தந்தி ஆசிரியர் தலையங்கத்தில் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

**மனித உரிமைகள் மீறல் விடயத்தில் ஐ.நா.மனித உரிமைகள் ஆணையம் உணர்ச்சி பூர்வமாக இருக்கிறது. எனவே மனம் தளராமல் நியாயம் கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு மீண்டும் இந்தியா, ஐ.நாவிடம் முறையிடலாம் என தினத்தந்தி ஆசி ரியர் தலையங்கத்தில் அறிவுரை வழங்கியுள்ளது.**




இலங்கை வாழ் தமிழர்களுக்கு 1948 ஆம் ஆண்டில் இருந்தே சமநிலை கிடைக்காத நிலையில், போராட்டம் நடந்துவந்தது. கடந்த 30 ஆண்டுகளாக விடுதலைப்புலிகள் இயக்கம் இந்த போராட்டத்தை கையில் எடுத்துக்கொண்டு, காடுகளில் மறைந்து வாழ்ந்து கொண்டு போராடி வந்தனர். 2009 ஆம் ஆண்டு இறுதிக் கட்டத்தில் இலங்கை முப்படைகளின் கோரத்தாக்குதலால் அப்பாவி தமிழர்கள் கொத்து கொத்தாய் உயிர் இழந்தனர். இலட்சக்கணக்கான மக்கள் வீடு, வாசல், சொத்து சுகங்கள் அனைத்தையும் இழந்து நிர்க்கதியாக சொந்த நாட்டிலும், இந்தியா உட்பட வெளிநாடுகளிலும் அகதிகளாய் பரிதாபகரமாக வாழ்கிறார்கள். இலங்கை இராணுவம் நிகழ்த்தியது போர்க்குற்றங்கள்தான். இதை விசாரித்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று உலக நாடுகள் பல, ஐ.நா. மனித உரிமை ஆணையத்தின் கதவை தட்டியது. மனித உரிமைகள் ஆணையமும் தனது புலனாய்வு அறிக்கையை ஆணையத்திடம் தாக்கல் செய்தது.

இந்த புலனாய்வு அறிக்கையின் மீது எடுக்கப்படும் நடவடிக்கை குறித்து ஐ.நா. மனித உரிமை ஆணையத்தில் சர்வதேச விசாரணை கோரி இந்தியா தீர்மானம் கொண்டு வரவேண்டும் என்பதுதான் தமிழர்களின் கோரிக்கையாக இருந்தது. அந்த வகையில்தான், 10.02.2015 அன்று இலங்கை வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன், இந்த இனப்படுகொலை குறித்து சர்வதேச சுதந்திரமான விசாரணை வேண்டும் என்று வடக்கு மாகாண சபையில் கொண்டுவந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தமிழ் நாட்டிலும்16.09.2015 அன்று சட்டசபையில் முதலமைச்சர் ஜெயலலிதாவும் சர்வதேச விசாரணை வேண்டும், அதற்கான தீர்மானத்தை இந்தியாவே கொண்டுவரவேண்டும், ஒருவேளை அமெரிக்கா, இலங்கைக்கு ஆதரவான நிலையை எடுத்தால், இராஜதந்திர ரீதியில் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கொண்டுவந்த தீர்மானம் அனைத்து கட்சிகளாலும் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

எனவே, இந்த 2 தீர்மானங்களையும் ஆழமாக ஆராய்ந்தால், ஒட்டுமொத்த இலங்கை தமிழர்களுடைய, இந்திய தமிழர்களுடைய உணர்வுகளின் பிரதிபலிப்புதான், இந்த தீர்மானங்கள் என்பது எல்லோருக்கும் புலப்படும். இந்த நிலையில், இந்திய அரசாங்கம் எந்த தீர்மானத்தையும் முன்மொழியாதது எல்லோருக்கும் பலத்த அதிர்ச்சியை அளித்தது. இதற்கு மாறாக இலங்கையின் ஆதரவுடன், அமெரிக்கா, பிரிட்டனால் கொண்டுவரப்பட்ட ஒரு தீர்மானத்தை இந்தியா உட்பட 47 நாடுகளும் ஒருமனதாக ஏற்றுக் கொண்டன. இந்த தீர்மானத்தில் வெளிநாட்டு நீதிபதிகள், சட்டநிபுணர்கள், உள்நாட்டு நீதிபதிகள் அடங்கிய விசாரணை குழுவை இலங்கை அமைத்து, போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் பற்றி, நம்பிக்கைக்குரிய விசாரணை நடத்தப்படவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. ஆனால், இந்த தீர்மானத்தின் படியும், வெளிநாட்டு நீதிபதிகள் இடம்பெறப்போவதில்லை, உள்நாட்டு நீதிபதிகள்தான் இருப்பார்கள் என்று இலங்கை அதிபர் சிறிசேன இலங்கை திரும்பியவுடன் கூறியதுதான் குழப்பமாக இருக்கிறது.

இது மட்டுமல்லாமல், அமெரிக்க தீர்மானத்தில் கலப்பு நீதிமன்றம் என்ற வார்த்தையை நாங்கள் நீக்கிவிட்டோம். வெளிநாட்டு நீதிபதிகள் என்பது ஆலோசனைதானே தவிர, உத்தரவு அல்ல. இது உள்நாட்டு விசாரணைதான் என்று அடித்து சொல்லிவிட்டார். இது நிச்சயமாக ஏமாற்றம் என்றாலும், இதுவே முடிவான முடிவு அல்ல. போர்க்குற்றங்கள் விடயத்திலும், மனித உரிமைகள் மீறல் விடயத்திலும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையம் உணர்ச்சிபூர்வமாக இருக்கிறது. எனவே, மனம் தளராமல் நியாயம் கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு மீண்டும் இந்தியா,ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்தில் முறையிடலாம். அதையே அனைவரும் வலியுறுத்தலாம் என மேலும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (இ-10)

## சர்வதேச சிறுவர், முதியோர் விழா

கொட்டடி கிராம அபிவிருத்தி சங்கமும் சனசமூக நிலையமும் இணைந்து நடத்தும் சர்வதேச சிறுவர் முதியோர் விழா இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு யாழ்.கொட்டடி நமசிவாய பாடசாலையில் நடைபெறவுள்ளது.

அகில இலங்கை சமாதான நீதவான் நா.தனேந்திரன் தலைவராகப் பங்கேற்கும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சட்டத்தரணி ஜோனி மருதநாயகம் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளதுடன் சிறப்பு விருந்தினர்களாக யாழ். பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் இ.யூட், யாழ்.மாநகரசபை பொதுசன தொடர்பு உத்தியோகத்தர் ச.யோகசிவம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

கௌரவ உத்தியோகத்தர்களாக ஜே/83 கிராம அலுவலர் திருமதி. கோபிசாலினி, ஜே/83 அபிவிருத்தி உத்தியோகத்தர் பே.பிரபானந்தன், ஜே/83 சமுர்த்தி உத்தியோகத்தர் அ.வேல் அழகன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-5)

## மகிந்த ராஜபக்ஷவால் மூடிமறைக்கப்பட்ட அறிக்கையை வெளியிட ஜனாதிபதி முடிவு

(கொழும்பு)

ஆறு வருடங்களுக்கு முன்னர் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் ஏற்றுகொள்ளப்பட்டும் எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படாது மறைத்து வைக்கப்பட்டிருந்த உதாலகம ஆணைக்குழு அறிக்கையை எதிர்வரும் நாட்களில் வெளியிட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தீர்மானித்துள்ளதாக ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

காணாமற் போனோர் தொடர்பிலான மக்ஸ்வெல் பரணகம அறிக்கையுடன் இவ் அறிக்கையையும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கும் நடவடிக்கைகளும் இடம்பெறவுள்ளது.

உதாலகம ஆணைக்குழுவின் செயற்பாடுகள் தொடர்பில் மனித உரிமை ஆணைக்குழு செயற்பாட்டாளர்களினால் விமர்சிக்கப்பட்டுள்ள நிலையில் தங்களுக்கு வழங்கப்பட்ட விசாரணைகள் நிறைவடையவில்லை எனவும் எதிர்வரும் விசாரணைகளுக்காக முழுமையான அதிகாரம் கொண்ட நிலையான ஆணைக்குழுவை நியமிக்குமாறு அரசாங்கத்திடம் யோசனை முன்வைப்பதாக குறித்த ஆணைக்குழு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் தங்கள் விசாரணைகளின் முக்கியமாக சாட்சியாளர் வெளிநாட்டில் வசிப்பதாகவும், அவர்களின் சாட்சிகளை பெற்றுக்கொள்வதற்கு ஆணைக்குழு பயன்படுத்துவதற்காக காணொலி உரையாடல் வசதிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளமையினால் மேலதிக சாட்சிகளை பதவி செய்து கொள்ள முடியவில்லை என அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (இ-10)

## சிறைச்சாலை உத்தியோகத்தர் பயிற்சியில் 100 தமிழ் இளைஞர்கள் இணைந்துள்ளனர்

(கொழும்பு)

சிறைச்சாலை உத்தியோகத்தர்களுக்கான பயிற்சியில் 100 தமிழ் இளைஞர்கள் பயிற்சி பெற்று வருவதாக சிறைச்சாலை திணைக்களம் அறிவித்துள்ளது.

சிறைச்சாலை உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிக்கு அண்மையில் 500 இளைஞர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தனர். இவர்களுக்கு தற்போது இலங்கையின் பல்வேறு சிறைச்சாலைகளில் பயிற்சியளிக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் குறித்த பயிற்சி அணியில் சுமார் 100 தமிழ் இளைஞர்கள் உள்ளடக்கப்பட்டிருப்பது தற்போது தெரியவந்துள்ளது. குறித்த தமிழ் இளைஞர்கள் அணி இரத்தினபுரி மாவட்டத்தில் உள்ள குருவிட்ட திறந்த வெளிச் சிறைச்சாலையில் பயிற்சி பெற்றுக்கொண்டிருக்கின்றனர். இவர்களின் பயிற்சிக்காலம் நிறைவடைந்த பின்னர் வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள சிறைச்சாலைகளில் சேவையில் ஈடுபடுத்தப்படுவார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.(இ-10)


### மரண அறிவித்தல்



**வல்லிபுரம் செல்வநாயகம் (லவுட்ஸ்பீக்கர் செல்வம்)**

ஏழாலை வடக்கு ஏழாலையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் செல்வநாயகம் 04-10-2015 ஞாயிற்றுக்கிழமை இறையடி எய்தியுள்ளார். அன்னார் காலஞ்சென்ற இளையதம்பி வல்லிபுரம் – சிவக்கொழுந்து தம்பதிகளின் மூத்த புதல்வரும் வசந்தா அவர்களின் அன்புக்கணவரும், பிறேமலதா, செல்வரஞ்சன், ஜெயரஞ்சன், சுதாமதி, ஆகியோரின் பாசமிகு தந்தையும், கதிர்காமநாதன், திலகவதி, சண்முகராசா, கந்தசாமி, கணேசலிங்கம், வேலழகன், அமரர் சிவானந்தம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், நீதிபரன் தேன்கனி, நந்தினி, சிவசாந்தி (சுபா), சுதர்சன் (வான் சுதா), ஆகியோரின் பாசமிகு மாமனாரும், ருவிங்கிள், ருவிங்ரன், கவீனா, பிரவீன், பிரவீனா, ஜெனித், வினித், தனுஷன், வினுஷன், மோனிஷா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் யாவும் 07-10-2015 நாளை புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் ஏழாலை உசத்தியோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

ஏழாலை வடக்கு,
ஏழாலை.

(C-2387)

தகவல்
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலிபானின் தலைமை பாகிஸ்தானில்

காட்டுமிராண்டித்தனத்துக்கு முன்னுதாரணமாக விளங்கிவரும் தலிபான் தீவிரவாத இயக்கத்தின் தலைவர் பாகிஸ்தானில் பதுங்கியுள்ளதாகவும், இதில் சந்தேகத்துக்கே இடமில்லை எனவும் ஆப்கானிஸ்தான் நாட்டின் பாதுகாப்புத்துறை அமைச்சர் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.


இது தொடர்பாக, தனியார் தொலைக்காட்சிக்கு ஒன்றுக்கு பேட்டியளித்துள்ள ஆப்கானிஸ்தான் பாதுகாப்புத்துறை அமைச்சர் முஹம்மது மஸூம் ஸ்டானெக்ஸாய்,

தலிபான் தீவிரவாத இயக்கம் இன்றளவும் உயிர்ப்புடன் இயங்கிகொண்டுதான் உள்ளது. அதற்கு பல்வேறு வெளிநாட்டு சக்திகள் ஆதரவு அளித்து வருகின்றன. இதில் சந்தேகத்துக்கே இடமில்லை. முல்லா உமர் இறந்த தகவல் வெளியான போது, அவர் பாகிஸ்தானில் இல்லை என்றே கூறப்பட்டது. பின்னர், அது தெளிவானது.

தற்போது, தலிபான் தீவிரவாதிகளின் இரகசிய கூட்டங்கள் பாகிஸ்தானில் உள்ள குவெட்டா, கராச்சி நகரங்களில் நடந்ததை அங்குள்ள ஊடகங்கள் படம்பிடித்து, செய்தியாக வெளியிட்டுள்ளன. எனவே, தலிபானகளின் ஒட்டுமொத்த தலைமையும் பாகிஸ்தானில்தான் உள்ளது என்பது இதன்மூலம் தெளிவாகின்றது என்று தெரிவித்துள்ளார். (3-7)

## அமெரிக்க ஜனாதிபதியாக தெரிவாவதற்கு

# கிலாரி கிளிண்டனுக்கு 44 வீதமானோர் ஆதரவு



(வோஷிங்டன்)

**அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட ஹிலாரி கிளிண்டனுக்கு 30 இலட்சம் உறுப்பினர்களை கொண்ட தொழிற்சங்கம் ஆதரவு தெரிவித்துள்ளது. இது அவரது கை ஓங்குவதையே காட்டுவதாக சர்வதேச அரசியல் நோக்கர்கள் கருதுகின்றனர். கடந்த 29ஆம் திகதி நடைபெற்ற வாக்கெடுப்பில் கட்சிக்குள் 44 வீதமான ஆதரவை கிலாரி கிளிண்டன் பெற்றுள்ளார்.**

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் அடுத்த ஆண்டு நவம்பர் 8ம் திகதி நடத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆனாலும் அங்கு இப்போதே தேர்தல் களம் சூடுபிடித்து வருகிறது.

ஜனநாயக கட்சியை சேர்ந்த தற்போதைய ஜனாதிபதி ஒபாமா, தொடர்ந்து 2 முறை பதவி வகித்துவிட்டதால், அடுத்த தேர்தலில் போட்டியிட முடியாது.

அந்தக்கட்சிசார்பில்வேட்பாளராக களமிறங்க அமெரிக்காவின் 67 ஆவது வெளியுறவு அமைச்சர் பதவி வகித்த 67வயதுஹிலாரிகிளிண்டன் தீவிர முனைப்பில் உள்ளார்.

அவருக்கு பெரும் போட்டியை அளித்து வருபவர், வெர்மாண்ட் எம்.பி.பெர்னீ சாண்டர்ஸ் (வயது 74) ஆவார். கருத்துக்கணிப்புகள், இருவருக்கும் இடையே கடும் போட்டி உருவாகி வருவதை காட்டுகின்றன. கடந்த 29ஆம் திகதி நடந்த கருத்துக்கணிப்பு, கட்சிக்குள் ஹிலாரிக்கு 44 சதவீத ஆதரவும், பெர்னீ சாண்டர்சுக்கு 28 சதவீத ஆதரவு இருப்பதையும் காட்டியது.

இதேவேளை ஹிலாரி கிளிண்டனுக்கு சர்வதேச தீயணைப்பு படை வீரர்கள் சங்கம் ஆதரவு அளிக்க தீர்மானித்திருந்த நிலையில், 2 தினங்களுக்கு முன் தங்கள் முடிவை திடீரென கைவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் அவருக்கு அமெரிக்காவின் மிகப்பெரிய தொழிற்சங்கம் என்று கருதப்படுகிற தேசிய கல்வி சங்கம் ஆதரவை தெரிவித்துள்ளது. இந்த சங்கத்தில் 30 இலட்சம பேர் உறுப்பினர்களாக உள்ளனர்.

ஹிலாரிக்கு ஆதரவு அளிப்பது தொடர்பான வாக்கெடுப்பில் 175 இயக்குநர்களை கொண்ட அந்த சங்கத்தில் 75 சதவீதத்துக்கும் மேற்பட்டோர், அவருக்கு ஆதரவு தெரிவித்தனர்.

இது தொடர்பாக அந்த சங்கத்தின் தலைவர் லில்லிஎஸ்கெல்சன் கார்சியா கருத்து தெரிவிக்கையில், "ஹிலாரி ஒரு வலுவான தலைவர். அவர் மாணவர்கள், ஆசிரியர்கள், குடும்பங்கள்என பல தரப்பினருக்காகவும் உழைப்பார். அமெரிக்காவின் பொருளாதார வலு, அமெரிக்க பாடசாலைகளில் தான் தொடங்குகிறது என்பதை ஹிலாரி நன்கு உணர்ந்திருக்கிறார் என புகழாரம் சூட்டினார். (3-7)




# அணுகுண்டில் அழியாத ஜப்பானின் போன்சாய் மரம்

ஜப்பானின் 390 வயதுடைய போன்சாய் மரம் வியக்க வைக்கும் வரலாற்றை கொண்டுள்ளது.


தற்போது உலகின்கவனத்தையே தன்பால் ஈர்த்துள்ளது. ஆனாலும் 2001ம் ஆண்டு வரை அது யாராலும் கண்டுகொள்ளப்படவில்லை என்பது ஆச்சரியம்.

இந்த மரம் ஓங்கி வளர்ந்த பெருமரம்இல்லை. ஜப்பானியர்களை போலவே குட்டைதன்மை கொண்டது. இதன் தோற்றம் பார்க்க காளான் போல் உள்ளது.

இதனுடைய நடுப்பகுதி மரம் 1.5 அடி விட்டம் கொண்ட சிறிய மரம். இந்த குறைகளே 4 வது நூற்றாண்டை கடக்க இருக்கும் இந்த மரத்துக்கு நிறைகளாக அமைந்துள்ளதா என்பது ஆராயக்கூடியது.

அமெரிக்கா இரண்டாம் உலகப் போரின் போது, 1945, ஒகஸ்ட் 6ம் திகதி ஜப்பானின் ஹிரோஷிமா மீது லிட்டில் பாய்(Little Boy) அணுகுண்டை வீசியது.

அப்போது, குண்டு விழுந்த



இடத்துக்கு இரண்டு 2 கி.மீ. தூரத்திலேயே இந்த வெள்ளை பைன் மரம் இருந்தது.

குண்டு வீசப்பட்ட இடத்திலிருந்து பல மைல் தூரத்தில் இருந்தவர்கள் பெரும்பாதிப்பிலிருந்து தப்பினார்கள். ஆனால், 2 கி.மீ. தூரத்தில் பெரும் பாதிப்புக்குள்ளாகி அழிந்த பகுதியில் இருந்த இந்த மரம் சேதமில்லாமல் தப்பியது பிறகுதான் கண்டுபிடிக்கப்பட்டது.

மரத்தின் உயரத்துக்கு சுற்றுச்சுவர் மறைத்திருந்தாலும் வெளியில் கிளைகள் தெரிந்தபடியே இருந்தது. ஆனாலும் அணுக்கதிர் வீச்சால் பாதிக்கப்படவில்லை.

இந்த ஜப்பானிய வெள்ளை பைன் மரம் மற்றும் 53 சேகரிப்புகளும் போன்சாய் ஆசிரியர் மாசரு யமகி என்பவரால், அமெரிக்காவின் தேசிய இருநூற்றாண்டு விழாவை முன்னிட்டு 1976ம் ஆண்டு அருங்காட்சியகத்திற்கு வழங்கப்பட்டது.

ஆர்போரேட்டம் தேசிய போனசாய் மற்றும் பெஞ்சிங் மியூசியத்தில் ஒரு சிறந்த சேகரிப்பாக வைக்கப்பட்டிருக்கிறது. (3-7)

# கவுதமாலா நிலச்சரிவில் பலியானோர் எண்ணிக்கை 122 ஆக உயர்வு

கவுதமாலாவில் ஏற்பட்ட நிலச்சரிவில் 100க்கும் மேற்பட்டவர்கள் பலியாகியுள்ளதாகவும், 300க்கும் மேற்பட்டவர்கள் மாயமாகியுள்ள்தாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய அமெரிக்க நாடான கவுதமாலாவின் சாண்டா கேட்டரினா பினுலா கிராமத்தில் கடந்த 2ம் திகதி பெய்த பலத்த மழையின் காரணமாக நிலச்சரிவு ஏற்பட்டது.

இதில் சுமார் 125 வீடுகள் இடிந்து தரை மட்டமாகின. ஏராளமானோர் மண்ணோடு மண்ணாக புதைந்துபோயுள்ளனர் என்று கூறப்படுகிறது.

அந்த கிராமத்தில் தொடர்ந்து மீட்புப்பணி நடந்து வருகிறது. முதற்கட்டமாக 90 பேரின் உடல்கள்மீட்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் அந்நாட்டின்



பொதுத்துறை வெளியிட்டுள்ள தகவலில் 122 பேர் மரணமடைந்துள்ளதாகவும், 300 க்கும் மேற்பட்டவர்கள் காணாமல் போயுள்ள தாகவும் தெரிவித்துள்ளது.

காணாமல் போனவர்களின் கதி என்னஆனதுஎனதெரியவில்லை.

இருப்பினும், இடிபாடுகளுக்குள் சிக்கியவர்கள் இனி உயிர் பிழைத்திருக்கவாய்ப்பு இல்லை என்றும் பலி எண்ணிக்கை அதிகரிக்க கூடும் என்றும் கூறப்படுகிறது. (3-7)

# பிரான்ஸ் நகரங்களில் வெள்ளம் 16 பேர் பலி பலரை காணவில்லை

பிரான்ஸ் நாட்டில் புயல் காற்றுடன் பலத்த மழை பெய்து வருவதால் நகரங்களுக்குள் வெள்ளம் புகுந்ததில் பலர் காணாமல் போயுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

நேற்று அதிகாலை முதல் பிரான்ஸ் நாட்டின் தென்கிழக்கு பகுதிகளில் புயல் காற்றுடன் கன மழை பெய்து வருகிறது.

மழையின் தீவிரம் அதிகரித்து வந்ததால் இரண்டு நகரங்களில் வெள்ளம் பெருக்கெடுத்து புகுந்ததால் ஏற்பட்ட சேதாரங்களில் இதுவரை 16 பேர் பலியாகியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுளளன.

மேலும், பல நபர்கள் காணாமல் போயுள்ளதால் அவர்களை கண்டுபிடிக்கும் பணியில் மீட்புக் குழுவினர் ஈடுபட்டு வருகின்றனர்.


இது குறித்து நேற்று அவரசர செய்தி வெளியிட்டுள்ள பிரான்ஸ் நாட்டு ஜனாதிபதியான பிராங்கோயிஸ் ஹாலண்டே, வெள்ளம் தாக்கியுள்ள பகுதிகளில் உள்ள மக்கள் எச்சரிக்கையுடன் இருக்குமாறு தெரிவித்துள்ளார். (3-7)

# சர்வதேச மீசை, தாடி திருவிழா

ஆஸ்திரியாவில் நடைபெறும் சர்வதேச மீசை மற்றும் தாடி வைத்திருப்போருக்கான போட்டிக்காக உலகம் முழுவதிலும் இருந்து ஏராளமானோர் வித்தியாசமான அலங்காரத்துடன் குவிந்துள்ளனர்.

வித்தியாசமான மீசை மற்றும் தாடி வைத்திருப்பவர்களுக்கான சர்வதேச மீசை மற்றும் தாடி சம்பியன் போட்டி கடந்த 1990ஆம ஆண்டு முதன் முதலில் நடத்தப்பட்டது.

இதில் ஏராளமானோர் கலந்து கொண்டு தங்களின் வித்தியா



சமான அலங்காரம் மூலம் பார்வையாளர்களை கவர்ந்தனர்.

பார்வையாளர்களிடம் நல்ல வரவேற்பு பெற்றதால் ஆண்டு தோறும் இந்த போட்டி நடத்தப்பட்டு வருகிறது.

இந்நிலையில் ஆஸ்திரியாவின் லியொகேங் பகுதியில் உள்ள அல்பைன் கிராமத்தில் இந்த ஆண்டுக்கான சர்வதேச மீசை மற்றும் தாடி சம்பியன்சிப் போட்டிகள் நடைபெறுகின்றன.

இதில் கலந்துகொள்வதற்காக உலகம் முழுவதிலும் இருந்து ஏராளமானோர் குவிந்துள்ளனர். போட்டியாளர்கள் தங்களின் வித்தியாசமான மற்றும் விசித்திர மீசை மற்றும் தாடி மூலம் பார்வையாளர்களை கவர்ந்து வருகின்றனர். (3-7)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மாணவர்களுடைய கற்றலுக்கான ஊக்குவிப்பை எவ்வாறு வழங்கலாம்

அதிவேகமாக வளர்ந்து வருகின்ற தொழில்நுட்ப வளர்ச்சியும் விஞ்ஞான விருத்தியும் எதிர்கால சந்ததியை தட்டிக்கொடுத்து ஊக்குவிக்கும் சக்தியாக அமைகின்றது. இந்த வகையிலே பாடசாலையிலே மாணவரை கற்றலுக்காக ஊக்குவிக்கின்ற நடவடிக்கை என்பது கட்டாயமானதும், அத்தியாவசியமானதுமான செயற்பாடாகும்.

கற்றல் என்பது தனியாள் ஒருவருடைய நடத்தையில் ஏற்படுகின்ற மாற்றமாகும். ஒரு புதிய திறனை அல்லது புதிய நடத்தையை பெறும் நிலையாகவும் இதனைக் கருதலாம்.

பயிற்சி அனுபவம் ஆகியவற்றின் உதவியால் ஒருவரின் நடத்தையில் நிகழும் நிலையான மாற்றமே கற்றல் எனச் சிறப்பாக அழைக்கப்படுகின்றது. இவ்வாறான கற்றலுக்கு உடலும் உளமும் ஆயத்தமாகியிருக்க வேண்டும். இந்த ஆயத்தத்தினூடாக மாணவர்கள் கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடுவது அவர்கள் பெறும் ஊக்கத்திலே தான் தங்கியுள்ளது.

மாணவர்கள் படிப்பதற்கும் கூட்டாகச் செயற்படுவதற்கும் தமது திறன்களை வெளிப்படுத்துவதற்கும் அவர்களுக்கு அளிக்கப்பட வேண்டிய ஊக்கம் பற்றி ஆசிரியர்களும் பெற்றோர்களும் அறிந்திருக்க வேண்டியது மிக அவசியமாகும்.

ஒருவரின் நடத்தையை ஒரு இலக்கு (றூலிழியி) நோக்கிச் செல்லத் தூண்டும் காரணிகள் பொதுவாக ஊக்கம் (MOTIVATION) எனக் குறிப்பிடுகின்றனர். அதாவது குறிப்பிட்ட ஒரு தேவையை நிறைவேற்றும் வரை ஒருவரிடம் இடம்பெறுகின்ற உள உடலியல் தொழிற்பாடு எனவும் கல்வியில் கற்றல் குறிக்கோளை நோக்கிய மாணவரின் முனைப்பான நடத்தை எனவும் சிறப்பாக குறிப்பிட முடியும்.

ஊக்கம் என்ற பதத்தினுள் ஒருவரின் உள்ளார்ந்த தேவைகள், விருப்பங்கள், விழுப்புக்கள் உள்ளடக்கப்படுகின்றன. கற்றலுக்கு வழி செய்பவர் (A Facilitator of learning) என்ற வகையில் குறிப்பாக ஒவ்வொரு ஆசிரியரும் பயனுள்ள வகையில் மாணவர்கள் இலகுவாக கற்பதற்கான உளவியல் சார்ந்த கற்பித்தல் அணுகுமுறைகளை பயன்படுத்த முயல்வதுடன் ஊக்கம் பற்றிய நிறைவான அறிவினைப் பெற்று அவற்றை நடைமுறையில் பிரயோகிக்க வேண்டும்.



தனிமனிதர் ஒருவரிடம் ஊக்கம் ஏற்படுவதால் அவரின் நடத்தை ஊக்கமுள்ள நடத்தையாக மாறுகிறது. உதாரணமாக பரீட்சையில் சித்தியடைய வேண்டும் உயர் மதிப் பெண்ணைப் பெற வேண்டும் என்ற எண்ணமும் ஊக்கமும் உறுதியோடு கற்கும் நடத்தையைத் தோற்றுவிக்கின்றன. மாணவரின் கற்றலில் உறுதியாக நடத்தை மாற்றத்தை ஏற்படுவதற்கு ஊக்கம் அல்லது ஊக்குவித்தல் அவசியமாகின்றது.

சிறந்த கற்றலுக்கு ஊக்கம் அடிப்படைக்காரணியாகும். ஊக்கம் இன்றேல் கல்வி இல்லை என்று கூட குறிப்பிடலாம். கற்றல் சிறப்பாக அமைய பிள்ளைகளின் உள்ளம் தெளிவாக தொழிற்பட வேண்டும். மாணவர்கள் ஆர்வத்துடன் கற்பதையே ஊக்கம் எனக் குறிப்பிட்டாலும் அவர்கள் எப்போதும் ஊக்குவிக்கப்பட வேண்டியவர்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. மாணவர்களின் தனியாள் வேறுபாடுகளை அறிந்த அவர்களின் சமூக பொருளாதார பின்னணிகளை உணர்ந்து தேவைக்கேற்ப வெவ்வேறு ஊக்கிகளை ஆசிரியர் பயன்படுத்த வேண்டும். ஊக்கல் பற்றி கல்வி உளவியலாளர்கள் பலரும் பல்வேறு கோட்பாடுகளையும் விளக்கங்களையும் அளித்துள்ளனர். இக் கொள்கைகளில் சில ஒன்றுக்கொன்று முரண்பட்டவையாக உள்ளன. வேறு சில் கொள்கைகள் சில பொதுத் தன்மைகள் கொண் டவையாக காணப்படுகின்றன. ஒவ் வொரு கொள்கையிலிருந்தும் சில பொருத்தமான அம்சங்களைத் தெரிவு செய்து மாணவரின் கல்வி முன்னேற்றத்திற்குப் பயன்படுத்துவது சிறப்பானது. கற்பித்தலின் போது அதாவது மாணவரின் கற்றலின் போது ஊக்கப்ப டுத்தும் சில முறைகளை அல்லது உத்திகளை இனி நோக் குவோம்.

முதலிலே குறிக்கோளுடைய கற்பித்தலை ஒரு ஆசிரியர் பின்பற்ற வேண் டும். ஒவ்வொரு வகுப்பிலும் சில கற்றல் குறிக்கோளை அடையக்கூடிய முறையில் ஆசிரியரின் கற்பித்தல் முறை அமைய வேண்டும். நாம் பயனுள்ளவற்றையே கற்றுக் கொண்டிருக்கின்றோம் என்ற உணர்வு மாணவரிடம் வளர்க் கப்பட வேண்டும். நாள் மேற் கொள்ளும் முயற்சியின் மூலம் என்ன குறிக்கோளை அடைய முடியும் என்பதைப் பொறுத்து மாணவனின் ஊக்கம் அதிகரிக்கக்கூடியதாக இருக்கும்.

இரண்டாவது கற்கும் சூழலை உருவாக்குதல் அதாவது மாணவரின் ஆர்வங்களுக்கேற்ப ஆசிரியர்கள் பல்வேறு கற்றல் சூழலை ஏற்படுத்திக் கொடு க்க வேண்டும். பாடசாலையாயினும் சரி வகுப்பறையாயினும் சரி வளமான கற்றல் சூழல் கொண்டதாக அமைந்திருத்தல் வேண்டும். உதாரணமாக பாடங்களை பொறுத்தும் தேவைகளைப் பொறுத்தும் கூடிய புலக்காட்சியை ஏற்படுத்தக் கூடிய சிறந்த மாதிரிகள் பொருத்தமான உண்மைப்பொருட்கள் போன்றவற்றை கற்பித்தல் சாதன மாகப் பயன்படுத்துவது சிறந்தது ஆகும். பாடசாலை வளாகமோ, வகுப்பறை அமைவிடமோ கவின் நிலை கொண்டதாக விளங்குவது கற்றலுக்கான சிறந்த ஊக்கியாகும்.

வாழ்க்கையுடன் இணைத்துக் கற்பித்தல் என்பதும் கற்றலுக்கான அடுத்த ஊக் கியாகும். அதாவது ஆசிரியர் கற்பிக்கும் பாட கருத்துக்களின் மூலம் வாழ்க்கையில் எதிர்காலப் பயன்கள் சுட்டிக் காட்டப்படுவது சிறப்பான ஊக் கியாகின்றது. உதாரணமாக தமிழ் பாடத்திலே இளமையிலே கவிதை, கட்டுரைகளை சிறப்பாக எழுத ஊக்குவிப்பது மாணவர்கள் எதிர்காலத்திலே சிறந்த எழுத்தாளர் ஆவதற்கு சிறந்த அத்திவாரம் ஆகின் றது. அதே போல் ஏனைய ஒவ்வொரு பாடமும் எதிர் கால த்தில் மாணவரின் முன்னேற் றத்திற்கோ மாற்றத்திலோ இட்டுச்செல்லும் என்பது குறிப் பிடத்தக்க ஒன்றாகும். இந்தப் படத்தைக் கற்றால் இந்த அனுகூலம் ஏற்படும் என்ற உள்ளார்ந்த சிந்தனை மாணவரிடத்திலே வளர வேண்டும்.

நிறைகளை பாராட்டி உற் சாகப்படுத்துவதென்பது ஆசிரியரின் ஊக்க செயற்பாட்டில் சிறப்பான தொன்றாகும். சிறிய தவறுகளை மிகைப்படுத்தி விமர்சிக்காமல் மாணவரின் திறமையை பாராட்டுதல் மாணவர் இன்னும் ஊக்கமடைவதற்கு காரணியாகும். சிறிய தவறுகளைத் தவிர்க்கக் கூடிய விமர்சனங்களை வழங்கலாம். இவ்வாறான விமர்சனங்கள் கூட வயது வேறுபாட்டிற் கேற்ப வழங்குதல் மிக முக்கியமான தாகும்.

புகழுரைகள் என்பது மாணவர்கள் கற்றலின்பால் ஈடுபடுவதற்கு சிறப்பான ஊக்கி யாகும். புகழ்ச்சியானது பால், வயது, சூழல் என்பவற்றிற்கேற்ப வழங்கப்பட வேண்டும். சாதாரண மாணவர்களை விட பின் தங்கிய உளக்குறைபாடுடைய மாணவர்களுக்கும் வீட்டில் புறக்கணிக்கப்பட்டு ஆதரவு இல்லை என்ற உணர்வு கொண்ட மாணவர்களுக்கும் பொருத்தமான ஊக்குவித்தல் முறையாகப் புகழ்ச்சி அமைகின்றது. புகழ்ச்சி கூட சரியான விதத்தில் சரியான முறையில் சரியான நோக்கை அடிப்படையாகக் கொண்டு அமைய வேண்டும்.

மாணவர்களின் திறமைகளுக்கேற்ப அவர்கள் வெற்றிகளை ஈட்டிக்கொள்கின்ற தன்மைக் கேற்ப அவர்களுக்கு புகழ்ச்சி வழங்குவது மட்டுமன்றி வெகுமதிகள் வழங்க வேண்டும்.

அச்சிறிய பொருளைக் கையிலே பெறுகிற போது எதிர்காலத்தில் தான் உயர்ந்த வெற்றிச் சிகரத்தி னைப் பெறுவேன் என்ற உத்வேகத்தினை ஏற்படுத்த வேண்டும்.

இவ்வாறாக மாணவ நிலையிலுள்ள எவருக்கும் இந்த கற்றலுக்கான ஊக்குவிப்பு என்பது மிகமிக அவசியமான ஒன்றாகும். நிமிடத்திற்கு நிமிடம் கற்றலுக்கான ஊக்குவிப்பினை வழங்க வேண்டும் என்ற சிந்தனை கற்பிப்போருக்கும் இருக்க வேண்டும்.

திருமதி.கௌரிபுத்திரி கிருபாகரன்
உதவிக்கல்விப் பணிப்பாளர் (தமிழ்)
வலயக்கல்விப் பணிமனை
துணுக்காய்.

## ஆசிரியர் தின நிகழ்

(இருபாலை)

நீர்வேலி சி.சி.தமிழ்க் கலவன் பாடசா யின் ஆசிரி யர் தின நிகழ்வு நாளை புதன் கிழ முற்பகல் 10 மணிக்கு பாடசாலை பிரதான ம பத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் தி. ரவீந் திரநாதன் தலை யில் நடை பெறவுள்ள இந் நிகழ்வில் மாணவர் டைய கலை நிகழ்வுகள்,பாடசாலை நலன் விரு களது நிகழ்வுகள் என் பன இடம் பெறவுள்ள

இதன்போது ஆசியுரையினை சிவஸ்ரீ தி. கராஜக் குருக்கள் வழங்கவுள்ளார் என்ப குறிப்பிடத்தக் கது. (இ-5-1

யாழ். புற்றளை மகா வித்தியாலய ஆசிரி தின நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை கால மணிக்கு நடைபெறவுள்ளது.

வித்தியாலய மாணவத் தலைவி செ. மி தலைவராகப் பங்கேற்கும் இந்நிகழ்வில் பிர விருந்தினராக வடமராட்சிக் கல்வி வலய பிர கல்விப் பணிப்பாளர் யோகசாமி ரவீந்தி கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். (இ-5

## மண்டபத் திறப்புவிழ


(யாழ்ப்பாணம்)

யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரியின் ஆவது ஆண்டு சாரணர் நினைவு தினத் முன்னிட்டும் அமரத்துவம் அடைந்த கல்லூ யின் மாணவரான ஜெயக்குமார் கீர்த்திக என்பவரது ஞாபகார்த்தமாக கட்டப்பட்ட ஞாப ர்த்த மண்டப திறப்பு விழா இன்று செவ்வாய் ழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெறவுள்ள

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தி ாக யா மாவட்ட அரசாங்க அதிபர் நா. நாயக கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக கல்லூரிய முன்னாள் அதிபர் அ.பஞ்சலிங்கம், யா பாண சாரண மாவட்ட ஆணையாளர் செ ஞ்சன் ஆகியோர் கலந்து கொள்வதுடன் கௌ விருந்தினர்களாக யாழ்.மாவட்ட பிரதிக்கல் பணிப்பாளர் கோ.வரதராஜ மூர்த்தி,கல்லூ யின் பழைய மாணவர் அ.ஜெயந்திரன் அ யோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ

## வாகனம் தடம் புரண்ட



வீதித் திருத்த வேலைத்திட்டங்களுக்கு ப படுத்தப்படும் சீமெண்ட் கலவை இயந்திரத் னான பாரவூர்தி ஒன்று நேற்றைய தினம் மு கல் 11 மணியளவில் யாழ்ப்பாண வைத் சாலை முன்பாக உள்ள வாய்க்கால் தரவை தடம் புரண்டுள்ளது.இவ் விபத்தின் போது பார தியைசெலுத்திய சாரதி சிறு காயங்களுக் குள் கியுள்ளார் எனவும் தெரிய வந்துள்ளது. (இ-5-

## வெற்றிட யாழில் நே

முன்னணி தனியார் நிறுவனம் ஒன்றில் 5 வரையான வெற்றிடங்களுக்கு ஆட்களை துக் கொள்வதற்கான நேர்முகத்தேர்வு மக்கள் தொழில் சேவை நிலையத்தின் ஏற் டில் நடத்தப்படவுள்ளது.

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தின் பொது கள் தொழில் சேவை நிலையமானது தொழி காக காத்திருக்கும் இளைஞர் யுவதிகளு தொழில் வாய்ப்புக்களை பெற்றுக்கொடு காக நாடு முழுவதிலும் கிளைகளைக் கொ ள்ள முன்னணி தனியார் கம்பனியிடமிருந்து 5 வரையான தொழில் வெற்றிடங்களைப் பெற்று இவ் வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்பு நேர்மு தேர்வு இம்மாதம் (ஒக்டோபர்) 15ஆம் தி வியாழக்கிழமை காலை 8மணி முதல் மால மணிவரை யாழ்ப்பாணத்தில் நடத்தப்படவுள்ள

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் தின சிறப்புக் கவிதை

## எம் ஆசான்களே

"அ" என்ற சொல்லெடுத்து
அறிவு என்ற பொக்கிசத்தை
அன்போடும் பண்போடும்–எண்ணோடு
எழுத்தையும் கற்றுத்தந்து –கூடவே
நற்பண் புகளையும்–நல் ஒழுக்கத்தையும்
கற்றுத்தந்து
அறிவு என்ற ஆழ்கடலில் நீந்தி
முத்து என்ற அழிவில்லாக்–
கல்விச் செல்வத்தை
அட்சய பாத்திரமேந்தி –வற்றாத அறிவுக்
கடலாய் வந்துதித்த எம் ஆசான்களே!
வாழிய உம் சேவை வாழ்க!வாழ்க!வாழ்க!
கடந்து செல்லும் பொழுதுகளை கூட
தனக் கென்றெண்ணாமல்–இரவுகளைக் கூட
பகலாக வெண்ணி
பள்ளி எனும் பூங்காவனத்திலே
அறிவு எனும் "ஆயிரம் பூக்களை" மலரச்செய்து
பண்போடு பணிவையும் போதித்து
பாரினிலே நாம் உயர்ந்திட
ஏணியாய் எமக்கு வழிகாட்டுபவரும்
எம் ஆசான்களே!

செ.பாஸ்கரன்(ஆசிரியர்)
மு/பாரதி வித்தியாலயம்.விசுவமடு.

## கல்வி தரும் ஆசான்கள் கண்கண்ட தெய்வங்கள்

அறிவுக் கதிர்வீசும்
தரணியிலே நடமாடும்
உயிருள்ள நட்சத்திரங்கள்..
அன்னையின் அன்பை எல்லாம்
அப்படியே மொழிபெயர்த்து
அன்றாடம் நம் முகம் பார்த்து
அற்புதமாய்த் தந்துவிடும்
அடுத்த தாய் தந்தை...
மூட நம்பிக்கைகளை
முளையிலேயே கிள்ளிவிட்டு
மூலதனம் செய்ய
மூளையினை சுட்டிக்காட்டி
மூலைக்குள் முடங்காது வாழ
வளர்ந்து வரும் சமுதாயத்தை
வழிகாட்டுபவர்கள்...
ஆன்மீக வாதிகள்,
அரசியல்வாதிகள் மட்டுமன்றி
புலனாய்வாளர்கள்,நீதிபதிகள் என்று
புது புது துறைகளிலே
மிளிர்ந்திடுவார்...

ப.துதீஸ்குமார்,
நல்லூர்.

# ஆசிரியர்கள் மனமகிழ்வுடன் கடமையாற்ற வழியேற்படவேண்டும்

## இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வாழ்த்து

உருப்படியான சமூகத்தை ஆக்குகின்ற பணி ஆசிரியருக்கு மட்டுமே உரித்தானது. இதற்கு எவரும்உரிமை கோரி விட முடியாது. தந்தை, தாய் உறவினர்கள் எல்லோருக்கும் அப்பால்சென்று மூளை வளத்தைப் பெருக்கி முழு மனிதனாக ஆக்குபவர் ஆசிரியர் மட்டுமே. இதனை கற்றறிவுள்ள அனைவரும் ஏற்றுக்கொள்வர்.

அத்தகைய ஆசிரியர்களை நினைத்து, மதித்து வருடத்தில் ஒருமுறை வணங்கும் நாளே உலக ஆசிரிய தினமாகும். அத்தகைய நாளில எமது தமிழ் பேசும் அனைத்து ஆசிரியர்களுக்கும் எமது உளம் நிறைந்த வாழ்த்துகள் என்றும் உரித்தாகட்டும்.

எமது நாட்டில் வாழும் ஆசிரியர்கள் மனமகிழ்வு இல்லாதவர்களாகவே வாழ்கின்றார்கள். மாறுகின்ற கல்விக் கொள்கைகளும், மாறாமல் இருக்கின்ற சட்டங்களும் அவர்களுக்கு சுமையாகவே இருக்கின்றன.

அரசினால் அறிவிக்கப்பட்ட சம்பள அதிகரிப்போ அன்றி பதவி உயர்வோ இன்னும் வழங்கப்படவில்லை. ஒரு ஆசிரியர் பெறுகின்ற சம்பளம் அவருடைய வாழ்க்கைக்கே போதுமானதாக இல்லை.

இந்த நிலையில் புதிதாக அறிவிக்கப்பட்ட பதவியுயர்வு, சம்பள அதிகரிப்பு ஆகியவற்றை இந்த வருட இறுதிக்குள் வழங்கி ஆசிரியர்களின் பணி சிறக்க உதவுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ஆசிரியர்களின் பதவியுயர்வு தொடர்பாக அவர்களின் நலன்கள் தொடர்பாக அக்கறை கொள்ளவில்லையெனில் எமது சமூகம் அழிவுப் பாதையை நோக்கிச் செல்வதனை எவரும் தடுத்துவிட முடியாது. எந்தவொரு தமிழ் பேசும் ஆசிரியரும் வேதனத்துக்காக வேலைசெய்பவரல்லர். ஆனாலும் அவர்களின் வாழ்வு சிறக்கவில்லை என்றால், அவர்களின் கடமைகளில் தொய்வு நிலை ஏற்படும். ஆகையால் ஆசிரியர்கள் சார்ந்த விடயங்களில் உலக நாடுகளில் உள்ள அணுமுறைகளைப் பின்பற்றி நடந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

எதிர்வரும் 10ஆம் திகதி ஆசிரியர்களுக்கான அதிபர் போட்டிப்பரீட்சை நடைபெறவுளது. அநேக ஆசிரியர்கள் பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணியில் உள்ளனர். பலர் பிறமாவட்டங்களில் கடமையில் உள்ளனர். இவர்களின் பணி வரும் 9ஆம் திகதியே நிறைவடைகின்றது. மறுநாள் அவர்களுக்கான பரீட்சை. எவ்வாறு அவர்கள் பரீட்சை எழுதுவது. இதுதொடர்பில் நாம் மத்திய கல்வி அமைச்சுடன் தொடர்புகொண்டபோதும் அவர்கள் சாதகமான பதில் எதனையும் தரவில்லை. மாறாக குறித்த ஆசிரியர்களை பரீட்சைக் கடமையில் இருந்து இரண்டு நாட்கள் முன்னதாக அறிவித்துவிட்டு விலகிச்செல்லுமாறு அறிவுறுத்துகின்றனர்.

இதுகூட கல்விக் கொள்கைகளுக்கு மாறான விடயம்.

இவை எல்லாம் ஆரோக்கியமான கல்விக்கு வித்திடுமா என்ற கேள்வியையும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கேட்டு நிற்கின்றது.

இவ்வாறு சங்கத்தின் தலைவர் வி.ரி.சகாதேவராஜா, பொதுச்செயலாளர் சரா.புவனேஸ்வரன் ஆகியோர் வெளியிட்ட வாழ்த்துச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-10)

# ...டங்களை நிரப்ப நேர்முகத்தேர்வு

ஆகையால் இந்நேர்முகத்தேர்வுக்கு தோற்ற விரும்பும் க.பொ.த. உயர்தரம் மற்றும் க.பொ.த.சாதாரண தரம் வரை கல்வி கற்ற 27 வயதிற்கு மேற்படாத ஆண்களும் 24 வயதிற்கு மேற்படாத பெண்களும் தோற்றலாம். நேர்முகத்தேர்விற்கு தோற்ற விரும்புவோர் முக்கியமாக தங்கள் கல்விச் சான்றிதழ்கள்,தேசிய அடையாள அட்டை, பிறப்புச்சான்றிதழ், கிராம அலுவலரின் சான்றிதழ் என்பவற்றோடு அவசியமான ஏனைய சான்றிதழ்களுடன் நேர்முகத்தேர்விற்கு தோற்றலாம்.இவ் அரிய வாய்ப்பினை தவறவிடாது பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்வதுடன் மேலதிக விளக்கங்கள் மற்றும் அறிவுறுத்தல்களை 021 221 9359 இலக்க மாவட்ட பொது வேலைவாய்ப்பு சேவை நிலைய அலுவலக தொலைபேசி ஊடாகவோ அல்லது பொதுமக்கள் தொழில் சேவை நிலையத்தில் நேரடியாகவோ பெற்றுக்கொள்ளலாம் என யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் அறிவித்துள்ளார். (இ

## மணிவிழா


புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்தின் மணிவிழா இன்றும் நாளையும் நடைபெறவுள்ளது. இதனைமுன்னிட்டுஇன்று காலை 7.45 மணிக்கு யாழ். ஆயர் தலைமையில் திருப்பலியும் அதனைத் தொடர்ந்து 10 மணிக்கு நடை பவனியும் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். கௌரவ விருந்தினராக வடமாகாண கல்வியமைச்சர் த.குருகுலராஜா கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ். மறை மாவட்ட குருமுதல்வர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம், கார்மேல் கன்னியர் சபை அருட் சகோதரி தெரேசாறனி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)

# இலங்கைத் தமிழர் வரலாறு

## இலங்கை மீது கரிகால சோழன் படையெடுப்பு



05

### பயங்கர போர்

பெரும் படையுடன் துட்டகாமினி வருவது பற்றி அறிந்த எல்லாளன், மந்திரிகளை அழைத்து அவசர ஆலோசனை நடத்தினார்.

துட்டகாமினியைக் கோட்டைக்குள் வரவிடக்கூடாது என்றும் கோட்டைக்கு வெளியே அவனை எதிர்கொண்டு போரிடுவது என்றும் முடிபு செய்யப்பட்டது.

அதன்படி அநுராதபுரம் கோட்டைக்கு வெளியே இருதரப்பு படைகளும் மோதின. போர் பயங்கரமாக நடந்தது. இரத்த ஆறு ஓடியது.

### பட்டத்து யானை

இந்நிலையில் எல்லாளனுக்குத் துட்டகாமினி சவால் விட்டான்.

நாம் இருவரும் நேருக்கு நேர் நின்று போர் புரிவோம். யாருக்கு வெற்றி என்பதை நமது நேரடி போர் தீர்மானிக்கட்டும் என்றான்.

போர் நடந்தபோது எல்லாளனுக்கு வயது 74 துட்டகாமினி இளைஞன் என்றாலும் அவன் விட்ட சவாலை எல்லாளன் ஏற்றுக் கொண்டார்.

இருவரும் பட்டத்து யானைகள் மீது அமர்ந்து போரிட்டனர். எல்லாளன் வயோதிபராக இருந்தாலும் வீரத்துடன் போரிட்டார். என்றாலும் துட்டகாமினியின் யானை தன்னுடைய தந்தத்தால் எல்லாளன் அமர்ந்திருந்த் யானையின் முகத்தில் குத்தி கிழித்தது. யானை கீழே சாய்ந்தது. அதே நேரத்தில் துட்டகாமினி எறிந்த ஈட்டி எல்லாளன் உயிரைக் குடித்தது.

### கோவில்

எல்லாளன் இறந்த இடத்திலேயே அவர் உடலைத் தக்க மரியாதையுடன் துட்டகாமினி தகனம் செய்தான். அதே இடத்தில் கோவில் ஒன்றைக் கட்டவும் ஏற்பாடு செய்தான். இந்த வழியே செல்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் அரசர்களே ஆனாலும் கோவிலைக் கும்பிட்டு விட்டுச் செல்ல வேண்டும் என்று உத்தரவிட்டான்.

எல்லாளனின் வீரத்துக்குத் துட்டகாமினி அளித்த மரியாதை இது.

அநுராதபுரத்தைக் கைப்பற்றிக் கொண்ட துட்டகாமினி அதை மேலும் விரிவுபடுத்த எண்ணமிட்டான்.

ஆனால் அவன் திட்டங்கள் நிறைவேறுவதற்கு முன் பாம்பு கடித்து இறந்து போனான். இவ்வாறு மகாவம்சம் கூறுகிறது. இலங்கை மீது கரிகால சோழன் நடத்திய படையெடுப்பு முக்கியமானது. சங்க காலத்தில் புகழ் பெற்று விளங்கிய சோழ மன்னர்களில் தலைசிறந்தவன் கரிகால சோழன்.

### படையெடுப்பு

அவன் இலங்கை மீது படையெடுத்தான். அங்கு ஆண்ட சிங்கள மன்னனை முறியடித்தான். தன் வெற்றிக் கொடியைப் பறக்கவிட்டான்.

பின்னர் 12000 சிங்களவர்களைச் சிறைப்படுத்தித் தமிழ்நாட்டுக்குக் கொண்டு வந்தான். அவர்களைப் பயன்படுத்தி திருச்சிராப்பள்ளி அருகே காவிரியின் குறுக்கே கல்லணையைக் கட்டினான். உலகத்திலேயே மிகப் பழமையான அணைக்கட்டாக கல்லணை விளங்குகிறது.

### கஜபாகு

கரிகாலன் படையெடுப்பின் போது சிங்கள இளவரசன் கஜபாகு சிறுவனாக இருந்தான். (கஜபாகு என்றால் யானையைப் போன்ற கைகளை உடையவன் என்று பொருள்)

அவன் கி.பி. 112 ஆம் ஆண்டில் இலங்கை அரசனாக முடிசூட்டிக்கொண்டான்.

அவன் ஒருநாள் நகர சோதனைக்குச் சென்ற போது ஒரு வீட்டில் விதவைப் பெண் ஒருத்தி உரத்த குரலில் அழும் சத்தம் கேட்டது. அந்தப் பெண்ணைக் கஜபாகு சந்தித்து. ஏன் அழுகிறாய்? என்று கேட்டான்.

பல ஆண்டுகளுக்கு முன் சோழ மன்னன் ஒருவன் இலங்கை மீது படையெடுத்தான். அந்தச் சோழ மன்னன் சிங்களவர் பலரைச் சிறைப்பிடித்து தமிழ் நாட்டில் அணை கட்டுவதற்காக அழைத்துச் சென்றான்.

அப்படி அழைத்துச் செல்லப்பட்டவர்கள் திரும்பி வரவேயில்லை. சோழனுடன் போன என் பிள்ளைகளும் திரும்பவில்லை. அவர்கள் என்ன ஆனார்களோ என்று நினைத்து அழுதேன் என்றாள் அந்தப் பெண்மணி.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேலுக்கு அரசமுறைப் பயணம் இதுவரை செய்யாத இந்தியா

ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி அரசு முறை பயணமாக இந்த மாத இறுதியில் இஸ்



ரேல் செல்கிறார்.

கடந்த சில ஆண்டுகளில மட்டும் பல்வேறு ஆயுதங்கள், ஏவுகணைகள், ஆளில்லா விமானங்கள் என ஏராளமான இராணுவ தளபாடங்களை இந்தியாவுக்கு, இஸ்ரேல் வழங்கியுள்ளது. எனினும் இந்த பரிமாற்றங்கள் பெரும்பாலும் மறைமுகமாக மேற்கொள்ளப்படுகிறது.

இவ்வாறு இந்தியாவின் நெருங்கிய நாடுகளில் ஒன்றாக இஸ்ரேல விளங்கிய போதும், இந்தியாவின் எந்த ஜனாதிபதியோ, பிரதமரோ இதுவரை இஸ்ரேலுக்கு அரசு முறை பயணம் மேற்கொண்டதில்லை.

இந்த நிலையில் முதல் முறையாக இந்திய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி இஸ்ரேலுக்கு அரசு முறை பயணம் மேற்கொள்கிறார். இந்த மாத இறுதியில் இந்த பயணம் அமையும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இது இரு நாட்டு உறவில் ஒரு மைல் கல்லாக இருக்கும் என கருதப் படுகிறது. (3-7)

## ஜேர்மன் பிரதமர் ஏஞ்சலா பிரதமர் மோடியை சந்திப்பு

(புதுடில்லி)

இந்தியாவிற்கு வருகை தந்துள்ள ஜேர்மன் பிரதமர் ஏஞ்சலா மெர்கலும் பிரதமர் நரேந்திர மோடியும், நேற்று சந்தித்தனர்.

ஜேர்மனி பிரதமர் ஏஞ்செலா மெர்கல் 3 நாள் அரசு முறை பயணமாக இந்தியா வந்துள்ளார். டில்லி விமான நிலையத்தில் ஜேர்மன் பிரதமர் ஏஞ்சலா மெர்கலுக்கு மத்திய நிதித்துறை இணை அமைச்சர் ஜெயந்த் சின்ஹா உள்ளிட்டோர் வரவேற்புஅளித்தனர்.

ஏஞ்சலா மெர்கலுக்கு நேற்று குடியரசுத் தலைவர் மாளிகையில் பாரம்பரிய முறைப்படி வரவேற்பு அளிக்கப்பட்டது. பின்னர் அவர் ராஜ் காட்டில் உள்ள மகாத்மா காந்தி நினைவிடத்தில் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.

இதையடுத்து பிரதமர் மோடியை ஏஞ்செலா மெர்கல் சந்தித்தார். மெர்கலை வரவேற்ற மோடியிடம் அவர் இந்தியாவின் வளர்ச்சிக்கு முழுமையான ஒத்துழைப்பை ஜேர்மனி வழங்கும் என கூறினார்.

முன்னதாக பிரதமர் மோடி தனது டுவிட்டர் பக்கத்தில் மெர்கலை வரவேற்று நமஸ்தே என கூறியிருந்தார்.

இந்தியா - ஜேர்மனி இடையே பாதுகாப்பு, கல்வி, மரபுசாரா எரிசக்தி, அறிவியல் தொழில்நுட்பம், ரயில்வே உள்ளிட்ட பல்வேறு துறைகளில் நட்புறவை மேம்படுத்துவது குறித்து இருவரும் விவாதிக்கவுள்ளனர். (3-7)

## உலகிலேயே உயரமான இந்திய பாதுகாப்பு மையம் அமைப்பு



இந்திய பாதுகாப்பு ஆராய்ச்சி நிறுவனமான டி.ஆர்.டி.ஓ. உலகிலேயே மிக உயரமான இடத்தில் பாதுகாப்பு மற்றும் ஆராய்ச்சி மையத்தை உருவாக்கி புதிய சாதனை படைத்துள்ளது. டி.ஆர். டி.ஓ. ஆராய்ச்சி நிறுவனம் ஜம்மு-காஷ்மீர் மாநிலம் சங்லா மலைப் பகுதியில் கடல் மட்டத்திலிருந்து 17,600 அடி உயரத்தில் திஹார் (Defence Institute of High Altitude Research (DIHAR)) எனும் இராணுவ ஆராய்ச்சி மையத்தை உருவாக்கியுள்ளது. இந்த ஆராய்ச்சி மையத்தை டி.ஆர்.டி.ஓ. தலைவர் எஸ்.கிறிஸ்டோபர் ஆரம்பித்து வைத்தார். இந்த ஆராய்ச்சி மையத்தில் வாழ்வியல் அறிவியல் பற்றிய ஆய்வுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

# மாட்டிறைச்சி சாப்பிட்டவர் இந்தியாவில் அடித்துக்கொலை

## இழப்பீடாக 45 இலட்சம் ரூபா

(புதுடில்லி)

**உத்தரபிரதேசத்தில் மாட்டிறைச்சி சாப்பிட்டதாக அடித்து கொல்லப்பட்டவரின் குடும்பத்துக்கு 45 இலட்சம் ரூபா இழப்பீடு வழங்கப்படும் என்று முதலமைச்சர் அகிலேஷ் யாதவ் அறிவித்துள்ளார்.**



உத்தரபிரதேசத்தின் கௌதம புத்தர் நகர் மாவட்டத்தின் தாத்ரி நகருக்கு அருகே உள்ள பிசாதா கிராமத்தில் வசித்து வந்த இக்லாக் என்பவர், மாட்டிறைச்சி சாப்பிட்டதாக கூறி கிராமத்தினரால் அடித்து கொல்லப்பட்டார். இந்த சம்பவத்தில் படுகாயமடைந்த அவரது மகன் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகிறார்.

நாடு முழுவதும் பெரும் சர்ச்சையையும், அதிர்ச்சியையும் ஏற்படுத்திய இந்த சம்பவம் தொடர்பாக பொலிசார் விசாரணை நடத்தி, விஷால் மற்றும் சிவம் ஆகிய 2 பேரை நேற்று முன்தினம் கைது செய்தனர்.

கொல்லப்பட்ட இக்லாக்கின் குடும்பத்தினரை உள்ளூர் பா. ஜனதா எம்.பியும், மத்திய அமைச்சருமான மகேஷ் சர்மா, டில்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரி வால் உள்ளிட்ட தலைவர்கள் சந்தித்து ஆறுதல் தெரிவித்தனர். காங்கிரஸ் துணைத்தலைவர் ராகுல் காந்தியும் இக்லாக் குடும்பத்தினரை சந்தித்தார்.

மேலும் இக்லாக்கின் குடும்பத்தினர் நேற்று முன்தினம், முதலமைச்சர் அகிலேஷ் யாதவை லக்னோவில் சந்தித்து பேசினார். அப்போது இந்த சம்பவத்துக்கு இழப்பீடாக இக்லாக் குடும்பத்தினருக்கு, 45 இலட்சம் ரூபா வழங்கப்படும் என்று அகிலேஷ் யாதவ் அறிவித்தார்.

இந்த நிலையில் இக்லாக் கொலை தொடர்பாக அப்பகுதியை சேர்ந்த ஊர்க்காவல் படை வீரர் ஒருவரை பொலிஸார் நேற்று கைது செய்தனர்.

இக்லாக் குடும்பத்தினர் மாட்டிறைச்சி உண்டதாக கோவிலில் அறிவிப்பு செய்யுமாறு சாமியாரை வற்புறுத்தியவர் இவர்தான் எனவும், சாமியார் கொடுத்த தகவலின் பேரில் தான் இவர் கைது செய்யப்பட்டார் எனவும் பொலிஸார் கூறியுள்ளனர்.

இதற்கிடையே இக்லாக் கொலை தொடர்பாக நேற்று முன்தினம் 2 பேர் கைது செய்யப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று பிசாதா கிராமத்தின் பல்வேறு பகுதிகளில் கிராமத்தினர் போராட்டம் நடத்தினர். இதனால் அங்கு பதற்றம் நிலவி வருகிறது.

அங்கு சட்டம் ஒழுங்கை மீறும் பெண்களை கட்டுப்படுத்துவதற்காக, கூடுதலாக பெண் பொலிஸாரை பணியில் அமர்த்துமாறு மாவட்ட கலெக்டர் உத்தரவிட்டுள்ளார். மேலும் பார்வையாளர்கள் மற்றும் ஊடகத்தினர் கிராமத்தில் நுழைய கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளது. (3-7)

# நேதாஜி குறித்த ஆவணங்களை வெளியிட காலஅவகாசம் தேவை - பிரித்தானியா

சுதந்திர போராட்டத்திற்காக போராடிய நேதாஜி சுபாஸ்சந்திர போஸ் கடந்த 1945ம் ஆண்டு திடீரென மாயமானார். தாய்வானில நடந்த விமான விபத்தில் அவர் பலியானதாக கூறப்பட்டது. ஆனால் இதனை அவரது குடும்பத்தினர் ஏற்க மறுத்து விட்டனர். நேதாஜி பற்றிய தகவல்கள் பல ஆண்டுகளாக மர்மமாகவே இருந்து வருகிறது. அவரை பற்றிய ஆவணங்களை மத்திய அரசு வெளியிட வேண்டும் என்று நேதாஜியின் குடும்பத்தினர் கோரிக்கை விடுத்து வந்தனர்.



இதற்கிடையே நேதாஜி பற்றிய தகவல்கள் அடங்கிய 13 ஆயிரம் பக்கங்கள் கொண்ட 64 பைல்களை மேற்கு வங்காள முதலமைச்சர் மம்தா பானர்ஜி கடந்த மாதம் வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்தினார். மேலும் மற்றைய ஆவணங்களை வெளியிட மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுததார்.

இந்த நிலையில் நேதாஜி பற்றிய ஆவணங்களை வெளியிட நடவடிக்கை எடுக்குமாறு இங்கிலாந்து அரசை நேதாஜியின் குடும்பத்தினர் வலியுறுத்தி வந்தனர். இதுகுறித்து நேதாஜியின் பேரன் சூர்யகுமார் போஸ் கூறுகையில், 'எனது சகோதரி மாதுரி போஸ், நேதாஜி பற்றிய ஆவணங்களை வெளியிடுமாறு இங்கிலாந்து அரசிடம் நேரில் வலியுறுத்தினார்.

அதற்கு கால அவகாசம் வேண்டும் என்று இங்கிலாந்து அரசு கேட்டுக் கொண்டுள்ளது' என்று தெரிவித்துள்ளார். (3-7)

# குஜராத் மீனவர்கள் 70 பேர் பாகஸ்தான்கடற்படையால்கைது

பாகிஸ்தான் கடல் பகுதியில் அத்துமீறி நுழைந்ததாக 70 குஜராத் மீனவர்களை பாகிஸ்தான் கடற்படை கைது செய்துள்ளது. இது குஜராத் மீனவர்கள் இடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.



பாகிஸ்தான் கடல் எல்லை பகுதியில் அத்துமீறி நுழைந்ததாக 70 குஜராத் மாநில மீனவர்களை பாகிஸ்தான் கடற்படை கைது செய்துள்ளது. குஜராத் மீனவர்களின் 12 படகுகளும் பாகிஸ்தான் கடற்படை பறிமுதல் செய்துள்ளது. பிடிபட்ட மீனவர்கள் மீது வழக்குத் தொடரப்படும் என்று பாகிஸ்தான் தெரிவித்துள்ளது. இந்தக் கைதை பாகிஸ்தான் கடலோரப் பாதுகாப்பு அமைப்பின் செய்தித் தொடர்பாளர் வாஜித் நவாஸ் கூறியுள்ளார்.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் 70 பேரும் பாகிஸ்தானின் தெற்கு சிந்து மாகாணத்திற்கு அருகே கடல் எல்லைக்குள் வந்தபோது கைது செய்யப்பட்டதாக பாகிஸ்தான் தெரிவித்துள்ளது. கைது செய்யப்பட்ட அனைத்து மீனவர்களும் கராசசிக்குக் கொண்டு வரப்பட்டுள்ளனர். அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்என்றும்வாஜித் நவாஸ் கூறியுள்ளார். (3-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா.யோசனைகள் அமுல்படுத்தப்படும்

## அமைச்சர் ராஜித தெரிவிப்பு

(கொழும்பு)

**ஐக்கிய நாடுகள் சபையினால் இலங்கை தொடர்பாக முன்வைக்கப்பட்ட யோசனைகள் முழுமையாக அமுல்படுத்தப்படுமென அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.**

ஊடகம் ஒன்றுக்கு கருத்துரைத்துள்ள அவர், அமெரிக்க அனுசரணையிலான இந்த யோசனையை நிறைவேற்றுவதில் எந்தப் பிரச்சினையும் இருக்கப் போவதில்லை என்று தெரிவித்தார்.

ஐ.நா. யோசனை தொடர்பில் தற்போது மக்களை தெளிவுபடுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

சமாதானத்துக்காக தேசத்தை ஒன்றுபடுத்துவோம் என்ற அடிப்படையில் இது இடம்பெற்று வருகிறது.

இது நிச்சயமாக சாத்தியமான வழியை ஏற்படுத்தும் என்று அமைச்சர் தெரிவித்தார்.

இந்தநிலையில் உண்மையை கண்டறியும் குழு உட்பட்ட நியாயம் தேடும் பணிகளை முன்னெடுக்க ஒன்றரை வருடங்கள் செல்லும் என்று அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மாகாணசபைகளை எதிர்க்கும் ஜேவிபி மற்றும் கம்மன்பிலவின் கட்சியினர் அந்த மாகாண சபைகளில் அங்கம் வகிக்கின்றனர்.

எனவே அந்த மாகாண சபைகளுக்கு ஊடாக அதிகார பரவலாக்கலை செய்வதில் பிரச்சினை எதுவும் இருக்கப் போவதில்லை என்று அமைச்சர் மேலும் சுட்டிக்காட்டினார். (இ-10)

# ஜேர்மனிக்கு விஜயம் செய்யுமாறு ஜனாதிபதி மைத்திரிக்கு அழைப்பு

ஜேர்மன் ஜனாதிபதி ஏஞ்சலோ மர்கெல் இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை தனது நாட்டுக்கு விஜயம் செய்யுமாறு அழைப்பு விடுத்துள்ளதாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

கடந்த வாரம் இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்ட ஜேர்மன் வெளியுறவுத்துறை அமைச்சர் பிராங்க் வோல்டர் ஸ்டெயின் மேயர் மூலமாக இந்த அழைப்பு அனுப்பப்பட்டிருக்கிறது.

ஜேர்மன் ஜனாதிபதியின் இந்த அழைப்பிதழை ஏற்றுக்கொள்வதாகவும் தனது விஜயத்துக்கான பூர்வாங்க ஏற்பாடுகளை விரைவில் மேற்கொள்ளவுள்ளதாகவும் ஜனாதிபதி அமைச்சர் ஸ்டெயின் மேயரிடம் தெரிவித்துள்ளதாகவும் ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த காலத்தில் ஐரோப்பிய யூனியன் இலங்கைக்கு வழங்கிய ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகையை இரத்துச்செய்திருந்தது. அந்த யூனியனில் அங்கம் வகிக்கும் முக்கிய நாடுகளில் ஒன்றான ஜேர்மனியின் உதவியுடன் இழந்த ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகையை மீண்டும் பெற்றுக் கொள்ள இலங்கை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வரும் இந்த வேளையில், ஜனாதிபதியின் ஜேர்மன் விஜயம் அந்த சலுகையை மீண்டும் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்தும் என அரசியல் அவதானிகள் கருத்து தெரிவித்துள்ளனர்.


இலங்கையின் ஏற்றுமதிகளில் சுமார் 5 சதவிகிதத்தைக் கொள்வனவு செய்யும் ஜேர்மனி, உலக நாடுகள் மத்தியில் இலங்கையின் ஏற்றுமதி வருமானத்தை ஊக்குவிக்கும் ஐந்தாவது பெரிய சந்தையாக விளங்குகிறது.

கடந்த வருடத்தில் ஜேர்மனி இலங்கையிடமிருந்து பெற்ற ஏற்றுமதிகளின் மொத்தப் பெறுமதி 824 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும். இவ்வருடத்தில் அந்தப் பெறுமதியை ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரித்துக்கொள்ள இலங்கை அரசு முயற்சி செய்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

## தென்னிந்திய தமிழ் திரைப்படங்களில்

# போதைப்பொருள் பாவனை தொடர்பான விளம்பரப்படுத்தல் குறித்த ஆய்வறிக்கை

(கொழும்பு)



மதுபானம் மற்றும் போதைப் பொருள் தகவல் நிலையமானது ஒக்டோபர் முதலாம் திகதி உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு விசேட ஊடகவியலாளர் மாநாடொன்றை கடந்த 30ஆம் திகதி அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடத்தியது. குறிப்பிட்ட மாநாட்டின் போது ஜூன் மாதத்திலிருந்து செப்டெம்பர் மாதம் வரை வெளியான தென்னிந்திய தமிழ் திரைப்படங்களில் சிறுவர்களை மதுசாரம் மற்றும் சிகரெட் உட்பட ஏனைய போதைப் பொருள் பாவனைக்கு ஏமாற்றியிருக்கும் விதம் தொடர்பிலான ஆய்வறிக்கை வெளியிடப்பட்டது.

அந்த ஆய்வறிக்கையில் பின்வரும் விடயங்கள் குறிப்பிடப்பட்டிருந்தன. 18 படங்களிலும் மொத்தமாக சிகரெட் மற்றும் மதுசார வகைகளை விளம்பரப்படுத்திய நேரம் 144.24 நிமிடங்கள். குறிப்பிட்ட காலப்பகுதியில் வெளியான திரைப்படங்களின் மொத்த நேரம் 2349 நிமிடங்கள். இந்த நேர அளவானது ஒரு தனி திரைப்படத்திற்குரிய நேர அளவு என்பது குறிப்பிடத்தக்கது.

18 திரைப்படங்களில் 17 திரைப் படங்கள் மதுசாரம் சிகரெட் உட்பட ஏனைய போதைப் பொருட்களை விளம்பரப்படுத்தியிருக்கின்றன. "இது என்ன மாயம்" என்ற திரைப் படம் மாத்திரமே எந்த விதமான போதைப்பொருள் விளம்பரங்களும் இல்லாமல் வெளிவந்த திரைபடம் என்பது குறிப்பிடத்தக்கது.

மொத்த திரைப்பட நேரத்தில் சாராயம் 48 நிமிடங்கள், சிகரெட் வளம்பரமாகியிருக்கும் நேர அளவு 46.06 நிமிடங்கள், பியர் 46.12 நிமிடங்கள், ஏனைய போதைப் பொருட்கள் 02 .04 நிமிடங்களும் விளம்பரமாகியிருக்கின்றன.

மூன்று மாத காலப்பகுதியில் மட்டும் 18 திரைப்படங்கள் வெளிவந்த அதே நேரத்தில் கூடுதலான தந்திரோபாயங்களை பயன்படுத்தி மதுசாரம் மற்றும் சிகரெட் போன்றவைகளும் விளம்பரப் படுத்தப்பட்டுள்ளன. மொத்த நேரத்தில் காட்சிகளில் விளம்பரப்படுத்திய வீதம் 57.4%, பொதுவான வார்த்தைகளில் விளம்பரப்படுத்திய வீதம் 14.2%, நகைச்சுவையின் மூலம் வார்த்தைகளில் விளம்பரப்படுத்திய வீதம் 11.6%, விசேட வார்த்தைகளின் மூலம் விளம்பரப்படுத்திய வீதம் 7.4%, பாடல் வரிகளின்மூலம் விளம்பரப்படுத்திய வீதம் 11.6%.

ஆய்வு முடிவுகள் பற்றி ADIC இன் நிறைவேற்றுப் பணிப்பாளர் GGJ சுமனசேகரவும், திரைப்பட விளம்பரங்கள் சிறுவர்களைக் கவரும் விதம் பற்றி சிரேஷ்ட உளநல வைத்தியர் ஆ.கணேசனும், புகைத்தல் மற்றும் மதுசார பாவனையினால் ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பாக வைத்திய கலாநிதி அனுஷாந்தனும், திரைப்பட, ஊடக விளம்பரங்கள் மூலம் சிறுவர்கள் ஏமாறுவதைத் தடுக்க சமூகத்தினால் மேற்கொள்ளக் கூடிய நடவடிக்கைகள் தொடர்பாக தேசிய சமூக அபிவிருத்தி நிறுவக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எஸ்.ஜீவசுதனும் சிறப்புரையாற்றினர். மேலும் குறிப்பிட்ட நிகழ்வின் போது போதைப் பொருள் சம்பந்தமான தகவல்களை உள்ளடக்கிய "நிதர்சனம்" என்ற பத்திரிகையொன்றும் வெளியிடப்பட்டது. (இ)

# இன்று ஒரு தகவல்

## வாழ்க்கையை ஜெயிக்கலாம் வாருங்கள்!

வாழ்க்கை என்பது வெறும் சம்பவங்களின் தொகுப்பு அல்ல. அது உண்மையைத் தேடும் முயற்சி. அறியாமையில் இருந்து அறிவை நோக்கிய பயணம். ஆனால் அது எல்லோருக்கும் ஒரே மாதிரி வாய்ப்பதில்லை. சிலருக்குப் பாதை கரடுமுரடானது. சிலருக்கோ பாதையே இல்லாத காடுமேடானது. மிகச் சிலருக்கே அது விமானப்பயணம். இந்த அவசியமான பயணத்துக்கு ஒரு கைகாட்டி அல்லது வழிகாட்டி கிடைத்தால் ஒரு நிம்மதி இருக்கும். இந்த வழிகாட்டுதலைத்தான் கீதை செய்கிறது.

கீதையின் முதல் அத்தியாயத்தில் கிருஷ்ணனை அர்ச்சுனன் ஏவல் கொள்கிறான். நிறைவான பதினெட்டாம் அத்தியாயத்தில் கண்ணா உம்முடைய ஏவலை நான் பணிந்து செய்வேன் என்று நிறைவு செய்கிறான். தன் விருப்பப்படி இறைவன் (உலகம்) இருக்கவேண்டும் என்கிற அகங்காரத்தில் கீதை தொடங்கியது. அவனது விருப்பப்படி நாம் வாழ்வதே வழிமுறை என்கிற தெளிவில் கீதை நிறைவடைகிறது. நம் விருப்பப்படியே எல்லாம் நடக்கவேண்டும் என்று சிறுபிள்ளைத்தனமாக ஆசைப்படுகிறோம். தினம் தோறும் தீபாவளியாக இருந்தால் குழந்தைகட்கு மகிழ்ச்சிதான். அது சாத்தியம் இல்லை. தகப்பனாலும் தாங்க முடியாது.

அலுவலகத்திற்குப் போகாமலேயே சம்பளம் வீட்டுக்கு வந்துவிட்டால் பல பேருக்கு மகிழ்ச்சிதான். அது நியாயம் இல்லை. ஒருதேசம் அதைத்தாங்காது. நாம் நினைக்கிறபடியே எல்லாம் நடக்காதா என்ற சிறு பிள்ளைத்தனமான ஆசையோடு வாழ்வில் அடி எடுத்து வைக்கிறோம். அது சாத்தியமில்லை. இறைவன் வகுத்துக் கொடுத்தபடி வாழ்வது தான் சாத்தியம்–சரி–சத்தியம் என்று இறுதியில் தெளிவு பெறுகிறோம்.

"அச்யுதா.... இருவர் படைகளுக்கு இடையில் என்தேரை நிறுத்து. யான் யாரோடு யுத்தம் செய்ய வேண்டும் என்பதையும் போரை விரும்பி நிற்பவர் யார் என்பதையும் கவனிக்கிறேன்" என்று இறைவன், தன் விருப்பப்படி நடக்கவேண்டும் என்ற அர்ச்சுனன் கூற்றோடு தொடங்கிய கீதை, "அச்யுதா... மயக்கம் ஒழிந்தது. உம் அருளால் தெளிவு பிறந்தது. ஐயம் இல்லை. உறுதி பெற்றேன். உமது சொற்படி செய்வேன்" என்ற கூற்றோடு கீதை ஏறத்தாழ நிறைவுற்றது. இயற்கையின் ஏற்பாட்டுக்கும் நமது விருப்பத்துக்கும் உள்ள இடைவெளியைச் சிக்கல் இன்றி நிரப்ப கீதை, கற்றுக்கொடுக்கிறது.

"கடவுளின் விருப்பப்படி நடப்பது" என்றதும் கையில் பிரம்புடன் நிற்கிற ஆசிரியருக்குப் பயப்படும் சிறு பிள்ளைத்தனமாக நட என்று கீதை மிரட்டவில்லை. இயற்கை ஒழுங்கைப் புரிந்து கொண்டு தன்னைத்தானே கட்டுப்படுத்தி நிறைவான மனோநிலையில் வாழும் உயர்ந்தவாழ்க்கை முறையே கடவுளின் விருப்பப்படி நடத்தல் என்பதைக் கீதை புரிய வைக்கிறது. கடவுளைப் பற்றிய சிந்தனை தன்னம்பிக்கை, சுயமுயற்சி ஏன், சுய மரியாதைக்கே விரோதம் என்பது சிலரது குற்றச்சாட்டு. தவறு..தவறு...தவறு.

"தன்னைத் தன்னாலே உயர்த்திக் கொள்க. தன்னை இழிவுறுத்தலாகாது. ஏன் என்றால் தானே தனக்குப் பகை தானே தனக்கு நண்பன்" என்று கீதை முழங்குகிறது. தன் வாழ்வின் ஒவ்வொரு தோல்விக்கும் ஒவ்வொரு தலையைத் தடவுகிற மூடர்களைக் கீதை கண்டிக்கிறது.

என்னைவிட எனக்கு இனியவர் யார்? என் முன்னேற்றத்தில் என்னைவிட அக்கறை காட்டுவது வேறு யாராக இருக்க முடியும். பூமி எனக்கு உடம்பைக் கொடுத்தது. ஆகாசம் எனக்கு மூச்சைக் கொடுத்தது. இரண்டும் சேர்ந்து வாழ்க்கை கொடுத்தது. இந்த வாழ்க்கையை மேலும் மேலும் குழப்பிக் கொண்டு துன்பப்படாது வாழ விரும்புகிறவர்கள் தன்னம்பிக்கையுடன் கீதையின் படி வாழ்வது உத்தமம். "தான்" என்பது சரீரம் என்கிற வரை அது அகங்காரம். அதுவே ஆன்மா என்றுணர்தல் பெருஞானம்.

எல்லாமே ஆன்ம சொரூபம் என்பதை உணர்ந்து கொண்டால் உயர்வு, தாழ்வு, பகை போன்ற பேதங்கள் இல்லை. ஆனால் ஆன்மாவையும் உடம்பையும் கட்டியிருப்பது குணங்கள். கண், மூக்கு போன்ற கருவிகளால் ஆன மனிதர்களில் ஒருவருக்கும் மற்றொருவருக்கும் என்ன வேறுபாடு? குணங்கள். இவர் கோபக்காரர்... அவர் சோம்பேறி... இவர் சாந்தமானவர் என்று குணங்களைக் கொண்டு தானே மனிதர்களைப் பாகுபடுத்திப் பார்க்கிறோம்?

கண்ணாடியில் அடிக்கடி முகம் பார்ப்பது போல் ஞான நூல்களில் அகத்தைப் பார்த்துச் சரிசெய்து கொள்பவன் விவேகி. சின்னச்சின்ன மாற்றங்கள் பெரிய பெரிய வெற்றிகளை விளைவித்த வரலாறுகள் உண்டு. முயற்சியும் பயிற்சியுமே நம்மை மாற்றி அமைக்கும். நம் மீது நமக்கே வெறுப்பு வரும் தாழ்வான வாழ்க்கையில் இருந்து வெளியேறுவோம். வெற்றி நடைபயில ஒரு ராஜபாதை நமக்காகக் காத்திருக்கிறது.

கர்மயோகத்தைப் பூமியும் ஞான யோகத்தைச் சூரியனும் பாடம் நடத்துகிறது. படித்துப் பார்க்கலாம் வாருங்கள். வெளியே நடத்தும் வீணான போராட்டங்களைக் குறைத்து உள்ளே நிகழ்த்த வேண்டிய ஞான யுத்தத்தைத் தொடங்குவோம், வாருங்கள்! வாழ்க்கையில் ஜெயிப்பது பெரிதல்ல. வாழ்க்கையை ஜெயிக்கலாம் வாருங்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் சினிமா வரலாறு

20

## மூன்று தீபாவளிகளைக் கண்ட "ஹரிதாஸ்"

இடைவேளைக்குப் பின் முனிவரால் சபிக்கப்பட்டு இரண்டு கால்களையும் இழந்து பெற்றோர் பாதங்களை சரண் அடைந்து மீண்டும் கால்களைப் பெற்று பக்திமானாக மாறுகிறார்.

இந்த மாறுபட்ட வேடத்தில் அதி அற்புதமாக நடித்தார்.

பாகவதர் வாழ்விலோர் திருநாள் என்று பாடிக்கொண்டே வெள்ளைக் குதிரையில் வரும் முதல் காட்சியே ரசிகர்களின் கைத்தட்டலைப் பெற்றது.

"மன்மத லீலையை வென்றார் உண்டோ" என்ற பாடலை பாகவதர் பாட டி.ஆர் ராஜகுமாரி ஆட அந்தக் காட்சியைக் கண்ட ரசிகர்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தார்கள்.

"அன்னையும் தந்தையும் கிருஷ்ணா முகுந்தா" என்னுடன் தனில் ஈமொய்த்த போது நிஜமா இது நிஜமா முதலான பாடல்கள் செவியில் அமுதத்தைப் பாய்ச்சின.

பாடல்களை பாபநாசம் சிவன் எழுத ஜி.ராமநாதன் இசை அமைத்திருந்தார்.

இளங்கோவன் வசனம் எழுத சுந்தர் ராவ் நட்கர்னி டைரக்ட செய்திருந்தார்.

தொழில் நுட்பத்திலும் இப்படம் சிறப்பாக அமைந்திருந்தது.

**ராஜகுமாரி**

இந்தக் காலட்டத்தில் தமிழ்ப் பட ரசிகர்களின் "கனவுக் கன்னி"யாகவும் தமிழ்ப்பட உலகின் நம்பர் 1 நடிகையாகவும் திகழ்ந்த டி.ஆர் ராஜகுமாரி பெரும்பாலும் கவர்ச்சிகரமான வில்லி வேடத்தில் நடித்து வந்தார்.

"ஹரிதாஸ்" படத்திலும் வில்லியாக-தாசி ரம்பாவாக நடித்தார்.

பாகவதரின் மனைவியாக பிரபல பாடகி என்.சி.வசந்தகோகிலம் நடித்தார். என்.எஸ் கிருஷ்ணன் -டி ஏ.மதுரம் நகைச்சுவை பிரமாதமாக அமைந்தது.

முதல் காட்சியல் ஒரு பெண்ணை பாகவதர் குதிரை மீது அமர்ந்த படி துரத்திச் செல்வார்.

அந்த ஒரே காட்சியில் நடித்த பெண் பிறகு பிரபல நடிகையானார்.

அவர்தான் பண்டரிபாய்!



ஹரிதாஸ் படத்தில் பாகவதர்- டி.ஆர்.ராஜகுமாரி

டி.ஆர் ராஜகுமாரியின் தோழிகளில் ஒருவராகத் தோன்றிய டி ஏ. ஜெயலட்சுமி பின்னர் நாம் இருவர் படத்தின் கதாநாயகியானார்.

கதை, இசை, நடிப்பு, டைரக்ஷன் எடிட்டிங், ஒளிப்பதிவு என சகல அம்சங்களிலும் "ஹரிதாஸ்" சிறந்து விளங்கியது. 11 ஆயிரம் அடிக்குள் முடிக்க வேண்டியிருந்ததால் டைரக்டரும் எடிட்டருமான சுந்தர்ராவ் நட்கர்னி திறமையாக எடிட் செய்து படத்துக்கு விறுவிறுப்பை ஏற்றியிருந்தார்.

படம் மெகா சுப்பர் ஹிட் படமாக அமைந்தது. தியேட்டர்களில் எல்லாம் திருவிழா கோலம்.

அப்போதெல்லாம் டிக்கெட் வாங்குவதற்கு கியூ வரிசையெல்லாம் கிடையாது.

குஸ்தி போட்டுத்தான் டிக்கெட் வாங்க வேண்டும்.

**ஒரே நேரத்தில் 10 படங்கள்**

ஹரிதாஸ் படத்தின் மூலம் பாகவதரின் புகழ் விஸ்வரூபம் எடுத்தது.

ஒரே நேரத்தில் ஒரு படத்தில் மட்டும் நடிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்த பாகவதர் ராஜயோகி, வால்மீகி, பில்கணன் ஸ்ரீமுருகன் உட்பட 10 படங்களில் நடிக்க ஒப்பந்தம் ஆனார்.

இவற்றில் ராஜயோகி உட்பட ஒரு சில படங்களில் படப்படிப்பும் ஆரம்பமாகி விட்ட நிலையில் பாகவதர் விதியின் பிடியில் சிக்கினார்.

**லட்சுமி காந்தன் கொலை**

சினிமா நடிகர், நடிகைகள் பற்றி அவதுறாக ஆபாசமாகவும் எழுதி வந்த இந்துநேசன் வார இதழில் ஆசிரியர் லட்சுமிகாந்தன் ரிக்ஷாவில் போகும் போது 1944 நவம்பர் 8ஆம் திகதி கத்தியால் குத்தப்பட்டார்.

(தொடரும்)

# ஆத்ம ஞானத்தைத் தேடி


ஆன்மீகம் 290

## அஹங்காரத்தை விடுதல்

அஹங்காரம் இருக்கும் பொழுது உங்களால் எப்பொழுதும் ஒரு சீராக அதே ஆழமான உணர்வுடன் நேசிக்க முடியாது. உங்கள் அன்பு வெகுவாக உங்களைப் பொறுத்து இருக்கும். அது இரண்டு எல்லைகளுக்கிடையில் ஊசலாடிக் கொண்டிருக்கும்.

குருமார்களுடைய உடல் மொழியைக் கவனியுங்கள். தெய்வீக அன்புடன் ஒத்திசைந்து இருப்பது என்றால் என்ன என்பதைத் தெரிந்து கொள்வீர்கள். பிரபஞ்ச இருப்புத் தன்மையுடன் இசைந்து செல்வதற்கு சுலபமான வழி குருவானவர் எப்பொழுதும் பிரபஞ்ச இருப்புத் தன்மையுடன் இசைவுடன் இருக்கிறார். அவர் எப்பொழுதும் அவர் முன் இருப்பவர் யார் என்ற பாரபட்சமின்றி அன்பைப் பரப்பிக் கொண்டிருக்கிறார். அவருடைய உடல் மொழியைக் கவனிக்கும் பொழுது அதன் பின்னால் இருக்கும் தன்மையை நீங்கள் கிரஹித்துக் கொள்வீர்கள்.

நீங்கள் சில காலம் குருவை கவனித்து வந்தீர்களானால் அவர் எவ்வாறு பிரபஞ்ச இருப்புத் தன்மையுடன் இசைந்து மிகவும் அழகாக கவிதை ரசம் பொங்க மிகவும் ஒருமித்து ஒரு நதியைப் போல பிரவகித்துக் கொண்டிருக்கிறார் என்பதை உங்களால் உணர முடியும். அவருடைய ஒவ்வொரு செயலும் பிரபஞ்ச இருப்புத் தன்மையுடன் மிகவும் சரியாக ஒத்துப் போகிறது. அதனால்தான் அவரைக் கவனிப்பது மிகவும் அற்புதமான ஒரு விடயமாக இருக்கிறது. வெறுமனே குருவை கவனிப்பதன் மூலமே, பிரபஞ்ச இருப்புத்தன்மையின் அழகையும் அது பிரவகிப்பதையும் உணர்ந்தும் புரிந்து கொள்ள முடியும்.



ஒரு குரு அஹங்காரமற்றிருப்பதால் அவர் தடைகளின்றி பிரவகித்துச் செல்கிறார். அவரிடம் நான் மற்றும் எனது என்னும் உயர்வில்லையாதலால் அவர் பிரவகித்துச் செல்கிறார். அவர் அன்பைத் தவிர வேறெதையும் பரப்பாததால் குணப்படுத்துகிறார்.

குணப்படுத்தல் என்பது அடர்த்தி மிக்க அன்பைத் தவிர வேறெதுவும் இல்லை. அதனால்தான் நாம் மீண்டும் மீண்டும் குருமார்களின் அற்புதமான குணப்படுத்தும் ஆற்றல்களைப் பற்றிக் கேள்விப்பட்டுக் கொண்டிருக் கிறோம். அதனால்தான் குருமார்கள் கடவுளாகப் பார்க்கப்படுகிறார்கள். மிகவும் தெளிவாக இருங்கள். குருமார்கள் மட்டுமே வாழும் கடவுள்கள். அவர்கள் இறுதியான சக்தியின் உச்சபட்ச வெளிப்பாடு.

அதனால் கடவுளுடன் எவ்வாறு தொடர்பு ஏற்படுத்திக் கொள்வது என்ற கவலையை நிறுத்துங்கள். பிரபஞ்ச இருப்புத் தன்மையுடன் இசைவாக இருக்க ஆரம்பியுங்கள். கடவுளாகி விடுங்கள்.

ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள்... உங்களால் பிரபஞ்ச இருப்புத் தன்மையை வெல்ல முடியாது. நீங்கள் பிரபஞ்ச இருப்புத் தன்மையால் வெல்லப்பட மட்டுமே முடியும். உங்களுடைய அஹங்காரம் அனைத்தையும் இழந்து விட்டீர்களானால் நீங்கள் வெல்லப்பட்டு விட்டீர்கள் அவ்வளவுதான்! நீங்கள் கடவுளுக்கு இசைவாய் இருக்கிற கருவறையாகிவிட்டீர்களானால் அவர் உங்களிடம் குடிகொண்டிருப்பார்.

(தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேசத்தை இணைத்து விசாரணை செய்யும் நிலை

## அமைச்சர் சம்பிக்க தெரிவிப்பு

(கொழும்பு)

**இலங்கையில் வாழும் தமிழர்களின் நம்பிக்கையை வென்றெடுக்கும் வகையில், சர்வதேசத்தை எம்முடன் இணைத்துக்கொண்ட ஒரு விசாரணையை செயற்படுத்த வேண்டியுள்ளது. என ஜாதிக ஹெல உறுமயவின் தலைவரும் அமைச்சருமான சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.**

குறுகிய காலத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க செய்து காட்டிய எதையும் மகிந்தவினால் செய்ய முடியாமல் போய்விட்டது. நாட்டுக்கு எதிராக வெளிவரவிருந்த ஐ.நாவின் பலமான அழுத்தங்களை சமாளித்து நாட்டையும் மக்களையும் ரணில் காப்பாற்றியுள்ளார் எனவும் அவர் தெரிவித்தார்.

ஆட்சி மாற்றம் ஏற்பட்டிருக்காவிடின் ஐ.நாவின் செயற்பாடுகள் மிக மோசமானதாக அமைந்திருக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானம் இலங்கைக்கு சாதகமானதாக அமைந்துள்ளதா என வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் இறுதி பிரேரணை எவ்வாறு அமைந்துள்ளது என்பது இன்று அனைவருக்கும் தெரிந்துவிட்டது.

இலங்கை தொடர்பில் கடுமையான நடவடிக்கைகளை வலியுறுத்தி ஐக்கிய நாடுகள் சபை தமது இறுதி அறிக்கையை வெளியிடும் என்பதே பெரும்பாலான தரப்பின் கருத்தாக அமைந்தது.

குறிப்பாக ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் மூலம் தொடர்ச்சியாக முன்வைக்கப்பட்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுகள் தொடர்பில் இம்முறை மோசமான கட்டளைகளை ஐ.நா. பிறப்பிக்கும் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் அவ்வாறு எந்தவித நடவடிக்கைகளையும் இம்முறை ஐ.நா. மேற்கொளளவில்லை. ஆனால் இலங்கை தொடர்பில் கடுமையான அழுத்தங்களை பிறப்பிக்கக்கூடிய வாய்ப்புகள் அதிகமாகவே காணப்பட்டன என்பதும் உண்மையே யாகும்.

இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டிருக்காவிடின் இன்று எமக்கு நேர்ந்திருக்கும் நிலைமை மிக மோசமானதாகவே அமைந்திருக்கும்.

அதேபோல் இலங்கையில் இடம்பெற்றதாக கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் அப்போதே ஏதேனும் விசாரணைகளை நடத்தியிருந்தால் இன்று நாம் சர்வதேசத்தின் முடிவை எதிர்பார்க்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்காது.

இன்று சர்வதேசம் எமது இராணுவ வீரர்களை சந்தேகக்கண்கொண்டு பார்க்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

இலங்கையில் வாழும் தமிழர்களின் நம்பிக்கையை வென்றெடுக்கும் வகையில் ஒரு உள்ளக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியர்து உள்ளது. இவை அனைத்தையும் நிரூபிக்க சர்வதேச ரீதியில் அல்லது சர்வதேசத்தை எம்முடன் இணைத்துக்கொண்ட ஒரு விசாரணையை செயற்படுத்த வேண்டியுள்ளது.

உண்மையிலேயே இவ்வாறானதொரு செயற்பாட்டை நாம் விரும்பவில்லை.

எமது நாட்டில் நடைபெற்ற செயற்பாடுகள் தொடர்பில் நாமே தீர்வு காண வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும்.

எனினும் ஆரம்பத்தில் இருந்தே நாம் உள்ளக பொறிமுறைகளை சரியாக நடைமுறைப்படுத்தியிருந்தால் இன்றும் உள்ளக பொறிமுறைகளுக்கு அமையவே அனைத்து விசாரணைகளையும் முன்னெடுத்திருக்க முடியும். கியூபா எவ்வாறு தனித்துவ செயற்பாடுகளில் வெற்றிகண்டதோ அதே போல் நாமும் பலமான தனித்துவ நாடாக செயற்பட்டிருக்க முடிந்திருக்கும்.

ஆனால் முன்னைய அரசாங்கம் யுத்தத்தை வியாபாரமாக மாற்றி நாட்டில் இனவாதத்தை முன்னெடுத்ததாலேயே இன்று நாம் அனைவரும் சர்வதேசத்தின் கட்டளைகளை தட்டிக் கழிக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | சாவகச்சேரி | கிளிநொச்சி | சுன்னாகம் | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 60 | 60 | 60 | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 90-100 | 100 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 140 | 100 | 160 | 160 | 160 | 160 |
| தக்காளி | 80 | 100 | 100 | 100 | 80 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 50 | 40 | 50 | 50 |
| கோவா | 80 | 40 | 60 | 60 | 80 | 60 |
| கரட் | 100 | 100 | 80 | 100 | 60-120 | 60 |
| பூசணி | 40 | 40 | 30 | 50 | 40 | 30 |
| புடோல் | 50 | 40 | 60 | 80 | 40 | 40 |
| வாழைக்காய் | 60 | 50 | 50 | 60 | 50 | 60 |
| சின்ன வெங்காயம் | 110 | 120 | 100 | 120 | 110 | 90 |
| பெரிய வெங்காயம் | 100 | 140 | 110 | 120 | 100 | 120 |
| பாகற்காய் | 100 | 100 | 90 | 120 | 140 | 80 |
| வெண்டிக்காய் | 60 | 40 | 60 | 100 | 60 | 50 |
| கருணைக் கிழங்கு | 80 | 40 | 70 | 80 | 80 | 80 |
| பயற்றங்காய் | 60 | 40 | 80 | 120 | 70 | 70 |
| லீக்ஸ் | 70 | 60 | 80 | 80 | 80 | 80 |
| பீற்றூட் | 40 | 20 | 50 | 50 | 40 | 40 |
| கறிமிளகாய் | 80 | 100 | 110 | 120 | 100 | 100 |
| முருங்கைக்காய் | 80 | 40 | 100 | 80 | 100 | 100 |
| போஞ்சி | 150 | 200 | 160 | 160 | 180 | 160 |
| கத்தரிதம்புள்ள | 60 | 40 | 40 | 50 | — | 50 |
| கீரை - 1 பிடி | 30 | 10 | 20 | 30 | 30 | 30 |
| தேசிக்காய் | 300 | 250 | 180 | 300 | 240 | 180 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 25-60 | 40 | 40-50 | 50 | 50 |
| இராசவள்ளி | 200 | 250 | — | — | — | — |
| வெங்காயப்பூ | 200 | 150 | — | — | 140 | 140 |
| முள்ளங்கி | 50 | 40 | 60 | 80 | 40 | 40 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 30 | 30 | 30 | 25 |
| வல்லாரை | 10 | 10 | 20 | 20 | 10 | 20 |

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 509

விது விது




காஜா கல்யாணி




பேரின்பநாயகம் பிரதீப்





டி வில்லியர்ஸ் டி சஜி




நிக்கம் சேகா





கிரி செல்வராஜ்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய அரசின் சிங்க - ஆசனத்தின்கீழ் நேரக்கணிப்புடன்கூடிய வெடிகுண்டு?


பலத்த ஆயுதமயப்பட்டதும் மிகுந்த ஆபத்தானதும் பாசிச மற்றும் இன அடிப்படைப் பயங்கரவாத அமைப்பொன்றை அழித்தொழிப்பதற்கான படைத்துறை தொடர் நடவடிக்கை ஒன்றை இலங்கை அரசும் அதன் இராணுவப் படைகளும் நீடித்து நடத்திய விதம் பற்றியும் அதன்போது இடம்பெற்றதும் பரந்தளவில் போர்க்குற்றங்களாக வகைப்படுத்தப்பட்டதுமான பல்வேறு இராணுவ மற்றும் மறைமுக நடவடிக்கைகளுக்கும் பொறுப்பானவர்கள் இலங்கையின் ஆயுதப் படைகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை ஐ.நா. மனிதவுரிமைச் சபை கடந்த வாரங்களின் போது வெளிப்படுத்திக் காட்டியிருந்த முரண்பாட்டு விளக்கங்களிடையே மிகுந்த முரண் நகையான விடயமொன்று வருமாறு,

இலங்கை இராணுவத்தைக் குற்றஞ்சாட்டும் அதே சர்வதேச அமைப்பின்கீழ் இயங்கும் சமாதானப் படைகளிற் செயற்படும் இலங்கை இராணுவப் படையினரே உலகளாவிய விதத்தில் மிகுந்த பிரச்சினைக்குரிய மோசமான இடங்களில் எல்லாம் மிக முக்கியத்துவம் வாய்ந்த சமாதான நடவடிக்கை பங்கினை சிறப்பாக வகித்து வருகின்றனரென்பதே அதுவாகும்.

முரண்நகையான மற்றுமொரு விடயம் என்னவென்றால் முன்னையதைப் போன்ற அதே பெரு வெறுப்புக்குரிய நடவடிக்கைகளை மேற்காசியாவில் (மத்திய கிழக்கு) மேற்கொண்டு வரும் மற்றுமொரு பயங்கரவாத அமைப்புக்கெதிராக இரவு பகல் நடத்தப்பட்டு வரும் குண்டுவீச்சுக்களுக்கு எதிராக பொது அமைப்புக்கள் பலவற்றாலும் எழுப்பப்படும் குற்றச்சாட்டுக்களுக்கு பொறுப்புக்கூற வேண்டியவர்களும் முன்னைய அதே சர்வதேச மனிதவுரிமை அனுசரணையாளர்களேயாவர். இவையனைத்திற்கும் மத்தியில் "இலங்கை அதனது பயங்கரவாதப் போரை எவ்விதம் வெற்றி கொண்டது?" என்ற கேள்விக்கான விடை தேடலும் அவர்களுக்கு மத்தியில் நடந்து கொண்டுதானிருந்தது. அத்துடன் இந்நடவடிக்கைகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் இடங்களில் பாரிய மனிதப் பேரவலத்திற்கிடமான விதத்தில் இடம்பெற்று வரும் மாபெரும் மக்கள் இடப் பெயர்வுகள் நிகழ்ந்து கொண்டிருப்பதும் ஜெனிவாவிலிருக்கும் ஐ.நா.மனிதவுரிமைச்சபை தலைமையகத்திற்கு வெகு தூரத்தில் அல்ல.

இரண்டாம் உலக மகா யுத்தத்திற்குப் பின்னர் மிகப்பாரிய அளவிலான அகதிகள் வெளியேற்றம் மீண்டும் ஐரோப்பாவில் எல்லைகளையும் உடைத்துக்கொண்டு கரை புரண்டோடும் பெருவெள்ளமாகத் நிகழ்ந்து கொண்டிருக்கிறது.

இந்த மேற்கத்தேய நாடுகளினதும் அமெரிக்காவினதும் மனிதவுரிமை ஒழுக்க சீலங்கள் தற்போது மிகக் கடுமையாக பரிசோதிக்கப் பட்டுக் கொண்டிருக்கின்றது. மேற்கத்தேய நாடுகளின் கொள்கைகள் காரணமாக சிரியா, ஈராக் மற்றும் லிபியா போன்ற நாடுகளின் வளங்களனைத்தும் போரினால் கபளீகரம் செய்யப்பட்டு அவற்றின் நிலை தற்போது மிகுந்த குழப்பத்திற்குள்ளாகியுள்ளது. உள்ளதைச் சொல்வதானால் மேற்கானது அதன் கொள்கை என்ற சொந்தப் பொறியிலேயே மாட்டிக்கொண்டுள்ளது. அண்மையில் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா பொதுப்படையாக பேசிய போது இதையே தான் "வேறு எவருடையவோ உள்நாட்டுப் போர்" என சலிப்படைந்த நிலையில் மறைமுகமாகக் கூறியிருந்தார் என்பது வெளிப்படை.

ஆகையால் அவரது அவ் வார்த்தைகளுக்கே நம்[illegible]டும் வருவோம். அது வேறு ஒருவரது உள்நாட்டுப்போர் இலங்கைப் பிரச்சினைகளையும் அதன் சொந்த உள்நாட்டுப் பிரச்சினைகளையேதான்!

கடந்த புதனன்று நம்புவதற்குப் போதுமான காரணங்கள் என்ற சாட்சியத்தையே ஒரு நிகழ்வுக்கான போதிய ஆதாரமாகக் கருதும் அறிக்கையொன்றை (UNHRC) ஐ.நா. மனிதவுரிமைச்சபை வெளிக் கொணர்ந்தது. இதில் சாட்சியத்தின் இந்த ஒப்புதலே நிகழ்வுக்கான நியம ஆதாரமாக இருக்கிறது. இதில் வரும் "நம்புவதற்கான காரணமாக இருக்கலாம்" (அவர்களது வார்த்தையில்) என்ற பதமே அந்த நிகழ்வு மட்டில் நீதி விசாரணையொன்றை கோருவதற்கு போதுமான ஆதர்ரமாக அல்லது நிரூபணமாக இருக்கிறது. இலங்கைச் சட்ட ஒழுங்குமுறைகள் நம்பத்தகுந்தவை அல்ல என்ற எண்ணமே இந்த விசாரணையின் சர்வதேச ஒரு தலைச் சார்பினை எடுத்துக் காட்டுவதாயுள்ளது.



இலங்கைப் படையினர்மீது சுமத்தப்படுகின்ற படுமோசமான குற்றச்சாட்டுக்களில் ஒன்று பாலியல் பலாத்காரம் என்ற கொடுமையாகும். இந்தக் குற்றச்சாட்டுக்களில் பெரும்பாலானவை இப்போது மேற்கில் வாழ்ந்துவரும் சாட்சிகளின் வாக்கு மூலங்களின் அடிப்படையில் எழுப்பவையாகும். [illegible] ளின் சாட்சியம், குறித்த விடயங்களில் ஆர்வமுள்ள தரப்புக்கள் பயிற்றுவிக்கப்பட்டவையாகவுமிருக்கலாம்.

தனி ஈழ வாத கடும் கோட்பாட்டினர்கூட (Pro-Eelamist) இவ்வளவு வருடகாலமாக இத்தகைய குற்றச்சாட்டுக்களில் பிடிவாதம் காட்டியிருக்கவில்லை. முறைப்பாட்டாளர்களது தற்போதைய இயல்பு நிலை காரணமாக இக் குற்றச்சாட்டுக்கள் மட்டில் கட்டாயமாக உணர்வு பூர்வமான புலன் விசாரணைகள் மேற்கொள்ளவேண்டும். அது மட்டுமல்லாமல் இந்த சாட்சியங்களின் வாக்கு மூலங்களை விசாரணைக்குழு நிபுணர்கள் தமது அறிக்கையில் கண்டிப்பான முறையில் சேர்த்துக்கொள்ள வேண்டிய காரணங்களை சம்பவங்களுடன் எவ்விதம் எடைபோட்டு ஆராய்ந்து தீர்மானித்தனர் என்பது மட்டில் அவர்களையுங்கூட புலன் விசாரணைக்குட்படுத்த வேண்டும். இவ்விதமாக இதன் உண்மைத் தன்மைகள் பிற்காலத்திற்கான ஒரு எடுத்துக்காட்டாக பகிரங்கப்படுத்தப்படல் வேண்டும்.

**புதிய அரசின் சிங்க-ஆசனத்தின்கீழ் நேரக் கணிப்புடன் கூடிய வெடிகுண்டு எனும் தலைப்பில் சண்டேரைம்ஸ்ஆசிரியர்தலையங்கத்தில் வெளிவந்தகட்டுரையின் தமிழாக்கம் இங்கு பிரசுரமாகின்றது.**

நாட்டின் குறிப்பான சில பிரதேசங்களில் உண்மையான ஓர் அரசாக இல்லாமலே அவற்றைத் தமது பூரண கட்டுப்பாட்டில் கொண்டு அதிகாரம் செலுத்திவந்த தமிழீழ விடுதலைப்புலி அமைப்பினருங்கூட சிறுவர் போராளிகளை தம்முடன் இணைத்துக்கொண்டமை மற்றும் இச்செயற்பாடுகளை எதிர்த்தோருடன் தமது சக தமிழர்களையும் கொலை செய்தது போன்ற குற்றச் செயல்களுக்கு பொறுப்புக் கூற வேண்டியவர்கள் என ஐ.நா. மனிதவுரிமைச்சபையின் அறிக்கை கூறுகின்றது. இருப்பினும் உண்மையில் தமிழீழ விடுதலைப்புலியினரின் நடவடிக்கைகளுக்கு பொறுப்புக் கூறுவதற்கு தெரிந்த வரையில் எவருமே இல்லாத நிலையேயுள்ளது. எனவே விசாரணைக்கான ஐ.நா. மனிதவுரிமைச் சபையின் புலன் விசாரணைக்கான இந்தப் பிரேரணை மட்டிலான நீதி விசாரணை நடவடிக்கைகள் எதிர்த்தரப் பினர் இல்லாது இலங்கை அரசாங்கத்திற்கும் அதனது ஆயுதப் படைகளுக்கும் எதிராக ஒரு தலைப் பட்சமாக நடத்தப்படும் விசாரணை யொன்றாகவே இருக்கும்.

போர்க்குற்றங்களாக எடுத்துக் காட்டப்பட்ட இக் குற்றச்சாட்டுக்கள் மட்டில் புலன்விசாணை நடத்துவதற்கான உள்ளூர் பொறிமுறையொன்றினை நிச்சயப்படுத்தி அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்கென அமெரிக்காவுடன் இலங்கையும் இயைந்த விதமாக கலந்தாலோசித்து ஏற்பாடு செய்து கொண்ட அமெரிக்காவின் புதிய திருத்தப்பட்ட தீர்மான வரைபையே கொழும்பு எதிர்பார்த்திருந்தது. இப்படியான தருணத்தில் ஐ.நா. மனிதவுரிமைச் சபை உயர் ஆணையாளர் இளவரசர் செய்ட் ராட் அல்ஹுசைன் சபையில் சமர்ப்பித்த அறிக்கை கொழும்புக்கு அதிர்ச்சியளிப்பதாக அமைந்தது.

அமெரிக்கா கூறியிருந்த புதிய திருத்தப்பட்ட தீர் மான வரைவுக்குப் பதிலாக ஐ.நா. கோரியிருந்த கலப்புப் பொறிமுறை வெளிநாட்டு நீதிபதிகள் கொழும்பில் விசாரணை அமர்வுகளை நடத்துவது பற்றிக் கூறியது. இப்பொறி முறையில் அநேகமாக வெளி நாட்டு நீதிபதிகளுடன் வழக்காளி தரப்பில் நிபுணத்துவம் வாய்ந்த வெளி நாட்டுச் சட்டவாளர்களும் உள்ளடங்குவதாக இருந்தது. (இது பற்றிய உண்மை எவருமே அறியாத ஒன்று).

(தொடரும்...)

**தமிழில்: யோகர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச கருத்தரங்கு யாழ்ப்பாணத்தில் நேற்று




ஆசிய பசுபிக் பிராந்தியத்திற்கான அனர்த்த முகாமைத்துவ கூட்டமைப்பு பொதுசன தனியார் பங்குடமை அனர்த்தங்களுக்கு தொழில் திறனுடைய நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்தியை நோக்கி எனும் தொனிப் பொருளிலான சர்வதேச கருத்தரங்கு நேற்றைய தினம் முற்பகல் பத்து மணியிலிருந்து நண்பகல் பன்னிரண்டு மணிவரை யாழ். ரில்கோ ஹோட்டலில் நடைபெற்றது.

இக்கருத்தரங்கில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நா. வேதநாயகனும் கௌரவ விருந்தினராக இலங்கை அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பொதுப்பணிப்பாளர் மேஜர் ஜெனரல் எஸ்.பி.ஆர்.மார்க் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

இந்நிகழ்வில் ஜப்பான் நாட்டின் இலங்கைக்கான அமைச்சர் ஒகாய் அசகோ, யாழ்.வர்த்தக தொழில் துறை மன்றத்தின் தலைவர் வி.கே விக்னேஷ் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர். தேசிய பசுபிக் பிராந்தியத்திற்கான அனர்த்த முகாமைத்துவ கூட்டமைப்பால் நடத்தப்பட்ட கட்டுரை, புகைப்பட மற்றும் கேலிச்சித்திர போட்டிகளின் வெற்றியாளர்களுக்கான பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன.

மேலும் இந்நிகழ்வில் வடக்கு மாகாணத்தை சேர்ந்த கல்வியலாளர்கள், வைத்தியர்கள், முகாமைத்துவ பணிப்பாளர்கள், துறைசார் நிபுணர்கள் வணிக நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் ஜப்பான் நாட்டு பிரதிநிதிகள் உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இலங்கையில் நிலையான அபிவிருத்தியை எவ்வாறு கட்டியெழுப்புதல், அனர்த்த விபத்துக்களில் இருந்து மக்களை எவ்வாறு பாதுகாத்து அதனூடாக எவ்வாறான முறையில் நிலையான அபிவிருத்தியை கொண்டு செல்லல், ஆசிய பிராந்தியத்தில் உள்ள ஏனைய நாடுகளைப் போல் இலங்கையினையும் எவ்வாறு நிலையான அபிவிருத்தி ஊடாக கட்டியெழுப்புதல் போன்ற விடயங்கள் கலந்துரையாடப்பட்டிருந்தன. (இ-4)

# INVITATION FOR BIDS
## University of Jaffna

**Provision of Cleaning, Janitorial and Maintenance Services for the University of Jaffna-2015 /2016**

1.The Chairperson, Procurement Committee, University of Jaffna will receive sealed Bids for the following contracts up to 2.00 p.m. on 20th October, 2015 from the eligible Firms.

| Bid No | Service |
|---|---|
| UJ/Kili/2015/CS/01 | Provision of Cleaning, Janitorial and Maintenance Services for the Faculty of Agriculture and Faculty of Engineering of the University of Jaffna at Kilinochchi Premises– 2015/ 2016 |
| UJ/MB/2015/CS/01 | Provision of Cleaning, Janitorial and Maintenance Services for the Kanagasundram Male Hostel and Sivagnanasundram Female Hostel at Jaffna Town, University of Jaffna- 2015/2016 |

2.Period of contract should be 365 days subject to a performance evaluation period of 60 days.
3.Firms which satisfy the following conditions are eligible to submit Bids. Documentary evidences should be provided with Bids.
3.1Must be registered in Sri Lanka under the Company's Acts or Business Name Registration Ordinance.
3.2Must have satisfactorily carried out at least one cleaning service contract to a Government Department/ Corporation/ University during the last 3 years where the annual contract sum is not less than Rs. 6.0 Mn for Bid No UJ/Kili/2015/CS/01 & Rs. 1.2 Mn for Bid No UJ/MB/2015/CS/01.
3.3.Average of annual volume of cleaning service contracts performed in the last 3 years should be at least Rs. 8.5 Mn for Bid No UJ/Kili/2015/CS/01 & Rs. 1.8 Mn for Bid No UJ/MB/2015/CS/01
3.4.Availability of trained and experienced Sri Lankan staff during the last 3 years should be at least 35 employees for Bid No UJ/Kili/2015/CS/01&10 employees for Bid No UJ/MB/2015/CS/01.
4..Interested bidders may obtain further information from Deputy Registrar, Capital Works & Planning Unit, University of Jaffna, and inspect the bidding documents at the same address on any working day from 9:00hrs to 16:00hrs.
**Contact numbers are: Phone. Tel: 021 2219201 Fax: 021 221 9201.**
5..A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to Deputy Registrar, Capital Works & Planning Unit, University of Jaffna until 19.10.2015 from 9:00 hrs to 15:00 hrs upon payment of a non refundable fee of Rupees two thousand five hundred (Rs.2,500/-)for Bid No UJ/Kili/2015/CS/01 and Rupees one thousand five hundred ( Rs. 1,500.00) for Bid No UJ/MB/2015/CS/01.Bid Security of Rs. 100,000.00 for Bid No UJ/Kili/2015/CS/01 & Rs. 24,000.00 for Bid No UJ/MB/2015/CS/01in Cash or Bank Guarantee valid for 120 days from scheduled bid opening date obtained from a recognized commercial bank operating in Sri Lanka in favour of the Vice Chancellor, University of Jaffna should be accompanied with each bid.
6.Bidders are strongly advised to attend the pre-bid meeting on 15.10.2015 at 2.00 pm in the Board room of the Faculty of Agriculture,Ariviyalnagar; Kilinochchi for Bid No UJ/Kili/2015/CS/01 and on 14.10.2015 at 10.00 am in the board room of the University of Jaffna for Bid No UJ/MB/2015/CS/01 and visit each location before pricing.
7.Bids shall be delivered or sent by registered post to the Chairperson, Procurement Committee of University of Jaffna, Thirunelvely, Jaffna P.O Box 57, to reach on or before 14.00 hrs on 20.10.2015 or be deposited in the tender box kept in the Registrar's office on or before the above date and time. Bids will be opened soon after closing the Bids, in the presence of the bidders' representatives who choose to attend.
8.Bids shall be Valid for a period of 91 Days from the date fixed for closing of Bids or any extended period.

**Chairperson,**
**Procurement Committee,**
**University of Jaffna, Thirunelvely, Jaffna. 06.10.2015** (C.-2389)

# அதிகாலை வெந்நீர், ஆஹா பலன்கள்!

குளிர்ந்த நீரைக் குடிப்பது இப்போதெல்லாம் ஒரு பேஷன் ஆகிவிட்டது. காய்ச்சல், சளி என்றால் மட்டுமே வெந்நீர் அருந்துவது பலரின் வழக்கம். உடல் எடையைக் குறைக்க நினைக்கும் சிலர் காலையில் மட்டும் வெந்நீர் குடிப்பது உண்டு. 'எடையைக் குறைக்க மட்டும் அல்ல, வெந்நீர் அருந்துவது உடலின்



ஒட்டுமொத்த ஆரோக்கியம் மேம்படவும் உதவும்' எனச் சொல்கிறார்கள் மருத்துவர்கள்.

உணவு, உடை, இருப்பிடம் போலவே நம் அன்றாட வாழ்வுக்கு தண்ணீர் மிக அவசியம். உடல் வெப்பநிலையைப் பராமரிக்க, ஊட்டச்சத்துக்களை உடலில் சேர்க்க, நச்சுக்களை அகற்ற... என நீர் ஏராளமான வேலைகளை நமக்குச் செய்கிறது. இரண்டு ஒட்சிசனும் ஒரு ஐதரசனும் சேர்ந்தது நீர் எனப் படித்திருப்போம். அது மட்டுமல்ல, நாம் அருந்தும் நீரில் சோடியம், கல்சியம், மக்னீசியம், தாமிரம் எனப் பல்வேறு தாது உப்புக்கள் கலந்திருக்கின்றன. இப்படி, பல நன்மைகளை அள்ளித் தரும் நீரைக் கொதிக்கவைத்து அருந்தலாமா, எவ்வளவு சூடாக அருந்தலாம், அதனால், ஏற்படும் நன்மைகள் என்னென்ன எனப் பார்க்கலாம்.

**கழிவுகளை நீக்கும் வெந்நீர்**

காலை எழுந்ததும் வெந்நீர் குடிக்கும் பழக்கம், நம் உடல் எதிர்கொள்ளும் பெரும்பான்மையான நோய்களுக்கான வாய்ப்புகளைக் குறைக்கிறது. வயிற்றைச் சுத்தப்படுத்துவதில், வெந்நீருக்கு இணை எதுவும் இல்லை. வெந்நீரோ, சூடான பொருளோ நம் உடலுக்குள் செல்லும்போது, அதிகமாக வியர்க்கும் உடலின் வெப்பநிலை அதிகரிக்கும். இப்படி அதிகரித்த வெப்பநிலையைக் குறைத்து, நம் உடல் வெப்பத்தை சமநிலையில் வைத்திருக்கத்தான் வியர்வை உற்பத்தியாகிறது. இதனால், நம் உடலின் செல்களில் உள்ள நீர், உப்பு முதலான கழிவுகள் வெளியேறுகின்றன.

**வெந்நீர் குடிக்க உகந்த நேரம்**

எல்லா நேரமும் வெந்நீர் அருந்தலாம். இருப்பினும், அதிகாலையில் அருந்துவது மிகவும் நல்லது. அதிகாலையில், வெந்நீரை ஆற்றும்போது, காற்றில் கலந்திருக்கும் ஓசோன் வாயு, வெந்நீருடன் கலக்கும். ஓசோன் என்பது, சூப்பர் ஒட்சிசன். அது நம் உடலின் சக்தியைத் தூண்டிவிடும். சாப்பிடுவதற்கு அரை மணி நேரத்துக்கு முன்பு குடித்தால், செரிமானத்தைத் தூண்டும்.

**செரிமான மண்டலம் மேம்பட...**

நமது இரைப்பையானது, புரத செரிமானத்துக்குத் தேவையான பெப்ஸின், ரெனின் முதலான என்ஸைம்களைக் கொண்டுள்ளது. இவை இரைப்பையில் இருக்கும். தினமும் காலை இரண்டு டம்ளர் வெந்நீர் குடிப்பதால், பழைய என்ஸைம்கள் வெளியேற்றப்பட்டு, புது அமிலங்கள் உற்பத்தியாகின்றன. அன்றைய தினம் முழுக்க செரிமான மண்டலம் திறனுடன் வேலை செய்ய இது உதவுகிறது.

மலச்சிக்கலால் அவதிப்படுபவர்களுக்கு வெந்நீர் ஒரு அருமருந்து. மலச்சிக்கல் ஏற்படுவதற்கு முக்கிய காரணம் அதிகமான கழிவுப் பொருட்கள், நம் குடலில் தங்குவதுதான். இதனால், வயிற்றுவலி, உப்புசம் முதலானவை உண்டாகி தொந்தரவு செய்யும். வெந்நீர் அருந்தும்போது, அது உணவுப் பொருட்களை எளிதில் செரிமானம் செய்து, வெளியேற்ற உதவுகிறது.

**செல்கள் புத்துணர்வு பெறும்**

வெந்நீர் அருந்தும்போது, இரத்




தக் குழாய்கள் விரிவுபடுத்தப்படும். இதனால், உடல் முழுக்க நல்ல இரத்த ஓட்டம் கிடைக்கும். செல்களுக்கு ஊட்டச்சத்து மற்றும் ஒக்சிசன் சீராகக் கிடைக்கும். செல்கள் புத்துணர்வுடன் இருக்கும். இதனால் நம் உடல், பலவிதமான தீங்கு விளைவிக்கும் நோய்களில் இருந்தும் தன்னைத் தற்காத்துக் கொள்கிறது.

போதுமான அளவு வெந்நீர் அருந்திவந்தால் சருமம் பொலிவடையும்.

**வெந்நீரும் உலோகங்களும்!**

வெண்கலம், தாமிரப் பாத்திரங்களில் வெந்நீர் காய்ச்சி அருந்துவது நல்லது. இந்தப் பாத்திரங்கள் இல்லாதவர்கள், எவர்சில்வர் பாத்திரத்தில், நான்கு டம்ளர் தண்ணீர்விட்டு, 60 கிராம் தாமிரத் தட்டு கட்டியைப் போட்டு, நன்கு கொதிக்கவிட்டு அருந்தலாம் அல்லது தாமிர டம்ளரில் அருந்தலாம். இதேபோல, வெள்ளி, தங்கத்தைப் போட்டும் தண்ணீரைக் காய்ச்சி அருந்தலாம். இதனால்...

நரம்பு சம்பந்தப்பட்ட நோய்கள் குணமாகும். உயர் இரத்த அழுத்தம், கீழ் வாதம், மன அழுத்தம் போன்றவை கட்டுப்படும்.

உணவு மண்டலம், சிறுநீரகம் தொடர்புடைய நோய்கள் குணமாகும்.

சுவாச மண்டலம், நுரையீரல், இதயம், மூளை போன்றவற்றில் உள்ள கோளாறுகள் சரியாகும்.

**ஏனைய பயன்கள்!**

இருமல் மற்றும் சளி ஏற்பட்டால், நம் தொண்டையின் டான்சிலில் அதிக வலி ஏற்படும். அப்போது, வெந்நீர் குடிப்பது தொண்டை வலியைக் குறைக்கும் நீர்மமாக உள்ள சளியைக் கெட்டியாக்கி வெளியேற்றும். நம் உடலில் உள்ள தேவையற்ற கொழுப்புகள் கரைந்து, இரத்தக் குழாய்கள் சற்று விரிவடைந்து, உடலின் இரத்த ஓட்டமும் மேம்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

1258

## பாலுவும் பூதமும்!

பாலு, அன்று பள்ளிக்கு வரவில்லை. நண்பர்கள் சுபிதா, சுரேஷ், மனோஜ் மூவரும் பாலுவைக்காண வீட்டுக்குச் சென்றார்கள். பாலு போர்வையை இழுத்துப் போர்த்திக் கொண்டு படுத்திருந்தான்.

பாலு படு சுட்டிதான். ஆனால், பேய், பிசாசு, கரப்பான் பூச்சி, பல்லி, நாய் என்றால் மிகவும் பயம். வீட்டுக்கு வந்த பாலுவின் நண்பர்களுக்கு லெமன் ஜுஸ், சிப்ஸைக் கொடுத்தார் பாலுவின் அம்மா.

சுரேஷ் பாலுவை பார்த்து, “எப்படி உனக்கு காய்ச்சல் வந்தது?” என்று கேட்டான். “நேற்று இரவு ஒரு பேய்ப்படம் பார்த்தேன். பயந்து போய்...” என்று இழுத்தான் பாலு.

“உனக்குத்தான் பயம் இருக்கே. அப் புறம் ஏன் பார்த்தே? நாளைக்கு மேத்ஸ் டெஸ்ட் இருக்கு. நல்லா படிச்சுட்டு வா” என்றாள் சபிதா.

நண்பர்கள் சென்றதும் பாலு கணக்குப் புத்தகத்தை எடுத்தான். அவனுக்கு தூக்கம் வந்ததே தவிர மேத்ஸ் வரவில்லை. தூங்கிய படி மேஜையின் மீது விழுந்தான்.

அப்போது அலுமாரியில் இருந்து ஒரு புத்தகம் கீழே விழுந்தது. எடுத்துப் பார்த்தான். பாலுவும் பூதமும் என்றிருந்தது. இது எங்கிருந்து வந்தது? என்று எண்ணி தன் பெயர் இருப் பதைக் கண்டு படிக்கும் ஆவலில் புத்தகத் தைத் திறந்தான். என்ன ஆச்சரியம்? அவன் பேய்ப் படம் பார்த்தது; காய்ச்சலில் படுத்துக் கிடந்தது; நண்பர்கள் வந்தது என எல்லாமே அதில் இருந்தது. வியப்புடன் மேலும் படிக்கத் தொடங்கினான்.

அதில் பாலு மைதானத்தில் இருந்து வீடு திரும்பும்போது ஒரு பூதத்தைச் சந்திப்பதாகவும் தனது நண்பனாக பூதும் மாறுவதாகவும் இருந்தது. அந்தப் பூதத்தை நள்ளிரவில் தன் நண்பர்களுக்கு அறிமுகப்படுத்துகிறான். பயந்தோடிய நண்பர்கள்... “இனிமேல் இவன்கூட சேரக் கூடாது” என்கிறார்கள். பாலு நண்பர்கள் இல்லாமல் தவிக்கிறான். பாலு புத்தகத்தை மூடினான். இதெல்லாம் நடக்குமா? என்ற சந்தேகம் அவன் மனதில் எழுந்தது. மறுநாள் வேண்டுமென்றே மைதானத்துக்குச் சென்றான்.

பாதையில் ஒரு கல் இருந்தது. புத்தகத்தில் வருவது போன்ற கல். அந்தக் கல் ஓரளவுக்கு பெரியதாக இருந்தது. அதை சிரமப்பட்டு விலக்கியதும் அந்தப்பூதம் வெளியே வந்தது. பாலு சற்றே மூர்ச்சையாகி மீண்டான். இருவரும் நண்பர்கள் ஆனார்கள்.

பூதத்தை செல்லக்குட்டி... ஜு பூதம் என்று அழைத்தால் போதும். அவன் முன்னே வந்து “என்னவேண்டும்?” என்று கேட்கும். பாலுவும் பரீட்சையில் நூற்றுக்கு 100 வாங்கனும். ஐஸ்கிரீம் வேணும் ... இப்படி தனது ஆசைகளை பூர்த்திசெய்து கொள்வான்.

ஒருநாள் மைதானத்தில் பூதத்துடன் பேசிக் கொண்டிருக்கும் போது அவனைப் பின் தொடர்ந்து வந்த நண்பர்கள் சூழ்ந்து கொண்டார்கள்.


“உனக்கு என்னடா ஆச்சு. இப்போ எல்லாம் சரியா விளையாடவே வர்றதில்லை. இங்கே தனியா உட்கார்ந்து பேசிட்டிருக்கே?” என்று கேட்டான் மனோஜ்.

பூதம் அவர்கள் கண்ணுக்குத் தெரியவில்லை என்று புரிந்தது. அதை நண்பர் களுக்கு அறிமுகப்படுத்தும் நாள் இது என்பதும் புரிந்தது. பூதத்தை எல்லோருக்கும் தெரியும் படி வர வைத்து அறிமுகம் செய்தான். புத்தகத்தில் படித்த படியே நண்பர்கள் ஓட்டம் பிடித்தனர்.


நண்பர்கள் இல்லாமல் பாலு தவித்த தவிப்பை வார்த்தைகளால் சொல்ல முடியாது. என்னதான் பூதம் அவனோடு விளையாடினாலும் நண்பர்கள் போல இல்லை.

பூதமும் பாலுவை உலகின் பல இடங்களுக்கும் அழைத்துச் சென்றது. சஹாரா பாலைவனம், பசிஃபிக் பெருங்கடல், அமெரிக்கா என ஒரு ரவுண்டு அடித்துப் பார்த்தது. ஆனாலும் அவனுடைய நண்பர்களின் ஏக்கம் போகவில்லை.

அப்போதுபூதம், “பாலு, ஒருவனுக்கு எவ்வளவுதான் வசதியும் நினைத்ததைச் செய்யும் திறமையும் இருந்தாலும் நண்பர்கள் இல்லா விட்டால் மகிழ்ச்சி இருக்காது என்பது புரிந்தது. நான் உன்னுடன் இருந்தால் அவர்கள் வர மாட்டார்கள். எனவே, நான் சென்று விடுகிறேன். உன்னை மறக்கவே மாட்டேன் என்று சொல்லி விட்டு மறைந்தது. பூதம் இருந்த இடத்தில் இப்போது ஒரு பொம்மை இருந்தது. பாலு அதை சிறிது நேரம் அமைதியாக பார்த் தான்.



அதை அலுமாரியில் வைக்கும் போது அந்தப்புத்தகம் கண்ணில் பட்டது. அந்தப் புத்தகத்தின் கடைசிப் பக்கத்தைப் படிக்காதது நினைவுக்கு வந்தது. எடுத்துத் திறந்தான். பூதம் பொம்மையாக மாறுவ தும் அப் போது வாசலில் நண்பர்களின் குரல் கேட்பது போலவும் அதில் இருந்தது. “பாலு...” என்று வாசலில் குரல் வர உற்சாகமாக ஓடினான் நண்பர்களை நோக்கி.





10.2015
06

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1582 - கிரெகொரியின் நாட்காட்டி அறிமுகப்படுத்தப் பட்டதை அடுத்து இத்தாலி, போலந்து, போர்த்துக்கல், ஸ்பெயின் ஆகிய நாடுகளில் புதிய நாட்காட்டியில் இவ்வாண்டின் இந்நாள் இடம்பெறவில்லை.
- 1683 - வில்லியம் பென் தன்னுடன் 13 ஜேர்மனியக் குடும்பங்களை பென்சில்வேனியாவுக்கு அழைத்துவந்து குடியேற்றினார். இவர்களே முதன் முதலாக அமெரிக்காவுக்கு குடியேறிய ஜேர்மன் மக்களாவர்.
- 1762 -ஏழாண்டுப் போர்: பிரித்தானியாவுக்கும் ஸ்பெயினுக்குமிடையில் மணிலாவில் இடம் பெற்ற போர் முடிவுக்கு வந்தது. ஏழாண்டுப் போர் முடிவடையும் வரையில் பிரித்தானியா மணிலாவைத் தன் பிடியில் வைத்திருந்தது.
- 1789 - பிரெஞ்சுப் புரட்சி: முன்னைய நாள் பெண்களின் போராட்ட அணியை வேர்சாய் அரண்மனையில் எதிர்கொண்ட பிரான்சின் பதினாறாம் லூயி மன்னன் அங்கிருந்து பாரிஸ் திரும்பினான்.
- 1795 - கேணல் பாபற் என்பவரின் தலைமையில் பிரித்தானியப் படையினர் மன்னாரை ஒல்லாந்தரிடம் இருந்து கைப்பற்றினர்.
- 1847 - சாமுவேல் பிஸ்க் கிறீன் பருத்தித்துறையை வந்தடைந்தார்.
- 1870 - ரோம் இத்தாலியின் தலைநகரானது.
- 1903 - அவுஸ்திரேலியாவின் உயர் நீதிமன்றத்தின் முதலாவது அமர்வு இடம்பெற்றது.
- 1908 - ஆஸ்திரியா தன்னுடன் பொஸ்னியா ஹெர்செகோவினாவை இணைத்துக் கொண்டது.
- 1927 - முதலாவது பேசும் படம் த ஜாஸ் சிங்கர் வெளியானது.
- 1939 - இரண்டாம் உலகப் போர்: போலந்தின் கடைசி இராணுவத்தினர் தோற்கடிக்கப்பட்டனர்.
- 1966 - எல்எஸ்டி ஐக்கிய அமெரிக்காவில் தடை செய்யப்பட்டது.
- 1973 - 80,000 எகிப்தியப் படைகள் சூயஸ் கால்வாயைக் கடந்து இஸ்ரேலிய பார் லேவ் கோட்டை அழித்து, யோம் கிப்பூர்ப் போரை ஆரம்பித்தனர்.
- 1977 - மிக்-29 வானூர்தி தனது முதலாவது பறப்பை மேற்கொண்டது.
- 1981 - எகிப்திய அதிபர் அன்வர் சாதாத் கொலை செய்யப்பட்டார்.
- 1987 - பிஜி குடியரசாகியது.
- 1995 - சூரியனுக்கு அடுத்ததாக கோளைத் தன்னகத்தே கொண்ட பெரும் விண்மீன் 51 பெகாசி கண்டறியப்பட்டது.
- 2010 - தமிழ் விக்கிப்பீடியாவில் 25,000 கட்டுரை இலக்கு எட்டப்பட்டது.

### பிறப்புக்கள்

- 1552 - மத்தேயோ ரீச்சி, இத்தாலிய மதப்பரப்புனர் (இ. 1610)
- 1831 - ரிச்சர்டு டீடிகைண்டு, செருமன் கணிதவியலாளர் (இ. 1916)
- 1887 - லெ கொபூசியே, கட்டிடக் கலைஞர் (இ. 1965)
- 1930 - ரிச்சி பெனோட், அவுஸ்திரேலியத் துடுப்பாளர், வர் ணனையாளர் (இ. 2015)
- 1982 - சிபிராஜ், தமிழ் திரைப்பட நடிகர்

### இறப்புகள்

- 1905 - பேர்டினண்ட் வொன் ரிச்தோஃபென், ஜெர்மானிய புவியியலாளர் (பி. 1833)
- 1951 - ஓட்டோ பிரிட்சு மேயெர்ஹோப், மருத்துவத்துக்கான நோபல் பரிசு பெற்றவர் (பி. 1884)
- 1981 - அன்வர் சாதாத், எகிப்திய அரசுத்தலைவர், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1918)
- 2008 - ஜானக பெரேரா, இலங்கை இராணுவத் தளபதி (பி. 1946)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னேற்றகரமான வாழ்க்கைக்கு பாதை அமைத்துத் தரும் வழிகாட்டி ஆசிரியரே
- ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## ஆசிரியர்-மாணவர் உறவு தெய்வீகம் நிறைந்தது

சிரித்திரன் என்றொரு சஞ்சிகை யாழ்ப்பாண மண்ணில் இருந்து வெளிவந்தது. மிகச் சிறந்த நகைச்சுவை துணுக்குகள், காட்டூன் இவற்றால் சிரித்திரனுக்கு ஏகப்பட்ட மதிப்பு.

அந்தச் சஞ்சிகையின் ஆசிரியர் சிவஞானசுந்தரம் அவர்கள் மகுடி என்ற பெயரில் கேள்வி பதில் பகுதியை எழுதி வந்தார். இதில் ஓர் அன்பர் மகுடியாரே! அந்தக் காலத்து ஆசிரியர்களுக்கும் இந்தக் காலத்து ஆசிரியர்களுக்கும் என்ன வித்தியாசம்? என்று கேட்டார். இதற்கு, அந்தக் காலத்தில் ஆசிரியர்கள் இருந்து படிப்பித்தனர். மாணவர்கள் நின்று படித்தனர்.

இந்தக் காலத்தில் ஆசிரியர்கள் நின்று படிப்பிக்கின்றனர். மாணவர்கள் இருந்து படிக்கின்றனர் என்றார். கால மாற்றங்கள் கல்வி அபிவிருத்திக்குத் தேவையாயினும் அந்த மாற்றங்களே பண்பாட்டுப் பிறழ்வுகளுக்கு காரணமாகின்றன என்றொரு நிலைமை இருக்குமாயின், அந்த மாற்றங்கள் தேவையற்றவை என்றே கூறவேண்டும்.

எதுவாயினும் "ஆசிரியத்துவம் புனிதமானது" தனது மாணவன் தன்னை விட உயர்ந்த நிலைக்கு வரவேண்டும் என்று நினைக்கின்ற உன்னத மன நிலை ஆசிரியர்களிடம் இருப்பதை எவரும் மறந்து விடக் கூடாது.

எனினும் சமகாலத்தில் ஆசிரியத்துவத்துக்கான சமூகத்தின் மதிப்பு என்பது மிகவும் கீழ் நிலைப்பட்டே இருக்கின்றது என்ற உண்மையைக் கூறித்தானாக வேண் டும். தமிழ் நாட்டில் இருந்து வெளிவரும் சினிமாப் படங்களைப் பார்க்கும் போது, ஆசிரியர்களே மிக உன்னதமான கோமாளிகளாகக் காட்சிப்படுத்தப்படுகின்றனர்.

தென்னிந்தியத் திரைப்படம் ஒன்றில் வக்கீல் ஒருவரை ஜோக்கராகக் காட்டியதற்காக தமிழகத்தின் சட்டத்தரணிகள் கொதித்தெழுந்தனர். நீதிமன்றம் வரை அந்த விவகாரம் போயிருந்தது.

ஆனால், ஆசிரியர்கள் கோமாளிகளாகக் காட்டப்பட்டதற்கு ஆசிரிய அமைப்புகள் எவையும் எதிர்ப்புத் தெரிவித்ததான செய்திகள் இதுவரை பதிவில் இல்லை.

ஆக, ஆசிரியர்களும் தங்களின் கெளரவத்தை சமூகத்தில் பாதுகாக்கவேண்டும் என்று நினைக்கவில்லை என்பது புரிகிறது. ஆசிரியர் என்ற சொற்பதம் எந்தக் காலத்திலும் எவரும் மரியாதை செலுத்த வேண்டும் என்பதைக் குறித்து நிற்பதாகும்.

ஒரு காலத்தில் குருகுலக் கல்வி இருந்தபோது மாணவர்கள் குருவுக்கு பணிவிடை செய்து அவரிடம் வித்தைகளைக் கற்றுக் கொள்வதான ஒழுங்கு முறை இருந்தது. கால ஓட்டத்தில் குருகுலக் கல்வி முறை இல்லாது போனபோது திண்ணைக் கல்வி முறைமை அறிமுகமாயிற்று. இப்போது பாடசாலைக் கல்வி என்ற முறைமையில் ஆசிரியர்கள், மாணவர்கள் என்ற அடிப்படையில் இருதரப்பு உறவும் பேணப்படுகிறது.

இருந்தும் சில இடங்களில் ஆசிரியர்கள் தமது கடமையை ஒழுங்காகச் செய்யாத நிலையும் காணப்படுகிறது. இத்தகைய சூழ்நிலைகளில் ஆசிரியத்துவத்துக்கான கௌரவம் குறைந்து போகிறது என்ற உண்மையையும் ஏற்றுத்தானாக வேண்டும்.

எனவே, இன்று நாடு பூராகவும் கொண்டாடப்படும் ஆசிரிய தினத்தில், ஆசிரியர்- மாணவர் என்ற தெய்வீகமான உறவைப் பேணுவது என உறுதி எடுப்பதே பொருத்தமாக இருக்கும்.

# இயற்கையால் ஏற்படுகின்ற அழிவிலிருந்து மக்களைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டும்

## அனர்த்த முகாமைத்துவ நிலைய பொதுப் பணிப்பாளர் கருத்து

மனிதர்களினால் ஏற்படுத்தப்பட்ட அழிவுகளிலிருந்து நாட்டைப் பாதுகாத்தமை போன்று இயற்கையால் ஏற்படுகின்ற அழிவுகளிலிருந்து மக்களைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்று இலங்கை அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பொதுப்பணிப்பாளர் மேஜர் ஜெனரல்எஸ்.பி.ஆர்.மார்க்தெரிவித்துள்ளார்.

ஆசிய பசுபிக் பிராந்தியத்துக்கான அனர்த்த முகாமைத்துவ கூட்டமைப்பு பொதுசன தனியார் பங்குடமை அனர்த்தங்களுக்கு தொழில் திறனுடைய நிலைத்து நிற்ககூடிய அபிவிருத்தியை நோக்கி எனும் தொனிப்பொருளிலான சர்வதேச கருத்தரங்கு நேற்றைய தினம் யாழ்.ரில்கோ ஹோட்டலில் நடைபெற்ற போது விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

நாம் முன்னெடுத்துள்ள காலத்துக்குத் தேவையான திட்டத்தை யாழில் நடத்துவதில் மகிழ்ச்சியடைகின்றோம். இதனூடாக நாடளாவிய ரீதியில் பல் வேறு நடவடிக்கைகளை முன்னெடுக்க கூடியதாக அமைகின்றது. அத்தகைய செயற்பாடுகளுக்கு அனைவரும் ஒத்துழைப்பும் ஆதரவும் வழங்கி வருகின்றமை வரவேற்கத்தக்கதாகும்.

எமது நாட்டில் பாரியதொரு அனர்த்தமாக சுனாமி அனர்த்தம் ஏற்பட்டிருந்தது. இது தெற்கில் பாரிய அழிவுகளையும் ஏற்படுத்தியிருந்த அதேவேளையில் வடக்கிலும் அதே போன்றதான அழிவுகளை ஏற்படுத்தியிருந்தது. இதனால் வட பகுதி மக்கள் பெரும் கஷ்ட துன்பங்களை எதிர்நோக்கியிருந்தனர்.

குறிப்பாக அத்தகைய பாதிப்புக்களிலிருந்து மீள்வதற்கே பல ஆண்டுகள் ஆகின. அப்போது அதிலிருந்து மீள்வதற்கும் அவர்களுக்கு வழி தெரியவில்லை. ஆனால் இப்போது அதிலிருந்து மீள்வதுடன் பாதுகாப்பையும் ஏற்படுத்திக் கொள்வதற்கும் தயாராக இருக்கின்றனர்.

இராணுவத் தளபதியாக இருந்த காலத்தில் நாட்டில் சமாதானத்தை நிலைநாட்டுவதனையே நோக்கமாகக் கொண்டிருந்தேன். இங்கு இயற்கை அனர்த்தம் இடம்பெற்ற அதே வேளையில் மனிதர்களாலேயேயும் ஒரு வகையான அனர்த்தம் உருவாக்கப்பட்டிருந்தது. அதிலிருந்துதான் நாம் சமாதானத்தைக் கொண்டு வந்தோம்.

சமாதானத்துக்குப் பின்னரான காலத்தில் மீள்குடியேற்றம், புனர்வாழ்வு, புனரமைப்பு உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகள் வடக்கில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதனால் இங்குள்ள மக்கள் மிகவும் மகிழ்ச்சியாகவே இருக்கின்றனர். இங்கு மனிதர்களினால் ஏற்பட்ட இடர்களிலிருந்து மக்களை பாதுகாத்தமை போன்று இயற்கை அனர்த்தங்களிலிருந்தும் பாதுகாக்க வேண்டும்.

இவ்வாறு மக்களைப் பாதுகாத்து நாட்டை முன்னேற்றுவதற்காக அரச மற்றும் தனியார் துறையினர் இணைந்து செயற்படுவது வரவேற்கத்தக்கது. இதே போன்று தொடர்ந்தும் அனைவரும் இணைந்து செயற்படுவது மிக மிக அவசியம் என அவர் தெரிவித்தார். (செ-4)

# சூழல்பாதிப்பை ஏற்படுத்தாத வகையில் அபிவிருத்திகளை முன்னெடுக்க வேண்டும்

## யாழ்.மாவட்ட அரச அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

அபிவிருத்திநடவடிக்கைகள்மேற்கொளகின்றபோது சுற்றுச் சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தாத வகையில் அபிவிருத்திகளை முன்னெடுக்க வேண்டும். இதனை விடுத்து சுற்றுச் சூழலுக்கு எதிர் காலத்தில் பாதிப்பை ஏற்படுத்தும் அபிவிருத்திகள் எமக்குத் தேவையில்லை என்றும் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் என்.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

ஆசிய பசுபிக் பிராந்தியத்துக்கான அனர்த்த முகாமைத்துவ கூட்டமைப்பு பொதுசன தனியார் பங்குடமை அனர்த்தங்களுக்கு தொழில் திறனுடைய நிலைத்து நிற்ககூடிய அபிவிருத்தியை நோக்கி எனும் தொனிப்பொருளிலான சர்வதேச கருத்தரங்கு நேற்றைய தினம் யாழ்.ரில்கோ ஹோட்டலில் நடைபெற்ற போது விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலையே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார். அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்.

நாட்டில் இயற்கை அழிவுகளினால் வருடா வருடம் மக்கள் பாதிக்கப்பட்டு வருகின்றனர். குறிப்பாக மண்சரிவு மற்றும் வெள்ளப் பெருக்கு ஆகியவற்றைக் குறிப்பிடலாம். இதில் எமது மாவட்டத்தைப் பொறுத்த வரையில் வெள்ளப் பெருக்கினாலேயே வருடா வருடம் பாதிப்பு ஏற்பட்டு வருகின்றது.

இத்தகைய அனர்த்தங்களினூடாக ஏற்படுகின்ற அழிவுகள் பிரதேச மற்றும் நாட்டின் அபிவிருத்திக்கு பெரும் தடையாக இருக்கின்றன. எனவே இது போன்ற இடர்களை குறைப்பதற்கு சமூக மட்ட நடவடிக்கைகளை நாம் மேற்கொள்ள வேண்டும். இதனூடாக நாட்டு மக்களுடைய ஜீவனோபாயத்தைப் பாது காக்க வேண்டும்.

இங்கு நிலையான அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கு அரச மற்றும் தனியார் துறையின் பங்களிப்பு மிக முக்கியம். ஆனால் எமது மாவட்டத்தில் தனியார் துறையானது கடந்த கால யுத்த நிலைமைகளினால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் சகலதையும் இழந்துவிட்ட நிலையில் தனியார் துறையினர் பெரும் கஷ்ட துன்பங்களை எதிர் நோக்கி வருகின்றனர். ஆகவே தனியார் துறையினருக்கு உதவி செய்ய வேண்டும்.

அபிவிருத்திக்கு தனியார்துறை மற் றும் அரச துறையின் பங்களிப்பு அவசியமாக இருக்கின்ற அதே நேரத்தில் இந்த இரண்டு துறையினரையும் இணைத்து பொறிமுறையாகச் செயற்பட வேண்டும். அப்போதுதான் பல மிக்க அபிவிருத்தியை ஏற்படுத்த முடியும்.

மேலும் இங்கு மேற்கொள்ளப் படுகின்ற எந்தவொரு அபிவிருத்தி நடவடிக்கைகளினாலும் சுற்றுச்சூழல் பாதிக்காத வகையில் மேற்கொள்ளப்பட வேண்டும். அவ்வாறு சுற்றுச் சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தி எதிர்காலத்தில் அழிவை ஏற்படுத்தும் எந்தவொரு அபிவிருத்திகளும் எமக்குத் தேவையுமில்லை. எனவே சூழலுக்கு ஏற்படும் பாதிப்புக்களை கருத்திற் கொண்டு செயற்பட வேண்டும்.

இது போன்ற கருத்தரங்குகள் எமது மக்களுக்கு மிக அவசியம். இதனூடாகவே ஆக்கபூர்வமான பல நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும். ஆகையால் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் செயற்திட்டங்களையும் தனியார் துறையினரை ஊக்குவிக்கின்ற நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும். அத்தோடு அழிவுகள் ஏற்படாது தடுப்பதுடன் அழிவுகளிலிருந்தும் மக்களைப் பாதுகாக்கும் வகையிலுமே அனைத்துத் தரப்பினர்களும் இணைந்து செயற்பட வேண்டுமென்றும் அவர் கேட்டுக் கொண்டார். (செ-4)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



மண்ணிலும் சரி, விண்ணிலும் சரி மிக உயர்ந்த மிகவும் தெய்வீகமான ஆற்றல் புனிதமே.

உன்னதமானவர்களே விழித்தெழுங்கள். துன்பத் தீயில் உலகம் வெந்து கொண்டிருக்கின்றது. நீங்கள் தூங்கலாமா? தூங்குகின்ற தெய்வங்கள் விழித்தெழும் வரையில் உள்ளேயுள்ள தெய்வம் நமது அழைப்பிற்குச் செவி சாய்க்கும் வரையில் கூவி அழைப்போம்.

மனத்தை அடக்குவதற்கு முற்றிலும் வேண்டப்படுவது நல்லொழுக்கம். முற்றிலும் ஒழுக்கமுள்ள ஒருவன் அதற்கு மேல் எதுவும் செய்ய வேண்டியதில்லை. அவன் முக்தன்.

ஒவ்வொருவரும் இந்தத் துன்ப உலகில் அவர்களது நாட்களைக் கழித்து விடட்டும். இன்பம் என்று சொல்லப்படுவதை அனுபவித்த பிறகு உள்ளீடற்ற இந்த உலகையும் அதன் அரசாங்கம் அது இது போன்றவற்றை எல்லாம் விட்டுவிட்டு அனைவரும் இறைவனிடம் வந்து சேரட்டும்.

உனது ஆசைகள் நிறைவேறிய பிறகு இந்த மாபெரும் மோகக் கடலிலிருந்து மக்களைக் கரையேற்ற முயற்சி செய். எப்போதும் ஆன்ம ஆற்றலில் நிலைத்திரு.

வீரர்களுக்கு முக்தி எளிதாகக் கிடைக்கிறது பேடிகளுக்கு அல்ல. வீரர்களே கச்சையை வரிந்து கட்டுங்கள். மகா மோகமாகிய எதிரிகள் உங்கள் முன் உள்ளார்கள். பெருஞ் செயல்களுக்குத் தடைகள் பல என்பது உண்மைதான். என்றாலும் இறுதிவரை விடாமல் முயலுங்கள். மோகமாகிய முதலையிடம் சிக்கிய மனிதர்களைப் பாருங்கள். அந்தோ இதயத்தைப் பிளக்கவல்ல அவர்களின் சோகக் கூக்குரலைக் கேளுங்கள். முன்னேறிச் செல்லுங்கள், முன்னேறிச் செல்லுங்கள்.

மனமயக்கமும் துன்பமும் நிறைந்த சம்சார அலையில் பின்தள்ளப்படாதவனாக இருந்து ஒரு கையினால் கண்ணீரைத் துடைத்து மற்றொரு கையை நடுங்காமல் வைத்துக்கொண்டு மெலெழுவதற்கான வழியைக் காட்டுபவனே வீரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருபது-20 முரளி வெற்றிக்கிண்ணம் நாளை கோலாகலமாக ஆரம்பம்




நடப்பு வருடத்தின் முரளி வெற்றிக்கிண்ணத்துக்கான இருபது-20 தொடர் நாளை 7ஆம் திகதி தொடக்கம் 11ஆம் திகதி வரை ஆறு பிரிவுகளாக அணிகள் பிரிக்கப்பட்டு சென். பற்றிக்ஸ் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி, கிளிநொச்சி மத்திய கல்லூரி, ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயம், மாங்குளம் மகா வித்தியாலயம் ஆகிய கல்லூரிகளின் மைதானங்களில் நடைபெறவுள்ளன.

ஆண்கள் அணிகள் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இதன் படி "ஏ' பிரிவில், யாழ்ப்பாண (இணைந்த) அணி, கொழும்பு டி.எஸ். சேனநாயக்க கல்லூரி அணி, குருநாகல் மலிகதேவ கல்லூரி அணி, மொனராகலை (இணைந்த) அணி ஆகிய அணிகளும் "பி' பிரிவில், சென். ஜோன்ஸ் கல்லூரி அணி, மேல்மாகாண (இணைந்த) அணி, தெவரவெல கல்லூரி அணி, மட்டக்களப்பு மாவட்ட (இணைந்த) அணி ஆகிய அணிகளும் "சி' பிரிவில், கொழும்பு ஆனந்தாக் கல்லூரி அணி, கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட (இணைந்த) அணி, வத்தளை சென். அன்ரனிஸ் கல்லூரி அணி, சர்வதேச (இணைந்த) பாடசாலை அணி ஆகிய அணிகளும் "டி' பிரிவில், காலி றிச்மன்ட் கல்லூரி அணி, பி.டி.எஸ். குலரெத்தினாக் கல்லூரி அணி, மன்னார், வவுனியா மாவட்ட (இணைந்த) அணி, கண்டி தர்மராஜ கல்லூரி அணி ஆகிய அணிகளும் மோதவுள்ளன.

பெண்கள் அணிகள் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இதன் படி "ஏ' பிரிவில், சீனிகம பெண்கள் அணி, மாத்தளை மகளிர் அணி, நித்தமுவ மகளிர் அணி, வடக்கு-கிழக்கு (இணைந்த) மகளிர் அணி ஆகிய அணிகளும்-"பி' பிரிவில் பொலனறுவை மகளிர் அணி, சக்தி மகளிர் அணி, பதுளை மகளிர் அணி, மகளிர் பாடசாலை (இணைந்த) அணி ஆகிய அணிகளும் மோதவுள்ளன.

ஆண்கள் "ஏ' பிரிவு அணிகளுக்கான ஆட்டங்கள் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்திலும், "பி' பிரிவு அணிகளுக்கான ஆட்டங்கள் யாழ். மத்திய கல்லூரி மைதானத்திலும் "சி' பிரிவு அணிகளுக்கான ஆட்டங்கள் கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்திலும் "டி' பிரிவு அணிகளுக்கான ஆட்டங்கள் ஒட்டுசுட்டான் மகா வித்தியாலய மைதானத்திலும் இடம் பெறவுள்ளன. பெண்கள் பிரிவில் அனைத்து ஆட்டங்களும் ஒட்டுசுட்டான் மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளன. (க)



*2015 தேசிய ரீதியிலான உடற்பயிற்சிப் போட்டியில் ஊர்காவற்றுறை சென்.அன்ரனிஸ் கல்லூரி முதலாமிடத்தினைப் பெற்று சம்பியன் பட்டத்தினை பெற்றுக்கொண்டது. அவ் அணியினரை படத்தில் காணலாம்.*

## ஸ்ரான்லியை வென்றது ஸ்கந்தவரோதயா கல்லூரி

யாழ். மாவட்டப் பாடசாலைகளின் துடுப்பாட்டச் சங்கம் 13வயதுக்கு உட்பட்ட ஆண்கள் பிரிவினருக்கிடையில் நடத்தும் துடுப்பாட்டத் தொடரில் (டெஸ்ட்) இடம் பெற்ற ஆட்டமொன்றில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி, ஸ்ரான்லிக் கல்லூரி அணியை இன்னிங்ஸ் மற்றும் 138 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்ரான்லிக் கல்லூரி அணி சகல இலக்குகளையும் இழந்து 27 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது. அதிக பட்சமாக விதுசன் 12 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் ஸ்ரான்லிக் கல்லூரி அணி சார்பில் றெக்சன், கஜதீபன் இருவரும் தலா 5 இலக்குகளை வீழ்த்தினர்.

முதலாவது இன்னிங்சுக்காக பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஸ்கத்தவரோதயக் கல்லூரி அணி 189-5 என்ற நிலையில் இருந்த பொழுது ஆட்டத்தை இடைநிறுத்திக் கொண்டது. அதிகபட்சமாக றெக்சன் ஆட்டமிழக்காமல் 53 ஓட்டங்களையும், தனுன் 50 ஓட்டங்களையும், விதுன் 38, ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் ஸ்ரான்லிக் கல்லூரி அணி சார்பில் தனுன 3 இலக்குகளை வீழ்த்தினார். இரண்டாவது இன்னிங்சிற்காக துடுப்பெடுத்தாடிய ஸ்ரான்லிக் கல்லூரி அணி 14 ஓட்டங்களில் சுருண்டது. பந்துவீச்சில் ஸ்கந்தவ ரோதயக் கல்லூரி சார்பில் பிரிந்தன் 4 இலக்குகளையும், கஜதீபன் 2 இலக்குகளையும், றெக்சன், கபிலதாஸ் இருவரும் தலா ஓர் இலக்கையும், வீழ்த்தினர். (க)





மாதனை வி.க நடத்திய 10 ஓவர்கள் கொண்ட சுற்றுத் தொடரில் முதலாவது போட்டியில் அரியாலை ஸ்டார். வி.கவும் இரண்டாவது போட்டியில் யாழ். 4 ஸ்டார் வி.கவும் காலிறுதியில் உடுவில் சலஞ்சர்ஸ் வி.கவும் அரையிறுதியில் பொற்பதி வி.கவும் இறுதிப்போட்டியில் வீனஸ் வி.கவும் வெற்றி பெற்று சம்பயினானது. ஞானம்ஸ் வி.கழக அணியினரை படத்தில் காணலாம்.

## உதைபந்தாட்டப் போட்டி

சிலாவத்தை இளம் பறவை விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 9 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியானது நாளை புதன் கிழமை நடைபெறவுள்ளது. இப்போட்டியில் முல்லைத்தீவு உதைபந்தாட்டச் சம்மேளனத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள 17கழகங்கள் பங்கு கொள்கின்றன. இப்போட்டியின் அரை இறுதியாட்டங்கள் எதிர்வரும் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடத்தப்படவுள்ளது இப்போட்டியானது அமரர் வேலுப்பிள்ளை சோமசுந்தரம் நினைவாக வருடா வருடம் நடத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-302)

## சிகான் பொனி றொபேர்ட் ஞாபகார்த்த கராத்தே சுற்றுப்போட்டி

### தாயும் மகனும் முதலிடம்



பருத்தித்துறை தற்காப்புக் கலையகத்தினால் (Institute of Martial Arts, Point Pedro), சிகான் பொனி றொபேரட் ஞாபகார்த்தமாக நடத்தப்படட கராத்தேப் போட்டியில் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த தாயும் மகனும்கலந்துகொண்டு முதலிடம பெற்றுள்ளனர்.

இப்போட்டிகளில் 18 வயதிற்கு மேற்பட்ட பெண்கள் பிரிவில் பங்கு பற்றிய திருமதி முரளி மாலதி காட்டா போட்டியில் முதலிடத்தையும், 7 வயதுப் பிரிவில் பங்கு பற்றிய திருமதி முரளி மாலதியின்மகனான முரளி பரிதியனும் முதலிடத்தைப் பெற்றனர்.

குறித்த போட்டிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை தும்பளையில் அமைந்துள்ள தற்காப்புக் கலையக மண்டபத்தில் இடம்பெற்றது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# University Admission Academic Year 2014/2015
# Based on the G.C.E (A/L) Examination in 2014

| Course Name | District-Z-Score | | | | |
|---|---|---|---|---|---|
| | Jaffna | Mannar | Mullaitivu | Kilinochchi | Vavuniya |
| AGRIC BUSINESS MANAGEMENT | 1.0593 | 0.6471 | 0.7812 | 0.5375 | 0.6473 |
| AGRICULTURAL RESOURCE MANAGEMENT & TECHNOLOGY | 0.9552 | 0.8763 | 0.8721 | 0.5434 | 0.7255 |
| AGRICULTURAL TECHNOLOGY & MANAGEMENT | 1.6055 | 1.2468 | 1.2669 | 1.2277 | 1.2618 |
| AGRICULTURE | 0.9653 | 0.7771 | 0.6393 | 0.9926 | 0.7536 |
| ANIMAL SCIENCE # | 0.7117 | 0.4048 | 0.0734 | -0.0965 | 0.5754 |
| ANIMAL SCIENCE & FISHERIES (UNIVERSITY OF PERADENIYA) | 1.4008 | 0.8993 | 0.4196 | 0.3840 | 0.9189 |
| APPLIED SCIENCES (PHY.SC) | 0.9303 | 0.1454 | 0.2082 | 0.4366 | 0.9595 |
| APPLIED SCIENCES (BIO.SC) | 0.8006 | 0.6913 | 0.3369 | 0.6072 | 0.9120 |
| AQUATIC RESOURCES TECHNOLOGY # | 0.7848 | 0.2727 | NQC | 0.0560 | 0.7204 |
| ARABIC LANGUAGE * | 0.4001 | 0.4001 | 0.4001 | 0.4001 | 0.4001 |
| ARCHITECTURE # | 1.1114 | 0.9044 | NQC | NQC | 1.2715 |
| ART & DESIGN # (RAMANATHAN ACADEMY OF FINE ARTS) | 0.8412 | NQC | 0.0039 | 0.3865 | 1.1674 |
| ARTS (SP) / MASS MEDIA* # | 1.2249 | 1.2249 | 1.2249 | 1.2249 | 1.2249 |
| ARTS (SAB) - A * | 1.3466 | 1.3466 | 1.3466 | 1.3466 | 1.3466 |
| ARTS (SAB) - B * | 1.4586 | 1.4586 | 1.4586 | 1.4586 | 1.4586 |
| ARTS (SP) / PERFORMING ARTS * # | 1.0613 | 1.0613 | 1.0613 | 1.0613 | 1.0613 |
| ARTS * | 1.3442 | 1.1289 | 1.2284 | 1.2122 | 1.3468 |
| AYURVEDIC MEDICINE & SURGERY | 0.8189 | 1.1367 | 0.4302 | 0.5380 | 0.8871 |
| BIOLOGICAL SCIENCE | 0.8523 | 0.6550 | 0.3710 | 0.6213 | 0.4532 |
| BUSINESS INFORMATION SYSTEMS (SPECIAL) | 1.7097 | 1.3874 | 1.4850 | 1.5109 | 1.7172 |
| COMMERCE | 1.2790 | 1.1786 | 1.1807 | 1.2708 | 1.2821 |
| COMMUNICATION STUDIES * | 1.3267 | 1.3267 | 1.3267 | 1.3267 | 1.3267 |
| COMPUTATION & MANAGEMENT | 1.5583 | 1.5164 | 1.2055 | 1.2641 | 1.6511 |
| COMPUTER SCIENCE | 1.5557 | 0.3991 | 0.3824 | 0.9744 | 1.1540 |
| COMPUTER SCIENCE & TECHNOLOGY # | 1.2639 | 0.7376 | 0.4360 | 0.7572 | 1.0003 |
| COMPUTING & INFORMATION SYSTEMS | 1.3709 | NQC | NQC | 0.7200 | 1.1193 |
| DANCE # (RAMANATHAN ACADEMY OF FINE ARTS) | 0.8393 | 0.7383 | 0.4163 | -0.3929 | 0.7181 |
| DANCE # (SWAMI VIPULANANDA INSTITUTE) | 0.7407 | 0.3340 | 0.7091 | 0.5685 | 0.6192 |
| DANCE # (UNIVERSITY OF THE VISUAL & PERFORMING ARTS) | NQC | NQC | NQC | NQC | 1.2776 |
| DENTAL SURGERY | 1.8939 | 1.4434 | 1.3937 | 1.6941 | 1.8381 |
| DESIGN # | 1.2841 | NQC | NQC | NQC | 0.9819 |
| DRAMA & THEATRE # (SWAMI VIPULANANDA INSTITUTE) | 1.1022 | 1.0675 | 0.9219 | 1.0324 | 1.0080 |
| DRAMA & THEATRE # (UNIVERSITY OF THE VISUAL & PERFORMING ARTS) | NQC | NQC | NQC | NQC | NQC |
| ENGINEERING | 1.8778 | 1.1181 | 1.0005 | 1.6012 | 1.5881 |
| ENGINEERING (EM) | 1.8525 | 0.9253 | 0.7336 | 1.3445 | 1.5452 |
| ENGINEERING (TM) | 1.8337 | 0.7509 | 0.5471 | 1.1009 | 1.4713 |
| ENTREPRENEURSHIP & MANAGEMENT # | 1.2507 | 1.0859 | NQC | 1.0716 | 1.2725 |
| ENVIRONMENTAL CONSERVATION & MANAGEMENT | 1.4362 | 1.0724 | 0.4413 | 0.5846 | 0.7899 |
| ESTATE MANAGEMENT & VALUATION | 1.4931 | 1.5410 | 1.6228 | 1.6370 | 1.6315 |
| EXPORT AGRICULTURE # | 0.8182 | 0.4383 | -0.2044 | -0.1420 | 0.2776 |
| FACILITIES MANAGEMENT | 1.4948 | 1.3172 | 1.0614 | 1.2518 | 1.6856 |
| FASHION DESIGN & PRODUCT DEVELOPMENT # | 1.1096 | NQC | NQC | NQC | NQC |
| FILM & TELEVISION STUDIES # | NQC | NQC | NQC | NQC | NQC |
| FISHERIES & MARINE SCIENCES (UNIVERSITY OF RUHUNA) | 1.1385 | 0.8471 | 0.4518 | 0.5233 | 0.5820 |
| FOOD PRODUCTION & TECHNOLOGY MANAGEMENT | 1.4571 | 0.9736 | 0.9287 | 0.7065 | 1.0436 |
| FOOD SCIENCE & NUTRITION | 1.5664 | 1.3089 | 1.0221 | 1.1744 | 1.5338 |
| FOOD SCIENCE & TECHNOLOGY | 1.7059 | 1.1778 | 1.0874 | 1.2771 | 1.1352 |
| GREEN TECHNOLOGY | 1.3249 | 1.0381 | 0.6788 | 0.3640 | 0.7439 |
| HEALTH PROMOTION | 1.2396 | 0.8970 | 0.6043 | 0.9237 | 1.0729 |
| HOSPITALITY, TOURISM AND EVENTS MANAGEMENT # (UVA WELLASSA UNIVERSITY) | 1.2662 | 1.1548 | 0.9008 | 1.1197 | 1.2351 |
| INDUSTRIAL INFORMATION TECHNOLOGY # | 1.2274 | 1.1348 | 1.0644 | -0.1659 | 1.0912 |
| INDUSTRIAL STATISTICS & MATHEMATICAL FINANCE | 1.5515 | 0.5141 | 0.4274 | 1.2765 | 1.2680 |
| INFORMATION & COMMUNICATION TECHNOLOGY # | 0.7918 | 0.0685 | NQC | NQC | 0.7717 |
| INFORMATION SYSTEMS # (UNIVERSITY OF COLOMBO SCHOOL OF COMPUTING) | 1.3968 | 1.0792 | NQC | NQC | 0.6408 |
| INFORMATION TECHNOLOGY (UNIVERSITY OF MORATUWA) | 1.7106 | 1.1631 | 0.8957 | 1.3603 | 1.5801 |
| INFORMATION TECHNOLOGY & MANAGEMENT | 1.7551 | 1.4844 | 0.9968 | 1.2220 | 1.8089 |
| ISLAMIC STUDIES * | 1.1489 | 1.1489 | 1.1489 | 1.1489 | 1.1489 |
| LANDSCAPE ARCHITECTURE # | 0.3784 | NQC | NQC | NQC | NQC |
| LAW | 1.7935 | 1.9446 | 1.4589 | 1.6284 | 1.6254 |
| MANAGEMENT | 1.3459 | 1.2036 | 1.1924 | 1.2874 | 1.2965 |
| MANAGEMENT & INFORMATION TECHNOLOGY # (UNIVERSITY OF KELANIYA) | 1.5956 | 0.8031 | NQC | NQC | 1.3182 |
| MANAGEMENT & INFORMATION TECHNOLOGY (SEUSL) | 1.5279 | 1.4343 | 1.3167 | 1.2047 | 1.3600 |
| MANAGEMENT STUDIES (TV) - A | 1.3159 | 1.1757 | 1.1702 | 1.2656 | 1.3975 |
| MANAGEMENT STUDIES (TV) - B | 1.3389 | 1.1574 | 1.1938 | 1.2133 | 1.5325 |
| MEDICAL LABORATORY SCIENCES | 1.6926 | 1.3028 | 1.2916 | 1.3571 | 1.5806 |
| MEDICINE | 1.9096 | 1.5124 | 1.4961 | 1.7227 | 1.8603 |
| MINERAL RESOURCES & TECHNOLOGY # | 0.8506 | 0.2284 | NQC | NQC | 0.7596 |
| MOLECULAR BIOLOGY & BIOCHEMISTRY | 1.8482 | 1.4153 | 1.1223 | 1.5299 | 1.6677 |
| MUSIC # (SWAMI VIPULANANDA INSTITUTE) | 0.8074 | 0.6685 | 0.8794 | 0.8895 | 0.9408 |
| MUSIC # (UNIVERSITY OF THE VISUAL & PERFORMING ARTS) | NQC | NQC | NQC | NQC | NQC |
| MUSIC # (RAMANATHAN ACADEMY OF FINE ARTS) | 0.4067 | 0.2038 | 0.4719 | 1.0170 | -0.1152 |
| NURSING | 1.1283 | 1.0052 | 0.9162 | 0.9563 | 1.0080 |
| PALM & LATEX TECHNOLOGY AND VALUE ADDITION # | 0.6675 | -0.1208 | NQC | NQC | 0.2388 |
| PEACE & CONFLICT RESOLUTION * | 1.7037 | 1.7037 | 1.7037 | 1.7037 | 1.7037 |
| PHARMACY | 1.6350 | 1.1038 | 1.0877 | 1.4569 | 1.6202 |
| PHYSICAL EDUCATION # | 0.8571 | NQC | NQC | NQC | 0.5899 |
| PHYSICAL SCIENCE | 0.9732 | 0.1039 | 0.0110 | 0.4413 | 0.6804 |
| PHYSIOTHERAPY | 1.8037 | 1.4414 | 1.3935 | 1.5901 | 1.6954 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*See page 4......*

## விவசாய நிலத்தில் ஓர் அங்கு...

வில் ஜனாதிபதி தொடர்ந்தும் உரையாற்றுகையில், இலங்கையில் வறுமையை ஒழிப்பதற்கும், போஷாக்கு மட்டத்தை அதிகரிப்பதற்கும், உள்நாட்டு உற்பத்திகளை ஊக்குவிப்பதற்குமாகவே இந்த வேலைத் திட்டத்தை நாங்கள் தொடங்கியிருக்கின்றோம்.

சமகாலத்தில் இலங்கையில் உற்பத்தி செய்யக்கூடிய பல உணவுப் பொருட்களை நாம் வெளிநாடுகளிடமிருந்து, இறக்குமதி செய்து கொண்டிருக்கின்றோம். குறிப்பாக 2004-ம் ஆண்டு நாம் உள்நாட்டில் உற்பத்தி செய்யக்கூடிய உணவுப் பொருட்களை 6 ஆயிரம் கோடி ரூபாய் பணத்துக்கு இறக்குமதி செய்திருக்கின்றோம்.

இதனை விட நாங்கள் பயன்படுத்திக் கொண்டிருக்கும் மிளகாயில் 80வீதம் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

இதனை விட சோயா, கௌப்பி, பயறு உள்ளிட்டவற்றையும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்து கொண்டிருக்கின்றோம்.

இதனால் விவசாயிகள் தொடர்ந்தும் வறுமை நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். மேலும் 50வீதமான மக்கள் போஷாக்கான உணவு கிடைக்காமல் இருக்கின்றாரகள்.

இலங்கையில் 23 வீதமான மக்கள் போஷாக்கு குறைபாட்டினால் உண்டாகும் நோய்களுக்குள்ளாகியிருக்கின்றார்கள்.

எனவே உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்கவேண்டிய தேவையுள்ளது. இதற்கமைய அடுத்து வரும் 3வருடங்களில் உள்நாட்டு உற்பத்தியை உயர் மட்டத்துக்கு கொண்டுவரவேண்டும்.

விவசாயத்திற்கான நிலம் ஒரு அங்குலம் கூட செய்கை பண்ணப்படாமல் இருக்க முடியாது. அரசாங்க காணிகளாக இருந்தால் அவை தொடர்பில் காணிக்குரிய திணைக்களம் அல்லது அமைச்சிடம் அரசாங்கம் இது குறித்துக் கேள்வி எழுப்பும்.

இதேபோன்று தனியார் காணியாக இருந்தால் அரசாங்கம் அதனைப் பெற்று, செய்கை பண்ணும் நிலை உருவாக்கப்படும். மேலும் முதலமைச்சர் வரவேற்புரை நிகழத்தும்போது பல விடயங்களை சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

எம்மை பொறுத்தவரையில் இலங்கையில் வாழும் அனைத்து இன மக்களும் சமவுரிமையுடன் வாழவேண்டும்.

இந்நிலையினை உருவாக்குவதற்கு ஆக்கபூர்வமான பேச்சுக்கள், அவசியமாகின்றது. எனவே அவ்வாறான ஆக்கபூர்வமான பேச்சுக்களுக்கு நாங்கள் அழைப்பு விடுகின்றோம்.

மேலும் இன்றையதினம் (நேற்று) ஆரம்பித்து வைத்திருக்கின்ற இந்த திட்டத்தில் மத்திய அரசாங்கத்துக்கு மட்டுமல்ல, மாகாண அரசாங்கத்துக்கும் பங்கு இருக்கின்றது. 13ம் திருத்தச்சட்டத்தின் ஊடாக அதிகாரம் வழங்கப்பட்டிருக்கின்றது.

எனவே அடுத்துவரும் 3 வருடங்களில் இந்த திட்டத்தை வெற்றிகரமான ஒரு திட்டமாக மாற்றியமைப்பதற்கு மத்திய - மாகாண அரசாங்கங்கள் இணைந்து செயலாற்ற வேண்டும் என்பதுடன் மக்கள் தங்கள் வீடுகளில் வீட்டுத்தோட்டங்களை உருவாக்க வேண்டும்.

இது தொடர்பில் நாம், அடுத்து வரும் மாதங்களில் இலங்கையின் அனைத்து மாவட்டங்களுக்கும் சென்று அதிகாரிகள், அமைச்சர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை எடுப்பேன் என்றார். (செ-11)

## படையினர் வசமிருந்த காணி...

மக்களிடம் மீளவும் கையளிக்கப்படுகின்றது. இந்த செயற்றிட்டத்தை நாங்கள் தொடர்ந்தும் முன்னெடுப்போம்.

இதன்படி மக்களுடைய நிலங்களை மீண்டும் மக்களிடமே வழங்குவதற்கான நடவடிக்கைகளை நாங்கள் நிச்சயமாக எடுப்போம் என தெரிவித்தார்.

இதேவேளை கிளிநொச்சி நகர் பகுதியில் படையினரின் கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டிருந்த பரவிப்பாஞ்சான் பகுதியிலிருந்த 39 வீடுகளும் கிளிநொச்சி மாவட்டத்தில் விடுவிக்கப்பட்ட காணிகளுக்குள் உள்ளடங்கியிருக்கின்றது.

குறித்த காணியை விடுவிக்கக்கோரி கடந்த காலத்தில் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் மற்றும் உண்ணாவிரதப் போராட்டங்கள் முன்னர் நடத்தப்பட்டிருந்தது அததுடன் முல்லைத்தீவு மாவட்டத்தில் கேப்பாபிலவு பகுதியில் மீள்குடியேற்ற கோரிக்கை விடுக் கப்பட்ட பகுதிகள் முல்லைத்தீவு மாவட்டத்தில் விடுவிக்கப்பட்ட பகுதிக்குள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

இந்தப் பகுதியில் பொதுமககளுக்குச் சொந்தமான 1400 க்கும் மேற்பட்ட ஏக்கர் நிலப்பகுதி படையினர் கட்டுப்பாட்டின் கீழ் தொடர்ந்தும் வைக்கப்பட்டிருக்கும் நிலையில், குறித்த நிலத்துக்குச் சொந்தமான மக்கள் மாதிரி கிராமங்களில் தங்க வைக்கப்பட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

**வலம்பூரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

## இடியுடன்...

அத்துடன் இடி மின்னல்களின் தாக்கத்தில் இருந்து பொது மக்கள் தற்காத்துக் கொள்ளுமாறும் கோரப்பட்டுள்ளது. இதேவேளை, மலையகத்தில் நேற்று காலை முதல் கனமழையுடன், பனிமூட்டமும் கூடிய சீரற்ற காலநிலையே காணப்படுகின்றது.

அத்தோடு பனிமூட்டம் அதிகரித்து காணப்படுவதன் காரணமாக வாகன சாரதிகள் பல சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

பிரதான வீதிகளில் மண்சரிவு ஏற்படும் அபாயமும் உள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் எச்சரிக்கை விடுத்துள்ளது. (செ-11)

## புலமைப்பரிசில்...

ளர் நாயகம் மேலும் தெரிவித்துள்ளார்.

புலமைப்பரிசில் பரீட்சை விடைதாள்கள் திருத்தும் பணிகள் கடந்த செப்டெம்பர் மாதம் 9ஆம் திகதி தொடக்கம் 14ஆம் திகதி வரை நடைபெற்றது. இப்பணிகளில் 6256 ஆசிரியர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

இதேவேளை, நாடளாவிய ரீதியில் அமைக்கப்பட்டிருந்த 2907 பரீட்சை மத்திய நிலையங்களில் 8 லட்சத்து 40 ஆயிரத்து 926 மாணவர்கள் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-1[illegible]

## ஐ.நா. தீர்மானத்துக்கு...

நாடளாவிய ரீதியில் ஆர்ப்பாட்டங்களை முன்னெடுக்கவும் இந்தக் கட்சிகள் தீர்மானித்துள்ளன.

தேசிய சுதந்திர முன்னணி, மகஜன ஐக்கிய முன்னணி, தூய ஹெல உறுமய, ஜனநாயக இடதுசாரி முன்னணி, தேசிய விடுதலை மககள் முன்னணி, லங்கா சமசமாஜக் கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி மறறும் இலங்கை சுதந்திரக் கட்சி (அரசுக்கு எதிரான அணி) ஆகியன இணைந்தே இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக கூறப்படுகின்றது.

இதன் முதற்கட்டமாக எதிர்வரும் 14ஆம் திகதி கொழும்பில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அதிருப்திக் குழுவின் தலைவராக செயற்படும் குமார வெல்கம மற்றும் பந்துல குணவர்தன், மகஜன ஐக்கிய முன்னணியின் தலைவர் தினேஷ் குணவர்தன, தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச,

தூய ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன் பில உள்ளிட்டவர்கள் கடந்த சில தினங்களுக்கு முன்னர் கொழும்பில் கூடி ஆலோசனை நடத்தியுள்ளதாக தெரியவருகின்றது.

இதன்போதே இலங்கை தொடர்பான ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் நிறைவேற்றபட்ட தீர்மானத்துக்கு எதிராக நாடு தழுவிய ரீதியில் பல ஆர்ப்பாட்டங்களை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டதாக அறியக்கிடைக்கின்றது. (செ-11)

## இலங்கை மீதான தீர்மா...

படுகொலைசெய்யப்பட்டது போன்றவற்றுக்கான கட்டளைப்பொறுப்பை ஸ்தாபிப்பது இலகுவானதாக அமையாது எனவும் அது குறிப்பிட்டுள்ளது.

அவ் ஆசிரியர் தலையங்கத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

இலங்கை அரசு பயணிக்க வேண்டிய பாதை இலகுவானதாகயிருக்காது. நம்ப கத்தன்மைமிக்க நீதி பொறிமுறையை உருவாக்க வேண்டும், மேலும் அதற்குள் நீதிபதிகள் போன்ற வெளிநாட்டு வளங்களை மிகவும் அவதானமாக உள்வாங்க வேண்டும். பாதிக்கப்பட்ட மக்கள் தாங்களாக முன்வருவதற்கான நமபிக்கையை ஏற்படுத்தக்கூடிய விசாரணை நடைமுறையை உருவாக்கவேண்டும். பொதுமக்கள் மீதான குண்டுத் தாக்குதல் மற்றும் சரணடைந்தவர்கள் படுகொலை செய்யப்பட்டது, (குறிப்பாக அரசியல் செயற்பாட்டாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர்) போனறவற்றுக்கான கட்டளைப்பொறுப்பை தீர்மானிப்பது இலகுவானதாக அமையாது.

எனினும் இதனை உரிய முறையில் முன்னெடுக்கவேண்டும், அரசியல் தீர்வை உருவாக்குவதற்கான சவாலை விட் இது மிகவும் கடினமானது.

யுத்தகுற்றங்கள் குறித்து விசாரணைசெய்து தண்டனை வழங்குவதற்காக வெளிநாட்டு நீதிபதிகளை உள்ளடக்கிய பொறிமுறை என்பது முழுமையான சர்வதேச விசாரணையை வலியுறுத்தியவர்களுக்கு ஏமாற்றமளிக்கலாம். வேறு சிலருக்கு தீர்வுகாணப்படாமல் உள்ள பல விடயங்களுக்கு தீர்வை காண்பதற்கான கிடைத்தற் கரிய சந்தர்ப்பமாக இது காணப்படலாம். இலங்கை குறித்த தீர்மானம் நல்லிணக்கத்தையும், உண்மையை கண்டறிதலையும் ஊக்குவிக்கின்றது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு இதுவரை கிடைக்காத நீதியை வழங்கலாம், அந்த அவலங்கள் மீண்டும நிகழாமலிருப்பதை உறுதிசெய்யலாம.

இது அரசியல் தீர்வுக்கான இனனொரு வாய்ப்பை உருவாக்குகின்றது என்ற நம்பிக்கைகளின் அடிப்படையிலேயே நிறைவேற்றப்பட்டது. இந்த நம்பிக்கைகள் பொ[illegible]யாகக்கூடாது என அவ் ஆசிரியர் தலையங்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-11)

**NEW SCIENCE HALL, JAFFNA**
**CHEMISTRY DAY CLASS - 2016 A/L**

யாழ், கொழும்பு பிரபல ஆசிரியர்களால் இணைந்து கற்பிக்கப்படுகிறது.

**யாழ்ப்பாணம்**
ஆசிரியர்
க.சிவத்திரன் B.Sc (Hons)
கடந்த கால வினா விடை, அலகு ரீதியான மீட்டலுடன் நடைபெறுகிறது
Mon, Tue, Wed
Fridays 9.30-11.30
Sat & Sun 2.00 - 3.30

**கொழும்பு**
ஆசிரியர்
S.T உமாசங்கர் B.Sc (che.sp) M.Sc
மாதிரிவினா விடை, அலகு ரீதியான மீட்டலுடன் நடைபெறுகிறது
Thursdays 9.30 - 11.30

TUESDAYS EXAM 9.30 - 11.30
(1959)

குறிப்பு :Physical Chemistry theory classes
ஆரம்பம் Sat (10-10-2015) 11.45 - 1.30
Sat & Sun by K.Sivathiran

## பொலிஸ் உத்தி...

கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் உத்தியோகத்தராக பணிபுரியும் குறித்த குடும்பஸ்தர் நேற்றையதினமும் தனது பணிகளை முடித்துவிட்டு தனது வீட்டுக்கு மோட்டார் சைக்கிளில் சென்றுள்ளார். இதன் போது கோப்பாய் சந்திக்கு அருகாமையில் விபத்துக்குள்ளாகி உயிரிழந்துள்ளார்.

விபத்து அதிகரித்த வேகத்தினால் ஏற்பட்டிருக்கலாம் என கூறப்பட்ட போதிலும்விபத்துக்கான உண்மை நிலைவரம் குறித்து நேற்று இரவு வரை அறிய முடியவில்லை. சம்பவ இடத்திற்கு சென்ற கோப்பாய் பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டதோடு. விபத்துக்கான காரணம் குறித்தும் ஆராய்ந்து வருகின்றனர்.

விபத்து நடைபெற்ற இடத்திலிருந்து பொலிஸ் உத்தியோகத்தர் செலுத்தி வந்த மோட்டார் சைக்கிள் மாத்திரமே மீட்கப்பட்டதாகவும், வேறு எந்த வாகனங்களும் அவ்விடத்தில் இருந்திருக்கவில்லை எனவும் தெரிவிக்கும் கோப்பாய் பொலிசார் விபத்து மோட்டார் சைக்கிள் சறுக்கி வீழ்ந்தமையால் ஏற்பட்டிருக்கலாம் எனவும் சந்தேகம் தெரிவிக்கின்றனர். (செ-4)

**வேலையாள் தேவை**
பருத்தித்துறை பஸ் நிலையத்தில் இயங்கும் நிதர்ஷன் கிறீம் ஹவுஸ் கடைக்கு ரீ மேக்கர் தேவையாக உள்ளது
(C-2385)
தொடர்புகளுக்கு:
0776214224

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.10.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.